ஓவிய நூல்



பேராசிரியர். சி. கோவிந்தராசனார்

பதிப்பு : முதற்பதிப்பு 1982

படிகள் : 1000 பக்கம் 8 + 146

வெளியீடு : முத்துக்கோ வெளியீட்டகம்
994, அரிக்காரத்தெரு
கரந்தை - அஞ்சல்
தஞ்சாவூர் - 613 002.

நிதியுதவி : தஞ்சை, இந்திய மாநில வங்கியின்
நிதியுதவி பெற்றது
(State Bank of India)

விலை ரூ. 14 — 00

அச்சிட்டோர் : நேஷனல் பவர் பிரஸ், தஞ்சாவூர்.

42

நன்றியுரை

தமிழக வழக்கில் தொல்காப்பியம் முதலாக நிலவிவரும் இலக்கண நூல்களின் காலவளர்ச்சியில், இலக்கியங்கள் பற்பல தோன்றினும், சிற்ப ஓவியக்கலைகட்கு நூல்கள் தமிழில் தோன்ற வில்லை. ஓவியக்கலைக்குரிய இவ்விலக்கணநூல் தமிழ்த் தாய்க்குரிய புதிய அணியாகவும் கலையிலக்கண முதல்நூலாகவும் அமைந்துள்ளது.

இந்நூல் அச்சாவதற்கு அனைத்துதவிகளும் செய்த அன்பு நிறைந்த பெருந்தகை, தஞ்சை, இந்திய மாநில வங்கியின் மேலாண்மையாளர் தமிழ்த்திரு ச. முத்தையன் அவர்கட்கு முதற்கண் அன்பு நிறைந்த நன்றியுரித்தாகும்.

நூலினை இயன்ற அளவில் அச்சியற்றித்தந்த அன்பர் தஞ்சை, நேஷனல் பவர் அச்சக உரிமையாளர் திரு. அ. இராமசாமி அவர்கட்கு நன்றியுரித்தாகும்.

இக்கலையிலக்கணநூல் தமிழ்வழக்கில் விளக்கம் பெறுதற்குத் தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும், பாடநூல் நிறுவனங்களும், நூலக அமைப்புகளும், கல்விக்குழுக்களும், தமிழ்ப்பெருமக்களும் மனமுவந்து ஆதரவு செய்துதவப் பணிவுடன் வேண்டுகிறேன்.

கோ. தெய்வநாயகம்.

பொருளடக்கம்

சிறப்புப் பாயிரம்

பேராசிரியர். க. வெள்ளைவாரணனார்,
தலைவர், இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

நாவலந் தீவின் நற்றமிழ் வரைப்பிற்
பாவை முதலாப் பல்வே றுருவின்
மேவிய படிமம் விருப்புடன் நோக்கிப்
பண்டையோர் தீட்டிய பன்னிற வகையிற்
கண்ணு ளாளர் கவின்பெறப் புனைந்த
வண்ணத் தியல்பு நுண்ணிதி னாய்ந்தே
இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பும்
நலத்தகு முறையின் நயமுறப் பலவிதி
சொலத்தகு மரபின் தொகுத்துணர் முறையின்
பாவலர் வியக்க நூற்பா யாப்பின்
ஓவிய நூலினை உவப்புடன் இயற்றினன்
செந்தமி ழியற்கை தேர்ந்துணர் புலவன்
தொல்பொரு ளாய்வு கல்லெழுத் தமைதி
சிற்பம் ஓவியம் பொற்புறப் பயின்றோன்
சேர மன்னன் செங்குட் டுவன்தான்
வடபே ரிமயத்துக் கற்கால் கொண்டு
கங்கைப் பேரியாற்று நீர்ப்படை செய்து


பொங்குபே ருவகையிற் பொலியச் செய்த
கற்புடை நல்லாள் கண்ணகி தனக்காம்
பத்தினிக் கோட்ட மிதுவெனக் காட்டிய
வித்தகன் தமிழகம் வீறுபெற்றொளிர
இடைவிடா துழைக்கும் ஏந்தல்; இந்நாள்
செந்தமிழ் மதுரையில் திகழ்காம ராசர்
பல்கலைக் கழகத் தமிழியற் புலத்திற்
கல்லெழுத் தாயும் நல்லியற் புலவன்
கோவிந்த ராசன் இவனென
நாவலர் வாழ்த்தும் நலம்வாய்ந் தோனே.



நூற்சிறப்புப் பாயிரம்

நலமார் குடந்தை நகரில் விளங்கிய
வணிகர் சின்னையன் அமிர்தம் வாழ்வின்
பயனெனத் தோன்றிப் பாங்குடன் வளர்ந்தே
உளமலி கல்வியும் ஒருங்கே கற்றபின்
கரந்தைப் பதியில் கருதிய தமிழில்
புலமைக் குன்றெனப் பொலிந்து விளங்கிய
நல்லரு ளாசான் சைவநற் செல்வன்
வெள்ளை வாரணம் தன்னருள் தன்னால்
செந்தமிழ்க் கடலில் திளைத்தே பட்டமும்
பெற்றே சிறந்து பேரா சிரியனாம்
ஓவியக் கலையினும் ஒருதனிப் புலமை
மேவிடப் பெற்றே மிகுந்த பற்றுடன்
கற்களில் முன்னோர் கருத்துடன் பொறித்த
சொற்பதங் கண்டு துகளறத் தெளிந்து
நற்பொருள் ஆய்ந்து நயம்பல விளக்கி
சிற்பக் கலையுடன் சேர்தொல் பொருள்தரும்
அந்தமில் தமிழக வரலா றெனுமாழ்
கடலில் மூழ்கியே கருத்துடன் தேர்ந்து
முத்தும் மணியும் முதிர்ந்த பவழமும்
எடுத்தளிப் பதைப்போல் ஏற்புடன் புதுமைகள்
பலப்பல கண்டு பகர்ந்தனன் ; அவற்றுள்
மேலை மலைமேல் மிளிரும் கானவில்
கண்ணகிக் கோட்டம் கண்டது மொன்றாம்

இத்தரை வுவப்ப இயலிசை நாடகத்
தமிழ்த்தாய்க் கமைந்த தரமிகு அணிகளுள்
கலையணி யொன்றே காணற் கில்லையால்
என்றறி குறையும் இனிதே நீங்கிட
மேவிய பதினோ ரியல்கொள் பனுவலாம்
பாவியல் மணியொளிப் பதக்கம் சிறக்கவே
ஓவியக் கலைநூல் உரைத்தனன்
மேலெனத் தமிழகம் மேவிடற் பொருட்டே.



ஓவிய நூல்

கலையிலக்கணம் - உரை விளக்கங்களுடன்



ஆசிரியர்

ஓவியப்புலவர், கல்வெட்டுக் கலைஞர்,
தமிழகத் தொல்பொருள் வரலாற்று அறிஞர்,
கரந்தைப் பேராசிரியர்

சி. கோவிந்தராசனார்

காப்புரை

அகர முதல வெழுத்தெலாம் கண்ட
அறிவனை வணங்கி ஆக்குவன் நூலே.

மதிபெறு ஓவியக் கலைபெறும் நூலினைப்
பதினோ ரியலாற் பகர்ந்தனன் நன்றே.

முன்னைய செந்நூல் முதநூ லாகக்
கொண்டெழு மிந்நூல் கொள்கையின் வழித்தாம்.

நிலைபெறு மிலக்கணம் நிகழ்த்திய வோவியக்
கலைபெறு மிந்நூல் காப்பது மரபாம்.

பாயிரம்

பாயிரம் பனுவற்கு நுழைவாயிலென நுண்மாண்புலத்தோர் தெள்ளிதின் உரைத்தாங்கு இப்பனுவல் நான்கும் பாயிரம் பெற்றதாம். இப்பாயிரம் காப்புமுதலாகக் கருதிய முறையொடு வழியும் பயனும் வரைந்து கூறிற்றாம்.

காப்புரை: தமிழ்மொழிக்குரிய அகர முதலாய எழுத்துக்களை யெல்லாம் வரிவடிவில் ஆக்கித்தந்த வாலறிவனாகிய கடவுளை நினைந்து வணங்கி, ஓவியக்கலை நூலினை உருவாக்குகிறேன் என்பதாம்.

தொடங்கும் நூல் செவ்வன் நிகழ்வுறுவான் வேண்டி கடவுள் வாழ்த்துக் கூறியதாம்.

நூன்முறை: அறிவியற்றுறைநெறியாம் ஓவியக்கலைக்கு இலக்கணமாமிந்நூலினைப் பதினோரியலாற்றெளிவுடன் கூறினன்.

நூல் வழி: செந்தமிழ், சங்கமேறிய காலத்து நிலவிய ஓவியச் செந்நூல், மயக்கச் செய்கையால் வழக்கொழிந்ததாயினும் அந்நூலினையே முதனூலாகக்கொள்ளும் கொள்கை வழியே இந்நூல் வழிநூலாயமைந்ததாம்.

நூற் பயன்: மொழிவழக்கில் நிலைபெறுதற்கமைந்தவிலக்கணம் கூறிய விவ்வோவியக்கலைநூலானமைந்த பயன் யாதோவெனின் தமிழகத்து விளங்கியவோவியக் கலைக்கமைந்த மரபினைக்காப்ப தொன்றே கருதிய தென்பதாம்.

பொதுப்பாயிரம்

பாயிரம் உரைத்துழி. பணிவியல்முதலாகக்கலையறிஞன் பண்பியல் முதலியனவும் புகலுதற்கமைந்த நெறியான் பொதுப்பாயிரம் பொருந்தியதாம்,

அவையடக்கம்

1. எண்ணு மெழுத்து மேற்புற வெழுதுநற்
கண்ணெழுத் தாளரின் கைத்திறங் காண்டலால்
பண்ணி யெழுதிடும் சிறுவனின் பான்மையை
நண்ணிப் பிழையென நகைத்தற் காகுமோ!

2. தொன்முதிர் கடலிடைச் செல்கலம் கண்டுமே
தோண்டிய தடத்தினிற் மடற்கலம் செலுத்திடும்
சிறுவனின் செய்கையிற் றேர்ந்தநற் குற்றமும்
பெறுமெனக் குறிப்பரோ பெரியோர் என்பரால்.

3. செந்தமிழ் ஞாலம் செருக்கிய கலையெலாம்
வந்தவர் மயக்கி வழங்கிய கொள்கையிற்
சிந்திய வோவியம் சிறப்ப வுரைத்தலால்
நந்தமிழ் நாடடினர் நற்றிறம் போற்றுவர்.

4. வையக வழக்கில் வளர்ந்து மயங்கிய
தெய்வநல் லோவியச் செந்நூல் வழிநல
மெய்தவே இந்நூ லெழுந்தது என்பதால்
மெய்கொள் கேள்வியர் மேலெனக் கொள்வரால்.

இ-ள் :

1. எண்ணும் எழுத்தும் இயல்புடனமைந்த செந்தமிழின் தொன்மை வரிவடிவாகிய வட்டெழுத்தாலெழுதும் கண்ணெழுத்தாளரின் கைத்திறனைக் கண்ட சிறானொருவன், ஆசைவழித் தானும் அச்செயலைப் பின்பற்றி அவ்வாறே ஏடமைத்து எழுதிப் பயிலும் முயற்சியினைக் கண்ட சான்றோர், ஊக்குவிப்பதன்றி அச்செய்கையிற் பொருந்திய குறையுளதென்று நகைத்திடுத லில்லை என்பதாம்.

2. பழமைமிகுந்த கடலிலேசெல்லும் மரக்கலத்தின் செலவினைக் கண்ட சிறுவன், தன்முயற்சியான் தரையிடத்தகழ்ந்த சிறிய நீர்த்தடத்தில், தாழைமடலே கலமாகக்கொண்டு செலுத்தி மகிழும் செய்கையைக் கண்ட அறிவியற்பெரியோர், அச்செயல் குற்றமுடைத்தென்று குறித்துக்காட்டாது நற்றிறம் போற்றி மகிழ்வர் என்பதாம்.

3. செந்தமிழுலகில் சிறந்தோங்கிய கலையெலாம் புலம்பெயர்ந்தார் வகைபெற நிலைத்து, வழிமுறையறிந்து, தமதென மயக்கி ஆக்கிய பொய்யான திறன்கட்கெல்லாம் எஞ்சிப்பிழைத்து எழிலுடன் நிற்கும் தமிழகவோவியத்திறனுணர்ந்து, நூல் வடிவில் இலக்கணமுரைத்தலால், தமிழகத்தார் இதன் நற் பயனைப் போற்றுவர் என்பதாம்.

4. கடல்கொண்ட தமிழ்நிலத்து நிலவி, கரைகண்ட தமிழக வழக்கில் வளர்ந்து, காலத்தின் கோலத்தால் மயங்கி. இலக்கியக் கடலில் ஆழ்ந்து முத்தென முகங்காட்டும் தெய்வத்தமிழால் உருவாக்கிய ஓவியச் செந்நூல் எனும் கலையிலக்கண நூலின் வழிநூலாகவிந்நூல் தமிழ் வழக்கின் நின்றுவிளங்குதலின் சிறப்பினையுணர்ந்த சான்றோர் மொழிக்கு அணியாக முகிழ்த்தமை கொண்டு போற்றுவர் என்பதாம்.

இதனான் புலனெறிச்சான்றோர் இந்நூலினைப் போற்றுவ ரென்பதாம். இந்நான்கு பாட்டானும் அவையடக்கம் கூறிய தாயிற்று.

கண்ணுள் வினைஞன்

5\. *மலைவிலாச் சிறப்பொடு மாண்பொருள் துலங்கக்*
கலையெனும் துறைவழி கற்பனை நிறைத்து,
நிலைபெற வெழுதும் ஓவத் தொழில்பெறு
வித்தக னவனே கண்ணுள் வினைஞன்.

இதனான் கண்ணுள் வினைஞனெனும் ஓவியக்கலைஞனின் இயல்பு கூறிற்றாம்.

மனத்தகத்தே மாறுபடாத தேர்ச்சியுடன், கண்ணாற் கண்ட பொருள்திறன் படத்தில் தோன்றுமாறு, கலைத்துறைக்கமைந்த கற்பனையெல்லாம் உருவிற்கமைந்த ஒப்பனையாக்கிப் புணர்த்தி யெழுதும் ஓவியத்துணர்வினைக் கருவிலே பெற்றவனும், கையாற் படைத்தற் றொழிலையுடையவனுமாகிய திறனாளனைக் கண்ணுள் வினைஞன் என்று காட்டுதல் மரபாம். என்னை ?

" எண்வகைச் செய்தியும் உவமம் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞர் "

என்னும் மதுரைக்காஞ்சியிலமைந்த பகுதிக்கு விளக்கம் கூறிய நச்சினார்க்கினியர்,

" கூரிய அறிவுடையார்க்கன்றி ஓவியத்தொழில் இயற்ற வாராமையின் நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைஞர் என்றார்"

" நுழைந்த நோக்காவது, பொருளின் இயல்புகளை நுணுகிக் காணும் நோக்கு"

" நோக்கினார் கண்ணுள் தம்தொழிலை நிறுத்துதலின் கண்ணுள் வினைஞர் என்றார் " என்பர்,

" கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும் "

(சிலம்பு. ரு : ௩0)

என்பது சிலம்பு.

இதனான், கண்ணாற்கண்டவை கையாலெழுதிக் கண்டார் கண்வழி அவர்தம் கருத்துள் நிறுத்தும் தொழில் திறம் பெற்ற கலைஞனின் இயல்பு கணித்துப் புலப்படுத்தியவாறாயிற்று.

ஓவியனிலக்கணம்

6. காட்சியும் கருத்தும் கற்பனைத் திறனமை
மாட்சியும் பெற்றொளிர் மாண்பும், மல்கிய
தோற்றம் யாவையும் தொகுத்து மனத்தே
படமா நிறுத்தும் பாங்கமைப் பயிற்சியும்,
திடபமும் நுட்பமும் தெளிந்தறி புலமையும்,
கற்றிடும் நூலறி கருத்தினை உருவா
ஆக்கும் அலகிலா ஆற்றலும், நுண்கலைத்
தேற்றமும், தெய்வக் கொள்கையும், தெளிவமை
ஓவியப் புலவனுக் குரியவை ஆகும்.

இதனான் ஓவிய ஆசிரியவிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்றாம்.

உலகில் தோற்றங்கொள்ளும் பொருள்களின் வடிவினை உள்ள வாறு காணும் மனக்காட்சியும், கண்டனவற்றைக் கருத்தில் நிறுத்தும் பயிற்சியும், கண்டதைக் கருத்தொடு புணர்த்தி அழகுடன் உருவாக்கிக்காட்டும் கற்பனைத்திறன்பெறு மேன்மையும், பொருந்திய தோற்றங்களைத் தொகுத்து நினைவில் படமாக நிறுத்தும் மனப்பயிற்சியும், கலைத்திடபமும் அறிவு நுட்பமும், தெளிவுடனமைந்த புலமையும், தாம் கற்ற நூலின் கண் பொருந்திய கருத்துக்களை உருவாக எழுதிக்காட்டும் கைத்தொழில் திறனும், நுண்கலைகளைக் கற்றுத்தேர்ந்த தெளிவும், தெய்வக் கொள்கையும் ஆகிய நற்றிறங்கள் ஓவியப் புலவனுக்கமைந்த இலக்கணமாகும்.

கலைஞனியல்பு

7. ஓவியக் கலைக்கு ஒன்றிய சிந்தனை
மேவிய கலைஞனின் வினைவழிப் படூஉம்
தாவிய கொள்கை தகவொடு இதுவென
கூறுதற் கமையா, குறிப்பொடு நிற்றலால்
ஒன்றின உணர்ந்து உளத்தொடு பயின்று
கண்ணிய கலைதனைக் காணுதல் சிறப்பாம்.

இதனான் ஓவியக்கலைஞனின் பொதுவிலக்கணம் கூறிய நெறியே அவன்பாலொன்றிய இயல்பும் ஒருவாறு இதனான் உணர்த்திற்றாம்.

ஓவியக்கலைக்கு உயிர்ப்பென ஒன்றிய சிந்தனைச் செல்வத் துளாழ்ந்த கலைஞனின் நிலைபேறில்லா நாள்வாழ்க்கைக் கமைந்த குறிக்கோளினைக் கண்டறிந்தாற்போன்று இஃது இவ்வாறாமென அளவிட்டுக்கூறுதற்கமையாது. அச்செய்கைகள் கலைஞன் புறவாழ்க்கையில் சிந்திய உலகியலாதலான், பலவின்கனியுண்பாரைப் போன்று, அவனிடத்து ஒன்றிய புறச் செயலில் நெய்யும் நீருமாக நின்று, அவன் உளத்தொடு ஒழுகியதொரு நீர்மையான். அவன் புலப்படுத்தும் கலை நுட்பங்களைக் கண்டு தேர்தலும் மகிழ்தலும் சிறப்பாகும்.

மாணாக்கரிலக்கணம்

8. ஓவியம் பயில ஒருப்படு மிளைஞர்
மேவிய கொள்கை விளம்புங் காலை
வைகறை யெழுந்து செய்வினை முடித்துப்
பொழுதொடு சென்று வழிபடல் நிறைத்துக்
கண்ணுள் வினைஞனின் கால்வழி யொழுகி
இட்ட பணியெலாம் ஏற்புடன் நிகழ்த்திச்
சுட்டிக் காட்டும் தொழிற்றிற னுணர்ந்து
வண்ணத் திறன்முறை வகைபெறக் கண்டு

நன்னிய கைவினை நயன்கொள முயன்று
சொற்பதங் காத்துத் துகளறக் கேட்டுப்
பொற்புடன் மனத்தே கற்பனை வளர்த்து
நற்பதன் காண்பது நன்மா ணாக்கரே.

இதனான் ஓவியம் பயிலும் மாணாக்கரிலக்கணம் உணர்த்திற்றாம்.

ஓவியம் பயிலுவதற்கு விருப்பொடு இயைந்த இளைஞராகிய மாணாக்கர்க்குப் பொருந்திய ஒழுக்கம் கூறுவோமாயின், பொழுது புலருமுன்னெழுந்து, காலைக்கடன்களை முடித்து, ஓவியாசிரியனை வழிபட்டு, அவன் குறிப்பின் நெறிதெரிந்து பழகி, அவனிட்டது அரும்பணியாயினும் அமைதிபெறத் திறமையுடன் செய்து, அவன் குறித்துக்காட்டும் தொழிற்றிறனறிந்து, வண்ணஞ் சேர்க்கும் வகை முறைகண்டு, இட்ட பயிற்சியினை ஏற்புடன் இயற்றி, முனைப்புச் சொல்லகற்றி, கலைத்துறை முழுதும் அவ்வக்காலுணர்த்தக் கேட்டு, அதனைக் கற்பனை வழிப்படுத்தும் பயிற்சியுடன் பயின்று, ஓவியக்கலையின் உயர்வினை உள்ளவாறு நிறைவாகக் காண்பது ஓவியம் பயிலும் நன்மாணாக்கரிலக்கணமாகும்.

மேவிய கொள்கையாவது :

கலையொன்றினைக் கற்பான்புகும் மாணாக்கன், மனத் தூய்மை, செயல் தூய்மை. நினைவாற்றல். எழுதிப்பழகும் செய்கையில் தளர்ச்சி பெறாமை, பணிவுடைமை ஆகிய நற்பண்பு களையே கொள்கையாகக் கொள்ளும் பிழையா வொழுக்கமாம்.

கால்வழி ஒழுகுதலாவது :

கலையாசிரியனின் வாழ்க்கை. அருமையும் பெருமையும் உடைத்தேனும், மானுட மனச்செயலென்று உலகியற்கு ஒன்றித்துக்கூறப்பெறும் செயல்களுள் சில அவனிடத்து ஒரொருகால் நிகழ்வதேனும், அவை ஞான நெறிப்பட்டார் தன்னெஞ்சறியாது நிகழ்த்தும் தத்துவக்கோட்பட்டாங்கு நிகழ்வதால், அச்செயல்களை மனத்தகத்து நிறுத்தாது, அவனது உயிர்ப்பாகும் கலைத்திறனெலாம் நுண்ணிதினுணர்ந்து பின்பற்றலாகும்.


நற்பதனாவது :

தாம் கற்றவளவிற்குப் பொருந்திய கலையறிவிற்றேர்ந்து தெளிதலாகிய நற்றிறனாம்.



பிறப்பியல்

1



நூல்

க. பிறப்பியல்

இவ்வியலான் யாதுரைக்கப்பெற்றதெனின், ஓவியமெனும் எழுத்துக்கலையின் பிறப்புத் திறனனைத்தும் உணர்த்தப்பெற்றதாம்.

எழுத்தின் தோற்றம்

1. *வினையின் நீங்கி விளங்கிய அறிவன்*
எண்ண அளவில் மாந்தர் எழுப்பிய
ஒலிநிலை வளிக்கு ஒன்றிய வடிவினை
வழக்குடன் தெளிந்து வரைந்தது எழுத்தாம்.

எ-ன் :- எழுத்தென்பது தோன்றிய வரலாறு கூறிற்றாம்.

பிறப்பிறப்பாகிய பழவினையின் நீங்கிய அறிவனாகிய இறையனாரால், மக்கள் தமது எண்ணத்தின் உருவாக, உயிர்ப்பின் முயற்சியாக, பிறர்க்குக் காட்டிய ஒலிநிலையில் உருவாகி நின்ற வளித்திறனாம் மொழிக்கு, நுண்ணிதாக ஒன்றி நின்ற நாத வடிவினை ஞானத்தானுணர்ந்து அவ்வடிவினைப் பிறப்பியலாம் வழக்குடன் ஆய்ந்து தெளிந்து முறைபெற வரிவடிவமாக வரைந்து காட்டியது எழுத்தாகும். 1

ஓவியத்தின் தோற்றம்

2. *ஒலிநிலை எழுத்து வரிவடி வாகிய*
முறையினில் மக்கள் முன்னிய கருத்தை
வரைவியற் றிறனால் வடிவுடன் வகுத்து
எழுதிக் காட்டவே எழுந்தது ஓவியம்.

எ-ன் :- ஓவியம் தோன்றிய வரலாறு கூறிற்றாம்.

ஒலியெழுத்திற்கு வரிவடிவுகண்ட முயற்சியைப் போன்றே, தொன்முதிர்கால மனிதன் தான் உணர்த்த விரும்பிய கருத்தை உணர்வொடு பொருந்திய முயற்சியான் உருவங்களாக எழுதிக் காட்டவே அத்தொழிற்றிறன்வழி ஓவியம் துலங்கித் தோன்றியது என்பதாம். 2

அமைப்பின் வகை

3. *காட்சி வடிவு எழிலொடு கணிப்பு*
மாட்சி தேற்றம் மன்னிய சேய்மை
அண்மை சிறுக்கம் அளவமை பெருக்கம்
எனவீ ரைவகைத் தெழுநிலம் என்ப.

எ-ன் :- ஓவியம் உருவாதற்கிடனாம் அடிப்படைக் களன்கள் உணர்த்திற்றாம்.

ஓவியம் அமைதற்கமைந்த இலக்கு, காட்சி, வடிவு, எழில், கணிப்பு, மாட்சி, தேற்றம், சேய்மை, அண்மை, சிறுக்கம், பெருக்கம் என பத்து வகையினை உடைத்தென்று கூறுவர்.

எழுநிலமென்பது எழுகின்ற நிலைப்பான இடமென்பதாம். மன்னிய சேய்மை எனச்சிறப்பித்தவதனால், தொலைக்காட்சியிற் பொருள்கள் துல்லியமாகச் செறிந்து தோன்றும் சிறப்புநிலை உணர்த்திற்று.

" இருவகை நிலத்தின் இயல்வது சுவையே " எனத் தொல்காப்பிய மெய்ப்பாட்டில் சுவை தோன்றும் இடங்களைச் சுட்டும் செயிற்றியச் சூத்திர எடுத்துக்காட்டு, ' நிலம் ' என்பதனை ' உள்ளமாகிய இடம் ' என்று குறித்துக்காட்டும் பெற்றியானே, ஈண்டு நிலமென்பது ' வரைதற் கிடனாம் களன் ' என்று பொருள் தந்து நின்றது. களமெனினும் நிலமெனினும் ஒக்கும். 3

காட்சி

4. *விண்ணும் மண்ணும் விளங்கும் பொருளெலாம்*
மனத்தில் காணும் மாட்சியே காட்சியாம்.

எ-ன்:- மனத்தகத்து நிறுத்தும் கட்புலனாம் காட்சிநிலை கூறிற்றாம்.

வானவெளி விரிப்பிடத்தும் நிலவுலகப் பரப்பிடத்தும் காட்சிக்கு விளங்குகின்ற இயற்கைப் பொருள்களின் தோற்றவடிவு நிலைகளையெல்லாம், மனிதன் கண்ணாற் கண்டு மனத்தில் கருத்தொரு உருவாக்கிக்காணும் சிறப்பியல்பு காட்சியாகும். 4



வடிவு

5. *காட்சியிற் கண்டதைக் கருத்துடன் மனத்தில்*
ஆட்சிகொள் நினைவே அரும்பிய வடிவாம்.

எ-ன்: காட்சியில் மாட்சி பெறும் வடிவு கூறிற்றாம்.

காட்சிவழிக் கொண்டனவற்றை, பொருந்திய கருத்துடன் மனத்தின் செய்கையாம் நினைவாட்சியால் வரையறை செய்து உருவாக்கிக் காணல் வடிவாகும். 5

எழில்

6. *ஆக்கிய உருவிற் கமைந்த வொப்பனை*
சேர்க்கும் திறனே சிறப்பமை எழிலாம்.

எ-ன்: உருவிற் கூட்டும் ஒப்பனைநிலை உணர்த்திற்றாம்.

உருவகப்படுத்திய வடிவிற்கு, அழகெனும் திறன் பொருந்த, ஒப்பனைவகை சேர்த்து, தோற்றப் பொலிவமைந்து விளங்குமாறு காணல் சிறப்பமைந்த எழிலாகும்.

காணல்: மனத்தின் நுண்மையால் தொழில்புனைந்து காணல் "ஓவத்தெழுதெழில் போலும்" என்பது பரிபாடல். 6



கணிப்பு

7. *இன்னதற் கிதுவே இயைந்த அளவெனத்*
திண்ணமிட் டெழுதுதல் திறமிகு கணிப்பாம்.

எ-ன்:- அளவின் குறிப்பு நுதலிற்றாம்,

இன்னபொருளளவு இன்னனவென்னும் அமைப்பினை மனத்தால் திட்பமுற அளவிட்டு, கைத்திறனால் எழுதுதல் திறன் மிகுந்த கணிப்பாகும். 7

கணிப்பு - மாற்றம் பெருத திட்ப நிலை.

மாட்சி

8. *எழுதிய காட்சிகள் இயற்கைபோ லிருத்தல்*
பழுதிலா வட்டிகைப் பாங்கின் மாட்சியாம்.

எ-ன்: ஓவத்துறையின் ஒப்புமைச் சிறப்பு கூறிற்றாம்.

எழுதப்பெறும் காட்சியில் இடம்பெறும் உருவங்கள், காண்போரின் நினைவில் நிற்கும் பொருள் ஒப்புமையுடன் மாறின்றித் தோன்றுதல், குற்றமற்ற ஓவியத்திற்கமைந்த இயல்பின் மாட்சிமையாகும்.

வட்டிகைப்பாங்கு - துகிலிகை கொண்டு எழுதும் கைத்திறன். '' ஓவவினையாளர் பாவனை நீஇ வட்டிகை வாக்கின் வண்ணக் கைவினை '' என்று சிந்தாமணியார் சிறப்புடன் காட்டுதலும்,

' வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின் ' என்று மணிமேகலையார் மாண்புடன் கூறுவதும் ஓவிய மாட்சிக்குறித்தாம். 8

தேற்றம்

9. *விரிந்த காட்சியில் செறிந்த பொருளெலாம்*
தெரிந்து எழுதுதல் தேற்றம தாகும்.

எ-ன்: ஓவிய உருவாக்கத் தெளிநிலை கூறிற்றாம்.

உலகப்பரப்பில் கருப்பொருளாய்த்தோன்றிக் காட்சிப் பொருளாக விளங்கும் காடும், கவின்பெறு மலையும், கலித்து வீழருவியும், காண்தகு வானும், வான்ஒளிர் மீனும், வடிவமைப் புள்ளும் மலிதருமாவும், பொலிவமைப் பூவும், செறிவமைப் புதரும், சகத்து வாழ் மக்களும், சார்பிலா பூதரும், இகத்தமை தேவரும் இன்னவை போன்ற பிறவும் வண்ணமுறத்தோன்றும் வடிவமைக் காட்சியை ஆராய்ந்து அமைத்தெழுதும் தெளிநிலையே தேற்றமாகும். 9

சேய்மை

10. வெளிநிலைக் காட்சியை தொலைமிகு தோற்றமாய்
எழில்பெற வெழுதின் இலக்கமை சேய்மை.

என்: தொலைக் காட்சிக் கணிப்பின் விரகு கூறிற்றாம்,

வெளியிடத்து நிலைத்து விளக்கமாகத் தோன்றும் காட்சியை தொலைநிலைக் காட்சியாகத் தொகுத்தெழுதிக்காட்டல் சேய்மை நிலை என்பதாம்.

இலக்காவது பொருந்திய வடிவுச் சுவடாம். 10

அண்மை

11. தோற்றம் தெளிவுடன் துலங்க அமைத்தல்
மாற்றமில் அனமையின் மாண்பெனக் கூறுப.

என்: அண்மையின் தெளிவு கூறிற்றாம்.

தொலைவில் காணும் பொருள்களின் தோற்றம் அருகில் காண்பபோல் அமைத்தெழுதுந்திறன், பொருள் மாற்றம் பெறாது புதுமையுடன் விளங்கும் அண்மை என்பதின் சிறப்பென அறிஞர் கூறுவர். 11



சிறுக்கம்

12\. *புல்நுனிப் பனித்துளிப் புலப்படும் காட்சிபோல்*
நுண்பொருள் காட்டுதல் நுவலும் சிறுக்கம்.

எ-ன்: ஓவியத்திற்காகும் உருவ நுண்மை உணர்த்திற்றாம்.

புல்நுனி முத்தெனப் பொருந்திய பனித்துளியில், எதிர்நிற்கும் வான்பனை எழிலுடன் காண்பபோல், நயப்பமைக் காட்சியை நுணுக்கமுடன் எழுதிக்காட்டல், புகழ்தற்கமைந்த சிறுக்கம் என்னும் செய்தொழிலாகும். 12

பெருக்கம்

13\. *குறித்த உருவை செழித்த வடிவில்*
பெருக்கிக் காட்டல் பெயரமைப் பெருக்கமாம்.

எ-ன்: உருவப் பெருக்கநிலை உணர்த்திற்றாம்.

உயிருள்ளன அல்லனவாகிய உலகியற்பொருள்களெல்லாம், அவ்வவற்றிற்கமைந்த உருவினைப்போல் பன்மடங்கு பெருகிய வடிவில் தெளிவாக எழுதிக்காட்டல் சிறப்பமைந்த பெருக்கமாகும். இவ்வளவில், அமைப்பின் விரிவு புலப்படுத்திற்றாம். குறித்தலாவது, எழுதுவதற்கு இலக்காக்கிய வடிவினைப் பேருருவாகப் புனைதல், பிறவற்றை உருக்காட்டல் முதலாயின. கலைஞன் காட்டும் வெண்ணையுண்ணும் சின்னக்கண்ணனின் ஓவக்காட்சி உவமைக் கொன்றாம். 13



கலைநிலை

14 காட்சியும் கருத்தும் கவினுற நிறைத்து
ஆட்சிசேர் கற்பனை அழகுடன் புகுத்தும்
கைத்திறன் ஓவியக் கலையெனப் பெறுமே.

எ-ன்:- ஓவியம் கலைநிலை பெறுதற்கமைந்தன கூறிற்றாம்.

காட்சிக்கிலக்கான பொருளும், கருத்தில் உருவான அதன் வடிவும், ஒன்றாகச் சேர்ந்த நிலையில் கற்பனை சேர்ந்த வொப்பனை அழகினையும் அதன்கண் கூட்டி வளர்த்தி எழுதிக் காட்டும் கைத்தொழிற்றிறனே ஓவியக்கலையெனப் பெயர் பெறும் என்பதாம்.

ஓவிய அமைப்பிற்குத் தொகுத்துச் சுட்டிய பத்திற்கும் அமைத்துக்காட்டிய நெறியான், ஓவியம் கலைநிலை பெறுமாறும் புலப்பாடுற்றதாம். 14

தெய்வம்

15. வளம்பெறு மானுட வனப்பமை வடிவினில்
நலந்தரு தெய்வக் காட்சி நயத்தலர்ம்.

எ-ன் :- தெய்வக் காட்சிக்கமைந்த கரு கூறிற்றாம்.

நிறைவான மானுட வடிவின்பால், கற்பனையழகும் புகுத்தியெழுதிய ஓவியக்காட்சியாக, நலந்தரு தெய்வ வடிவங்கள் எழுதப் பெற்றனவாம்.

இதனான், செல்வமும் கல்வியும், வெற்றியும் பிறவும் தெய்வ வடிங்களாகவெழுதப்பெற்ற திறன் உணர்த்தப்பெற்றாம்.

திருமகள், கலைமகள், கொற்றவை ஆகிய தெய்வ வடிவங்க ளுணர்த்தும். 15





படம்

15. உள்ளத் தமைந்த உருக்கொள் காட்சியை
தெள்ளிதி னெழுதத் திகழும் படமாம்.

எ-ன் :- படத்தின் பாங்கு காட்டிற்றாம்.

கருத்திற்கிலக்காகி உள்ளத்தில் உருவான காட்சியைக் கலைஞன் கற்பித்த தெளிவுடன் எழுதியமைத்தலே தோற்றம் விளங்குகின்ற படம் என்பதாம்.

காவியங்கள், இலக்கியங்கள் காட்டுகின்ற கருத்திலிருந்தும் காட்சிகளை உள்ளத்து உருவாக்கி, கிழியினும் சுவரினும் விளங்கு மாறு எழுதிக் காட்டல் படமாகும்.

"புதுவது இயன்ற மெழுகுசெய் படமிசை - வின் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து, முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய உரோகிணி" என்று படக்காட்சியாகக் காட்டும் நெடுநல்வாடைப் பகுதியானும்,

"வல்லவன் எழுதப்பெற்ற படத்திடைப்பாவை" என்ற சிந்தாமணியாரின் குறிப்பானும் படத்தின் அமைப்பியல்பு புலனாக் கிற்றாம். 16

இயல்

17\. *நகைமுத லாக நயந்த மாந்தரின்*
வகைதிரி உணர்வுடன் வளமிகு காட்சிகள்
ஏற்புற வெழுதுதல் இயலெனும் பெயர்த்து.

எ-ன் :- ஓவிய உயிர்ப்பு நிலையுணர்த்திற்றாம்.

நகைமுதலாக மக்கள்பால் பொருந்தித்தோன்றும் எண்வகை மெய்ப்பாடுகளை அவற்றின் தோற்றவுணர்வு நிலைகளில் பொருள் மிகுந்த காட்சிகளாகவும் இயற்கையொடு பொருந்தியனவாகவும் எழுதிக்காட்டல் இயல் என்னும் ஓவியத்திறனாம்.

இஃது, "எண் மெய்ப்பாட்டினுள் இரக்கம் மெய்ந்நெறீஇ ஒண்வினை ஓவியர் கண்ணிய விருத்தியுள்" என்னும் பெருங் கதைப் பகுதியானும் அறியப்பெறும். 17

சித்திரம்

18\. *ஓவியச் செந்நூல் உரைவழித் தொடர்ந்த*
கலைநிலை வகையால் கண்டது சித்திரம்.

எ-ன் :- சித்திரத்தின் பொருட்பொதுமை கூறிற்றாம்.

சங்ககால மக்கள் வழக்கொடுபயின்று தேர்ந்த ஓவியச் செந்நூல், மக்கள் உரைவழித் தொடர்ந்து கலையுருவாகப் பெருகிய வகையால், கலைஞன் சிந்தித்து வரைந்தது சித்திரம் என்று பெயர் பெற்றதாம். 18

இதுவுமது

19. அதுவே,

சுண்ணக் கலவைச் சுதைபுனை வகையால்
வண்ணக் கலைபெற வளர்ந்தது மியற்றே.

அச்சித்திரம், செங்கற்சுருவில் சுண்ணக் கலவையால் ஆசிட்டு அமைந்த சுதையுருவங்களின்மீது வடிவு புலப்பட வண்ணத்தால் வரைந்த முயற்சியின் வளர்ச்சியினாலும் அப்பெயரினைப் பெற்றது என்பதாம்.

"பத்திரமணிந்த சித்திரக்கதவு" என்று பெருங்கதை இலாவண காண்டத்துக் கூறப்பெறும் செய்தியான், மரத்தாலான வடிவங்களைச் சித்தரிக்கும் தொழில் நிலையில் வண்ணவோவியம் வரையப்பெறுதலும் பண்டைய வழக்கென்பது புலனாம்.


பத்திரம் — சித்தரிக்கப்பட்ட அழகிய உருவம்

பண்டைத் தமிழர் இட்டிகை, சுடுமண் என்றெல்லாம் குறித்தது செங்கல் என்பதாம்.

"இட்டிகை நெடுஞ்சுவர்" என்பது அகநானூறு.
"சுடுமண்ணோங்கிய நெடுநிலைமனை" என்பது மணிமேகலை.
"வெண்சுதை நல்லில்" என்பது பெருங்கதை. 19

வரைவியல்

2



உ. வரைவியல்

இவ்வியல் வரைதற்குரிய இயல்பு, அதற்சமைந்த தொழில், அதன் வளர்ச்சி, செய்கைத்திறன் ஆகியவற்றை விளக்கிற்றார்.

20. *புலம்பெறு ஓவியம் பொற்புடன் வரையும்*
இயல்பினைச் சிறிதே இயம்புவன் நன்றே.

அறிவின்திறம்பெறு ஓவியத்தினைச் சிறப்புடன் வரைதற்காகும் தொழிற்றிறம் மிகுதியாயினும், அதனியல்பினைக் குறிப்பளவில் சிறிது குறையின்றி கூறுவன் என்பதாம்.

வரைவினியல்பு

21. *கோடு வட்டு கோடி வட்டம்*
குறுக்கு குமைப்பு கோன்மிகு கோலம்
பெருக்கம் பிணைப்பு அலைப்பு எனப்பல
மாசறு வகைபெறல் வரைவின் இயல்பாம்.

எ-ன் :- வரைதலின் கருவான வடிவு சில காட்டியதாம்.

கோடு - நொடிப்பும் தறிப்பும் பெறாது சீராகச் செல்லும் கோடுகள்.

வட்டு - கீழ்நோக்கிக்குழிந்த அரைவட்டம்.

கோடி - கூரிட்ட செங்கோடு.

வட்டம் - கோலிப் பொருந்தும் குமைப்பு.

குறுக்கு - செங்கோணமிட்டு மறித்துநிற்கும் கோடுகள்.

குமைப்பு - மேல் குமிழ்ந்த அரைவட்டம்.

கோன்மிகு கோலம் - குவிநிலைசெய்து அழகிட்டுச்செல்லும் கோடு.

பெருக்கம் - மிகுத்துத்தொடரும் இணைநிலைக்கோடுகள்.

பிணைப்பு - கோடுகளின் இணைப்பு.

அலைப்பு - வளைவுகளால் வட்டித்துச்செல்லும் கோடு.

என்று கூறப்பெறும் குற்றமற்ற வகையினைப் பெறும் கோடுகளின் பலநிலைகளே, ஓவியம் வரைதற்கமைந்த கருவான அமைப்பிய லாகும்.



வரைவின் திறன்

22. *கோட்டுரு வாகக் குறித்து எழுதிக்*
காட்டிடும் கைவினை கருத்தமை வரைதல்
என்றே உரைக்கும் இயல்பிற் றென்ப.

என்: வரைதலின் இயல்பு உணர்த்திற்றாம்.

கருதிய வடிவினைக் கோட்டுருவில் பிழையாது எழுதிக் காட்டும் கலைஞனின் கைத்திறன், கருத்தமைந்த வரைதல் என்ற தொழிற்பெயரால் சுட்டிக்கூறும் இயல்பிற்றாம் என்று அறிஞர் கூறுவர். 3

கோட்டோவியம்

23. *கோட்டுரு வளர்ந்து குழைந்து நெளிந்து*
கோலமிட் டளவுடன் குறிப்பிடம் நிரப்பலின்
கோட்டோ வியமே குறித்தனர் முதற்றே.

எ-ன். - ஓவியப் புலப்பாடு உணர்த்திற்றாம்.

வரையும் முயற்சியான் முதற்கண் உருவானது கோட்டின் வளர்ச்சியினால் வரையப்பெற்ற ஓவியக் காட்சியாகும். இப்புலப்பாடு ஆசெனவும் பெயர்பெறும். 4



வண்ணக்கோட்டுரு

24. *தழீஇய கோட்டுரு தகைப்புடன் திகழ*
மரீஇய வண்ணம் வனைதலும் வரைதலாம்.

எ - ன் :- கோட்டுருவின் ஆக்கம் கூறிற்றாம்.

உருவிற்கும் ஒப்பனைக்கும் முதலாகப்பொருந்திய கோட்டுரு உயர்வுடன் தோற்றங்கொள்ள வண்ணங்களால் தொழிற்பெறுதலும் வரைதலேயாம்.

இத்தொழில்பெறு கோட்டுருவின் தோற்றத்திற்கு, கோட்டொடு இணைந்த பாங்கில் வண்ணமொன்றால் வரைந்து காட்டலும் ஓரிலக்காம். 5

புனையாவோவியம்

25. *கோட்டுரு வளவில் குறித்து வடிவினைக்*
காட்டுதல் புனையா வோவியம் என்ப.

எ - ன் :- ஒப்பனைக்கு முதலாம் ஓவியம் உணர்த்திற்றாம்.

கருதிய உருவினைக் கோட்டுருவாக நிறைவுபெறவெழுதிக் காட்டுதல் புனையாவோவியம் என்று கூறுவர்.

"மனையகம் புகுந்து மணிமேகலைதான், புனையா ஓவியம் போல் நிற்றலும்" என்பது மணிமேகலை. 6

புனையோவியம்

26\. *வனைந்த கோட்டுரு வண்ணம் திகழப்*
புனைந்தழ கூட்டல் புனையோ வியமாம்.

எ - ன் :- ஒப்பனையோவியம் குறித்ததாம்.

கோட்டுருவின் நிறைவான வடிவினை, வண்ணங்களால் புனைந்தெழுதி அதற்கமைந்த அழகினை உள்ளவாறு சேர்த்தல் புனைந்தவோவியம் என்பதாம். இயற்கைபோல், வண்ணங்களால் எழுதிப் புலப்படுத்தும் கலைத்திறன் இதன்கண் பொருந்தும்.

"படம்புனைந் தெழுதிய வடிவில் பங்கயத் தடம்பல தழீஇயது தக்கநாடு" என்று சிந்தாமணியார், குணமாலையார் இலம்பகத்துக் காட்டுவதும், சிற்றண்ணல் வாயில் அருகர் குடைவரைக்கோயில் விதானத்துத்திகழும் தாமரைப்பொய்கை வண்ணவோவியமும் புனைந்தவோவியத்தின் திறனைக்காட்டா நிற்கும். 7



புனையா ஓவியம்



புனைந்த ஓவியம்

வரைதற்குரிய இடம்

27. *நிலமெனு மிடத்தும் நிகழ்பொருள் தன்னினும்*
மனைச்சுவர்ப் படர்ப்பினும் மாண்பமை கிழியினும்
வனைநிலைத் துறைவயின் வரைதல் தோன் றுமால்.

எ - ன் :- வரைதற்கிலக்காம் இடங்களுணர்த்திற்றாம்.

நிலமெனும் கலைச்சொல் குறிக்கும் செம்மைசெய்யப்பட்ட இடங்களிலும், மக்கள் வழக்கில் திகழும் பொருள்களின் புறத்தும், இல்லங்கட்கமைந்த சுவர்ப்பரப்பிடத்தும் ஒப்பனைத் துறையின்தாக வரைதல் தொழில் நிகழும். ஆல்-அசைநிலை. 8

கோயில் ஓவியம்

28. *தெய்வக் கோட்டம் திகழ்தர வோவியம்*
மெய்வகை தோன்ற வரைதலு மியற்றே.

எ - ன் :- சிறப்பிடமொன்று நுதலிற்றாம்.

தெய்வங்கட்கமைந்த கோயில்களின் அங்கங்கட்கேற்றவாறும், உறையுமத்தெய்வத் திறன் அருள் உரு காட்டுமாறும், மக்கட்கு உண்மைநெறி புகட்டுமாறும், செவ்விய ஓவியங்கள் சுவரின் படரிடமெல்லாம் வரையப்பெறுதல் இயல்பாம்.

"நின்குன்றத்து எழுதெழில் அம்பலம் காமவேள் அன்பின் தொழில் வீற்றிருந்த ர்நக",

"இரதி காமன் இவள் இவன் எனாஅ
விரகியர் வினவ வினாவிறுப் போரும்
இந்திரன் பூசை இவளகலிகை இவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றியபடி யிதென்று ரைசெய் வோரும்
இன்ன பலபல வெழுத்து நிலைமண்டபம்"

என்பன பரிபாடல் உணர்த்தும் முருகனுறையும் பரங்குன்றத்தினும் அடிவரை நின்ற மண்டபத்தினும் எழுதப்பெற்றிருந்த ஓவியக் காட்சிகளாகும். 9

மாளிகை ஓவியம்

29. *வேந்தன் கோயில் விளங்க நற்றிறம்*
சேர்ந்த வோவியம் சிறப்புற வரைதலாம்.

எ - ன்:- தலைமை இடம் காட்டிற்றாம்.

மன்னன்வாழ் மாடப்பெருநிலைமனை அழகுடன் விளங்குமாறு மங்கலக்காட்சிகளும், இயற்கைக் காட்சிகளும், வண்ணத்திறம் சேர்ந்த ஓவியங்களாகவும் கண்டார் மயங்கும் சிறப்பமைந்த சித்திர சாலையாக விளங்கவும் வரைதல் இயல்பாகும். ஆம் என்ற உரையானே, மாளிகையின் மண்டபங்கள், மனைக்கட்டின் பகுதிகளான மனைப்புரை, வாயில், சட்டம், தூண், துலாம், வரித்திரிப்பு, கொடுங்கை, ஆகியவற்றிலெல்லாம் கொடிக்கருக்கு ஓவியம், தொடர்நிலை ஓவியம் ஆகிய வகைபெறு ஓவியங்கள் வரைதற்காகும் என்பதும், யாழக்கொடிக்கருக்கும், இணைமகரக் கொடிநிலையும் தலைவாயிலின் மேல்நிலைக்கு வரைதற்குரித்தாகும் என்பதும் உணர்த்திற்றாம்.

மன்னன் வாழும் புரிசை சூழ்ந்த பெருமனையாதலின் கோயில் எனும் பெயர் பெற்றதாம். இதனை,

"வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள்"

என்னும் சிலம்பின் வழக்குரை காதைச் செய்தியானும் அறியலாம். அரசனுறை கோயிலிடத்து ஓவியம் நிறைந்த சித்திரசாலையும் ஒருபகுதியாதல் மனைநூல் வழக்கு. இதனை "வித்திக வினைஞர் பத்தியிற் குயிற்றிய சித்திரசாலை", (பெருங்கதை-மகதகாண்டம்)

"நற்றாரக் கள்ளின் சோழன் கோயில்
புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடம்",

(புறம். 378)

"நமக்கு யாண்டு முப்பதாவது காஞ்சீபுரத்து நம்வீட்டில் உள்ளால் சித்திரமண்டபத்து ராஜேந்திரசோழ பிர்மாதி ராஜனில் இருந்து" (- முதல் இராசேந்திர சோழன் - திருவிசலூர் கல்வெட்டு)

என்பனவற்றால் அறியலாகும்.

அம்பல ஓவியம்

30. அம்பலந் தன்னில் அறிவமைக் காட்சிகள்
இம்பர் ஞாலத்து எழுதுதல் இலக்காம்.

எ-ன் :- பொதுவிடங்கள் சுட்டிற்றாம்.

வழக்குரை அம்பலம், வாதிடும் பட்டிமன்றம், ஊரம்பலம் ஆகியவற்றில் அறிவுக்குப் பொருந்திய அருள்நெறி, அறனெறிக் காட்சிகளை, மண்ணுலக மாந்தரின் நீதிக்கும், ஒழுக்கத்திற்கும், தெய்வத்திறனறிபுலத்திற்கும் உரியதாக எழுதிவைத்தல் குறிக்கோளுடைய ஓவியமாகும். "எழுதெழில் அம்பலம்", "எழுத்துநிலை மண்டபம்" என்பன பரிபாடல் குறிப்பதாம். 11

நாடக அரங்கு ஓவியம்

31. நாடக அரங்கின் நற்றிறம் விளங்க
கூடிய வோவியம் குறித்தலும் வழக்கே.

எ-ன் :- கலையிடம் குறித்ததாம்.

சிற்பநூலாசிரியர் முறைபெற வகுத்த நாடக அரங்கின் அமைப்புத்திறன் விளங்குமாறு, முறையே சிறைமுகம், உள்ளகம், மேற்கட்டு, பக்கம், தூண், முகப்பு, கஞ்சிகை ஆகிய அங்கங்களில் அவ்வவற்றிற்கமைந்ததாகப் பொருந்திய ஓவியத் திரைநிலை எழினிகள் வரைந்தமைக்கப்பெறுதல் வழக்காகும். வழக்கேயென்று

தேற்றேகாரமிட்டுச் சுட்டியவதனால் நூல் வழக்கையும், உலகியல் வழக்கையும் ஒப்பக்கொண்ட மரபுநிலை முறைமைபெற அரங்கின் ஓவியம் வரையப்பெறுதல் வேண்டுமென்பது பெற்றாம்.

எழினிகள் - வண்ணத்தால் காட்சிகளெழுதிய திரைச்சீலைகள்.

கஞ்சிகை - அடைப்புத் திரை என்பது பெருங்கதை.

"அரிதரங்கிற் செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற் பூதரையும் எய்தவெழுதி யியற்று" என்று பரதசேனாபதியாரும்,

"ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியும்
கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு"

என்று சிலம்பு - அரங்கேற்றுக்காதையுள் இளங்கோவடிகளும் விளக்கமுறக் கூறுவர். எழினிகளின் இயக்கநிலை, திறன் ஆகிய வற்றை அவ்வந்நூற்கண் உரைச்சிறப்பானுணர்க. 12

புனையியல்

3



ந. புனையியல்

இவ்வியலான், கலைஞன், எழுதிய உருவிற்கு எழிலூட்டும் முயற்சியான புனைதல் துறைக்கமைந்த விளக்கம் கூறியதாம்.

32. *மெய்வகை விளக்கும் வினையமை ஓவியக்*
கைபுனை நற்றிறம் காட்டுவன் மிகவே.

புனைதலின் திறனெலாம் கூறுவன் என்பதாம்.

கலைஞன் எழுதிய வடிவங்களின் உண்மைத் தோற்றம் மேலும் தெளிவுபெறுமாறு, அவன் உத்தியால் புனைந்தழகூட்டும் நற்றிற மான கலைநுட்பங்களை வரிவாகக் காட்டுவன். 1

புனைதற்கமைந்த குறிகள்

33. *வட்டும் கண்ணும் வடிவமைக் கோணமும்*
கட்டமும் நெளிவும் கணக்கமை புள்ளியும்
எழுத்தின் வளர்ச்சிக்கு அறிவனிட் டனவும்
பழுதிலா வோவியம் புனைதற் குரிய.

எ-ன் :- கோட்டுருவாக வரைந்த ஓவியத்தினைப் புனைந்தழ கூட்டுதற்கமைந்த நுட்பக் குறிநிலைகள் கூறிற்றாம்.

வளைவு, இணைவளைப்பு. ஆசறுதித்திருப்பு. இணைமுகச் சமன், தொடர்நிலை நெளிப்பு, திட்டமிட்ட வடிவமைப்புள்ளி. எழுத்தின் பெருக்கத்திற்கு எழுத்தாசிரியன் கற்பித்த கோடு, விலங்கு, கால், கோல், ஆகிய குறிநிலைகள் ஆகியவை ஓவியப் புனைப்பிற்கு நுட்பக்குறிகளாகுமென்பதாம்

இந்நூற்பா நுதலியவற்றுள் சில, மேலை வரைவியற் கண்ணும் காட்டியதாமென்ற வழி, கூறியது கூறலெனும் குற்றமுடைத்

தெனில், அற்றன்று இஃது ஓவியக்கலை நூலாதலின் ஆண்டுக் கூறியது வரைதற்கு ஆசாக அமைந்தன. ஈண்டு அதனை புனைந்தழகூட்டுதற்காம் திறனாயமைந்து நின்றன என்பதறிக. இதனான் புதியது புனைதற்கமைந்த நற்றிறமும் காட்டியதாம். இம்மரபு, பிறவிடத்தும் பொருந்துமாறறிக.

ஆசறுநித்திருப்பாவது செங்கோட்டின் ஒரு கோடி வளைவாகத் திருப்பங்கொளலும் கோணமாக வளர்தலும் பிறவுமாம். 2

அதன் திறம்

34. *எவ்வகைத் தோற்றமும் இயம்பிய திறனொடு*
கைவினைக் கலைஞன் கருத்துடன் புனைந்திட
மெய்வகை யோவியம் விளங்கித் தோன்றும்

எ-ன் :- புனைதற் கமைந்த நுட்பத்திறன் விளக்கிற்றாம்.

எழுதிய எத்தகைய காட்சிகளையும், மேற்கூறிய குறிகளில் இணைந்த தொகுப்பாகவும் வளைந்த இணைப்பாகவும் கலைஞன் கருத்துடன் வேண்டியாங்கு புனைந்தெழுத, உருவும் அழகும் ஒன்றிய உயிர்ப்புடன் ஓவியம் தோன்றும்.

இணைந்த தொகுப்பும் வளைந்த இணைப்பும் எழுதிய காட்சிக் கமைந்த இடவரம்பிற்கு ஏற்புடையதாகும். 3

35. *அதுவே*
ஒப்பனை மிகுந்த கற்பனை நிறைத்துச்
சிற்பியர் கையுளி செதுக்கும் கலையுமாம்.

எ-ன் :- புனைதல் திறனே சிற்பக்கலைக்கும் கற்பனையுடன் காட்டப்பெறுவதாகும் என்பதாம்.

முன்னர் உரைத்த முறையானே, தேர்ந்த கற்களின் முகப்பிடத்தே குறித்த வரி உருவின் வழியே கற்பனைத் திறனால் நிறைவடிவினைக் கண்டு, கையுளியால் செதுக்கிக் கருவுருவைக் காணும் நுண்கலையே சிற்பக்கலை என்பதுமாம். ஓவியத்திறன் களனாக சிற்பத்தொழில் நிகழ்தலான் இனம்பற்றிய கலைநிலையும் இதனான் உணர்த்திற்று. 4

மரச்சித்திரம்

36. *தேர்ந்த மரத்தில் செதுக்கும் தொழிலால்*
ஆர்ந்த உருவும் அவ்வழி என்ப.

எ-ன் :- இனம் பற்றிய மரபான் மரச்சிற்ப ஓவியம் கூறிற்றாம்.

அணுச்செறிவும் குழைவும் நிறமும் பொருந்தியதாக ஆராய்ந்து தேர்ந்தெடுத்து அளவை செய்துகொண்ட மரத்தில், உளியால் செதுக்கும் தொழிலால் கலைஞன் உருவாக்கி, அதன் மீது வண்ணத்தால் எழுதி விளங்கச் செய்யும் சித்திரமும் வரைதல் என்னும் ஓவியத்தொழில் நிலைக்குரிய களனாகுமென்பர்.

வளர்ந்து முதிர்ந்த செந்தேக்கு, செம்மாரை, தோதகத்தி, கருங்காலி, நுனாவென்னும் கனிவுடைய மரங்களைப் பழுதின்றி வெட்டி, அதன்கண் புரையும், குறையும், கணுவும், வெடிப்பும் ஆகிய குற்றங்களற்ற பகுதியை ஆராய்ந்து அறுத்தெடுத்த துண்டமே, தேர்ந்த மரமென்று சிறப்பிக்கப்பட்டது.

மரவேலைப்பாட்டின்மீது சித்திரம் எழுதப்பெறும் சிறப்பினை, "பத்திரமணிந்த சித்திரக்கதவு" என்று கொங்குவேளிர் — பெருங்கதை இலாவண காண்டத்துள் காட்டுவர். 5

வனைப்பு

37. *மனத்தில் உருவாம் மாசறு காட்சி*
மன்னிய தொழிற்பெறல் ஓவிய வனைப்பாம்.

எ-ன் :- கலைஞனுக்கமைந்த சிந்தனையுணர்வு, அவனாற் படைக்கப்பெறும் உருவத்தே புலப்பாடுறும் இயல்பும் கருவும் கூறிற்றாம்.

பொருளினும் கல்லினும் மரத்தினும் காட்சிகளை உருவாக்கத் துணிந்த கலைஞன், பல நாட்கள் சிந்தித்து காட்சியினை மனமென்னும் களத்தில் உருவாக்கி, உருவிற்கமைந்த ஒப்பனை நிலைகளைக் கற்பனையுடன் தெளிவுபெற உணர்வுடன் படைத்து நிறுத்தும் கலையின் கரு, வனைப்பு என்னும் மனத்தொழிற்கமைந்த நினைவின் ஆக்கமாகும்.

6

ஓவிய உத்திகள்

38. *ஒன்பான் விருத்தியின் பெருக்கமும், நகைமுதல்*
எண்வகைச் சுவையும் ஏற்புற நிறீஇக்
கன்னிய ஓவக் கலைவழிக் கைக்கொளும்
வண்ணத் திறன்புனை வகைநிலை யாகும்.

எ-ன் :- மனக்களத்தில் கருவான காட்சி, ஓவியச் செய்கையால் உயிர்ப்புடன் உருப்பெறுதற்கமைந்த உத்திகள் கூறிற்றாம்.

ஓவியக்கலை பெறுதற்கார் ஒன்பதுவகை வளர்த்தியின் பெருக்கமும், அதற்கேற்றவிடத்து இயையுர் எண்வகை மெய்ப்பாட்டுச் சுவைகளும், கலைஞன் தாமெழுதும் உருவிற்கியைந்த அளவில் புலப்படச் செய்து, பொருந்திய ஓவியக் கலைத்திறனால் நுண்ணிதின் எழுதுவன். அம்முறையானே வண்ணத்திறம் பெறும் வடிவங்களும் புனைதற்கமையுமென்பதாம்.

மெய்ப்பாடமைந்த ஓவியமாக

“ கூட்டினான் மணிபல தெளித்துக் கொண்டவன்
தீட்டினான் கிழிமிசைத் திலக வாணுதல்
வேட்டமால் களிற்றின்முன் வெருவி நின்றதோர்
நாட்டமும் நடுக்கமும் நங்கை வண்ணமே”.

என சீவகன் தான் காதலித்த குணமாலையை எழுதியதாகச் சிந்தாமணி காட்டும்.

சுவையாவன சிரிப்பு, அழுகை, எளிமை, வியப்பு. அச்சம், பெருமிதம், மிகுசினம், மகிழ்வு என்னும் எட்டாம்.

தொல்காப்பியர்,

" நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென
அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப" என்பர்.

மெய்ப்பாடென்பது புறத்துக்கண்டதோர் பொருள் காரணமாக, நெஞ்சின்கட்டோன்றும் விகாரம் முகத்தில் விளைவதாம்.

இதன் விருத்தியெல்லாம் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலுக்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கத்தானறிக.

" எண்மெய்ப் பாட்டினுள் இரக்கம் மெய்ந்நிறீஇ
ஒண்வினை ஓவியர் கண்ணிய விருத்தியுள்"

என்பது பெருங்கதை - உஞ்சைக்காண்டத்து நருமதை சம்பந்தப் பகுதி காட்டியதாம். 7



ஒன்பான் விருத்தி

39. *குறித்துக் காட்டல், கோட்டழ கூட்டல்,*
மிகுத்துச் சேர்த்தல், மேம்படச் செய்தல்,
மறைத்து மயக்கல், மாண்பொருள் துலக்கல்,
தொகுத்து நிறுத்தல், தொல்லியற் காட்டல்,
நிழலொளி புகுத்தல், நிலவிய வோவிய
ஒன்பான் விருத்தியின் தொகைநிலை என்ப.

எ-ன் :- ஓவியம் புனைந்தெழுதுதற்கமைந்த தந்திரவிருத்திகள் கூறியதாம்.

கலைஞன் கருதியெழுதும் உயிரின உருவின், முகத்தமை கண்ணினும் வாயினும் கருத்தமை மெய்ப்பாட்டின் தோற்றத்தினை அளவுபெற எழுதிக்காட்டல், எழுதிய வோவியத்திற்கியைந்த கோட்டினை புனைந்தழ கூட்டல், காட்சியின் தோற்றம் கவின்பெற மிகுத்து ஒப்பனையும் சேர்த்தல், எத்தகைப் பொருளையும் கற்பனைச் சிறக்கும் காட்சியாகச் செய்தல், எழுதிய வடிவின் எழுச்சியினை மென்மையாக மறைத்தும் வண்ணச் செய்கையால் வயக்கி மயக்கியும் காட்டல், அங்கங்களை வனப்புடன் விளங்கு மாறு செய்தல், கருதிய பொருளெலாம் காட்சிக்கு இலக்குற நிரல் நிறையாக நிறுத்தித் தொகுத்தெழுதுதல், பழமையின் பாங்கினைப் புதுமையொடு காட்டல், எழுதிய வடிவிற்கமைந்த எழிலமை நிழலும் ஏற்பமை ஒளியும் இலங்குமாறு புனைதல் வழிப் புலப்படுத்துதல் ஆகியவை உலகில் கலைத்துறை வழக்கான் தொடர்ந்த ஓவியக்கலையின் வளர்ச்சிக்கமைந்த ஒன்பது தந்திர விருத்தியின் தொகைநிலை என்று கலையறிவாளர் கூறுவர்,

"ஒன்பது விருத்தி நற்பதம் நுனித்த ஓவவினையாளர் பாவனை நிறீஇ, வட்டிகை வாக்கின் வண்ணக் கைவினை, கட்டளைப்பாவை" என்று, கொங்குவேளிர் பெருங்கதையுள் காட்டிச் செல்வர்.

கற்பனை

40. இல்லா தொன்றினை எழிலுரு வாக்கும்
தொல்லியல் மரபே துகடீர் கற்பனை.

என் :- சிந்தனையால் கற்பித்து புனைந்தெழுதிக்காட்டும் புதுமை நிலை கூறிற்றாம்.

உலகில் இல்லாத ஒருபொருளை, கலைஞன் அழகிய வடிவில் கற்பித்து, எழுதிக்காட்டும் புலமைவழித் தொடரும் அறிவுத்திறனே குற்றமற்ற கற்பனையாகும். குறட்பூதம், கொடுங்கையாளம், சிறகமைந்ததேவர், தெய்வப்பெண்டிர், கற்பகம், காமதேனு, மகரம் போன்றன கற்பனை விளைத்த கவின்கலைப் புதுமைகளாம். 9



தெரிபொருள்

41. உள்ளவை தன்னை ஒப்பனை நிரைத்து
தெள்ளிதின் வரைதல் தெரிபொருள் நிலையே.

என் :- உலகிற்காணும் பொருள்களை, ஒப்பனை சேர்த்து எழுதும் நுட்பம் உணர்த்திற்றாம்.

மண்ணுலகிற் காணும் மாண்பொருள்கட்கமைந்த வடிவினை, ஒப்பனை நிரப்பி ஓரழகுபெற வரைதல் ஆராய்ந்து தேர்ந்தெழுதும் பொருள்நிலையாகும். 10

இதுவுமது

42. *அதுவே*
இயற்கை மருங்கின் செயற்கையும் தோன்றும்.

எ-ன் :- இயற்கைப் பொருள்களைக் கொண்டு கற்பித்த செய்கை நிலை, அமைத்தெழுதுந்திறன் ஆயவை கூறிற்றாம்.

மேற்கூறிய பொருளமைதி, இயற்கையோடமைந்த செயற்கைக் காட்சியாகவும் அமைத்தெழுதப் பெறுதல் வழக்காம்.

அன்னத்தை அருகழைத்துத் தூதுரைக்கும் மங்கையர் காட்சியும், 'சாலேகம் சார நட' வென்று யானைக் குரைக்கும் காதற் காட்சியும் இவ்விலக்கிற்றாம். 11

கொடிக்கருக்கு

43. *இலைகொடி பூவுடன் எழுந்தும் தொடர்ந்தும்*
குலவுற வெழுதுதல் கொடிக்கருக் காகும்.

எ-ன் :- கொடி வடிவில் எழுதி இடம் நிரப்பியழகூட்டும் பொய்த் தோற்றப் பொலிவு கூறிற்றாம்.

காட்சியோவியம் எழுதப்பெறும் இடப்பரப்பின் விளிம்பிடம், வெற்றிடம், சுவர் விளிம்பு, தூண் முகப்பு, ஆகிய இடங்களில், இலையும் கொடியும் கொடியிற்பூத்த மலருமாக, மேல் வளர்ந்தும் கீழ்த்தொடர்ந்தும், வளைந்தும் நெளிந்தும் வாகுடன் இணைந்தும்

கற்பனையாகப் புனைந்தெழுதப்பெறும் ஓவியம் " கொடிக்கருக்கு " என்னும் பெயர் பெறும். இதனை, " வித்தகர் எழுதிய சித்திரக் கொடியின் - கொடியின் வகையும் " என்று பெருங்கதை - நலனா ராய்ச்சிப் பகுதிதரும் விளக்கத்தான் அறியலாகும். 12

முறையும் துறையும்

44. *எப்பொரு ளாயினும் எழிலமை வடிவில்*
அப்பொருள் விளங்க ஆக்குதல் நெறித்தே.

என்:- எழுதக் குறித்தபொருள் எத்தகையதாயினும், அப்பொருள் காட்சிக்குப் புலனாகுமாறு எழுதும் வகை முறை கூறிற்றாம்.

எத்தகைய வடிவமைந்த பொருளாயினும், அதற்கென்றமைந்த தோற்றத்தில் பிழையாது, அப்பொருட் காட்சியினைக் காண்போர் தெற்றென அறியுமாறு எழுதுதல் ஓவியம் புனையும் நெறிக்கு ஒன்றிய திறனாகும். 13

தொழிலறிதிறன்

45. *சாற்றிய தொழிலின் மாற்றிய செய்கை*
வேற்றுமை தெரிப விறல்மிகுந் தோரே.

என்:- புனைதற்கமைந்த இலக்கணவரம்பிகந்த செய்கையினை கலைவல்லான் கண்டுணருந்திறன் கூறிற்றாம்.

மேலே கூறப்பட்ட புனைதல் தொழிலுக்கமைந்த இலக்கண நெறி ஓரோவழி மாற்றம்பெற்றசெய்கையாயின், அவ்வேறுபாட்டினை கலைத்திறன் மிகுந்த ஓவியன் ஆராய்ந்து காண்பன் என்பதாம்.

"வேறுபட்ட வினை ஓவத்து" என்பது பட்டினப்பாலை 14 தரும் குறிப்பு.

செயல் நெறி

46\. *அன்ன பிறவும் தொன்னெறி பிழையாது*
உருவினும் பொருளினும் உணர்வினும் சிறந்து
வரிபுனை நிலையொடு வண்ணமும் சேர்த்து
வரையும் காலை நெறிப்பா டுடைய.

எ-ன்:- ஓவியம் புனையுங்கால் கலைஞன் கையாளும் நெறிமுறை நினைவுறுத்திற்றாம்.

மேலே சொல்லப்பட்ட புனைதல் உத்திகளையும் பிறதொழில் முறைகளையும் மரபு நெறி பிழையாமல், உருவும் அதற்கமைந்த பொருள் தன்மையும் அதற்குரிய உணர்வுத்தோற்றமும் சிறந்து விளங்குமாறு, வரிநிலை ஓவியத்தின் வளர்நிலையாக வண்ண மிட்டுச் சேர்த்து வரையும்பொழுது, இன்னதற்கிதுவென ஆராய்ந்து திட்டமுடன் எழுதி நிறைவு செய்தல் கலைத்துறைக்கமைந்த நெறி 15 முறையுடையதாகும்.

கற்பனை சேர்க்கும் இடம்

47\. *தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணி*
ஒப்பியல் வழியான் ஓவத் துறைபெறும்
அப்பன் பினவாய் அமைத்துக் காட்டும்
கைத்திறன் வேண்டின் கற்பனை கொளலாம்.

எ-ன்:- ஓவியம் புனையுங்கால், கற்பனை சேர்க்கும் நுண்மாண் நுழைபுலம் கூறிற்றாம்.

காட்சிக்குரிய கருப்பொருளும், அதற்கணியாக வெழுதிய துணைப்பொருளும் தம்முள் மாறாகாமல் இயல்பமைக்காட்சியாகத் துலங்குமாறு கலைத்துறைக்கமைந்த முறைமைகளால் வளர்த்தி எழுதி, காட்சிக்கு இனியதாகக் காட்டும் கண்ணுள் வினைஞனின் சதுரப்பாடு வேண்டின் ஏற்றவிடத்து கற்பனை வடிவும் இணைத்தெழுதலாகும்.

மலையும் அருவியும், மலர்நிறைச்சோலையும், வாள்வளர் கோளும், நீர் மலர் நிலையும், புள்ளும், மாவும், பொருந்திய நாகக் கலைஞன் வரையும் இயற்கைக் காட்சிக்குரிய கற்பனை இடம் காட்டியதாகும். 16



புதியன புகுதல்

48. *சொல்லிய வல்ல நல்லியல் வேண்டின்*
அன்னவை தோன்ற அமைத்தலும் நெறியே.

எ-ன்:- கற்பனைத் தோற்றமாக எழுதிக்காட்டும் காட்சிக்கு இலக்கணம் கூறியதாம்.

ஓவியம் புனைந்தெழுதுதற்குச் சொல்லப்பட்ட ஆட்சிகட்கு மேலான காட்சிகளைக் கலைஞன் படைத்தெழுத வேண்டின், அப் புதுமை தோன்ற கருத்துடன் கற்பனையாகவே எழுதுதலும் நெறியாகும்.

வானில் முகிலிடைத்தோன்றும் வானவர் காட்சியும், ஐந் தொழில் தத்துவம் அமைந்த ஆடவல்லான் உருவும், பிறவும் அத்திறத்தனவாம். 17



புனைதல் வித்தகம்

47. காட்சியும் தேர்ச்சியும் கருத்தொடு அனுபவ
மாட்சியும் கைத்திறன் மாண்பறக் கைக்கொளும்
சூட்சியும் நுட்பமும் தோற்றமும் தொழிலின்
ஆட்சியும் முறைபெற அமைதலே வித்தகம்.

எ-ன்:- புனைதற்காகும் தொழிற்பாடெல்லாம் துலக்கிய வழி அதன் அனுபவ முதிர்வும் கூறியதாம்.

எழுதிய காட்சியும், அதன் தெளிவும், கலைஞன் அனுபவத் தெளிவும், கைவழிப் படுத்திய திறனும், சிறப்பாகச் செயல் படுத்திய சூட்சியும், கலைநுட்பமும், கவர்ச்சிமிகு தோற்றமும், ஓவத்தொழில் வழி நிகழ்த்திய நுண்கலை ஆளுகையும், ஒருங்கே அமைந்ததாக எழுதப்படும் காட்சியே ஓவியக்கலையறிவின் தெளிவாம்.

வித்தகம்-அறிவின் தெளிவு, அனுபவ முதிர்ச்சி.

முன்னர்க் கூறியவை புனைதற்காம் உத்திகளாம்; இந்நூற்பா நிறைவாக்கும் செயற்குக் கலைஞன் கையாளும் வித்தகமாம். 18



காட்சித் திறன்

50. *காட்சி யென்பது கருதிய பொருளெலாம்*
மாட்சிபெற் றியலும் மாண்பமை தோற்றமாம்.

எ-ன்:- காட்சியாகும் ஓவியத் தோற்றத்திறன் கூறிற்றாம்.

காட்சி என்பது கலைஞன் எழுதக் கருதிய உருவெலாம் வனப்புடன் சிறந்து புலப்படும் கண்ணும் கருத்தும் பொருந்தும் கவினமைவோவியத் திறனாகும்.

முன்னர்ப் பிறப்பியலிற் காணுங்காட்சி கலைஞன் மனத்தான் வகுத்துக்காணுங் காட்சிக்கிலக்கணம். ஈண்டு சுட்டியது கைத்திறனாம் ஓவியத்திற்கமைந்த திட்பமென்பதாம். 19

தேர்ச்சித் திறன்

51. *இன்னதற் கிதுவே இயைந்த வடிவென*
மன்னிய துணிபொடு வகுப்பது தேர்ச்சியாம்.

எ-ன்:- புனைதலின் துணிபுத் தேர்ச்சி கூறியதாம்.

இன்ன காட்சிக்கு இன்னவாறமைந்த வடிவே பொருந்திய தென்று நிலைபெற்ற துணிபுடன் இயல்புற எழுதிக் காண்பது தேர்ச்சி என்னும் தெளிவாகும். 20

சூழ்ச்சித் திறன்

52. *கருத்தொடு நிலைத்துக் காட்சிக் கினித்தாய்*
உருப்பெற மயக்கி உணர்த்துதல் சூழ்ச்சியாம்.

எ-ன்:- எழுதுவோன் கையாளும் கலைநுட்ப மயக்கு கூறிற்றாம்.

காண்போரின் கருத்தொடு பொருந்தியதாக காண்பதற்கு வியப் பின்பம் பயப்பதாய், உருவங்கள் வடிவுபெற்றிருப்பனவாக, வண்ணத் தாலும் வரிபாலும் கலந்து மயக்கும் தொழிலால், பொருளும் சாயையு மாகப் புனைந்தெழுதும் கலைநுட்பம், கலைஞன் கையாளும் சூழ்சித் திறனாகும்.

மயக்கி உணர்த்துதலாவது: நிறத்திண்மையால் பொருளின் அண்மையும், அதே நிறமென்மையால் தொலைவும் காட்டுதல். தொகைநிலைக் காட்சிகளில் முன்னவை உருத்தெளிவு பெறவும், மற்றவை சாயைத் தோற்றம் பெறவும் காட்டுதல். இதற்குப் போர்க்களக்காட்சியும், செறிந்த குறிஞ்சிநிலக் காட்சியும் புல்லும் புதரும் இவைபோன்றனவும் சான்றாகும். 21



ஆட்சித் திறன்

53 *உண்மைப் பொருளென உயிரெலாம் மயங்கும்*
வண்மைய தாக வரைதல் ஆட்சியாம்.

எ-ன்:- கவர்ச்சிபெறவெழுதிய ஓவியக்காட்சிகள் உயிர்களை மயக்கும் கலையாட்சி கூறிற்றாம்.

உண்மைப்பொருள் போன்று, நிறமும், வடிவும், தோற்றமும் இயல்புடன் பொருந்துமாறு எழுதப்பெற்று, உயிரினங்கள் தத்தமது நுகரறிவிற்கேற்ற பொருட்காட்சியைக்கண்டு மயங்கிப் பொருந்தும் மாட்சியுடையதாக வரையப்பெறுந்திறலே, ஓவியக்கலையின் ஆட்சித் திறனாம்.

உயிரெலாம் என்றதால், நந்தும், எறும்பும், தும்பியும், மாவும், மக்களும் பொருந்தும். எழுதிய மலரில், அறுகால்வண்டு பொருந்தித் திகைக்கும் நிகழ்ச்சியும்,

" ஓவியப் புலவன் சால்புபெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றில்
தவிராது தடவினர் ",

என்று பொதுவம்பலத்தே ஓவியப்புலவர் எழுதிய பாவையைக் கண்டு மயங்கிக் காமுற்றுத் தடவி மகிழும் மாந்தரின் நிலையொடு மண்ணுலக மாயையின் திறனை ஒப்பிட்டுணர்த்தும் பட்டினத்தாரின் கழுமல மும்மணிக்கோவைப்பாடற்பகுதியும், கலையாட்சியின் திறனை விளக்கும். 22



இயற்கைத் திறன்

54. எழுதும் உருவிற் கியைந்த வியற்கை
பழுதிலா தமைதல் பான்மையி னுரித்தே.

எ-ன்:- இயற்கைப் பொருளும் எழுதிய பொருளும் காட்சியால் மாறுபடாதமையும் திறன் கூறிற்றாம்.

கலைஞன் கருதியெழுதும் உருவிற்குப் பொருந்திய உண்மைத் தோற்றம் மாற்றமின்றி அமைதல், தெய்வீகத்தினால் பொருந்தியமைவதென்பதாம். இதனை 'அமைச்சல்' எனக் கலைஞர் அறிமுகம் செய்வர்.

பான்மையினுரித்தே என்றமையான், ஊழானமைந்த ஒரு திறனாக,எழுதியவுருத்திறனமையும் உயரொப்பிலியல்பு நிலையுணர்த்திற்றாம். 23

மானுட வடிவின் முதன்மை

55. *வளரும் மானுட வடிவே முதலா*
உளங்கொண் டெழுதும் உருவ வகைநிலை
மூன்றெனக் காணல் முன்னிய நெறித்தே.

எ-ன் :- தேவர், நரகர் ஆகியோரின் உருவப் படைப்பிற்கமைந்த களன் கூறிற்றாம்.

மண்ணுலகில், வளர்ந்தோங்கும் மானுட மெய்யமைப்பே, தெய்வம் முதலாகிய காட்சிகட்குரிய வடிவின் தோற்றமாகத் தேர்ந்து, கனிப்பும் கற்பனையும் சேர்த்து ஓவியன் எழுதும் உருவங்களின் வகை மூன்றாகக்கொள்ளப்பெறுமென்பது புதிதல்ல. 24
பழமையாகத் தொடரும் வழிநிலையேயாம்.

56. *அவைதாம்,*
தெய்வம் மானுடம் தெரிசூ ராகும்.

எ-ன் : முன்னர்க் கூறிய தொகைக்கு விரி கூறிற்றாம்.

அவ்வுருவவகைதாம், தெய்வமென்றும், மானுடமென்றும், பூதம், ஆசுரம், தேவதை என்றும் அமைவதாகும். மானுடம் நடுவண் காட்டியதால், மானுட வடிவினையே முதலாக ஏற்ற தகுதிச் சிறப்பியல்பு சுட்டியதாம். முன்னர்க் கூறிய தெய்வம், மக்கள் வடிவில் தேவரைத் திரித்து உயர்த்திக்காட்டும். பின்னர்க் 25
கூறியது அதன் சிறப்பின்மையை உணர்த்தும்.

தெய்வம்

57. *அருள்மிகு கண்முகம் அமைதல் தெய்வமாம்.*

எ ன் : தெய்வ வடிவிற்கமைந்த சிறப்பிடங்கள் கூறிற்றாம்.

அருள் பொருந்திய கண்ணும் எழில் நிறைந்த முகமும் பொருந்த வரைதல் தெய்வ வடிவமாகும். 26



மானுடம்

58. *மனநிலை காட்டும் மதிமுகம் மானுடம்.*

எ-ன் :- மானுட வடிவிற்குரிய இயல்பு கூறிற்றாம்.

புலன்வழி நிலைமாறும் உள்ளநிலைகளைக் காட்டும் முழுமதி போன்ற முகப்பொலிவுடன் வரைதல் மானுட வடிவாம்.

சிறந்த இளமைப் பருவத்திற்கமைந்த முகப்பொலிவு கூறியதாயினும், கால வளர்ச்சியால் மாறுபடும் வடிவு வழக்கொடு பொருந்தியதாம். 27

சூர்

59. கொடுமை அச்சம் குறிப்பது சூராம்.

எ-ன்: சூர் என்னும் கணங்கட்கமைந்த உரு கூறிற்றாம்.

தோற்றத்தால் கொடுமையும், அங்கங்களால் அச்சத்தையும் குறிக்கும் பாங்கில் எழுதுதல் சூர் என்னும் கொடிய தேவதை முதலிய கணங்களாகும்.

எருமையரக்கன், இரணியன் முதலாயினார்க்கமைந்த வடிவங்களை அவர்தமையழித்த ஆற்றல்மிகு தெய்வவடிவங்களொடு ஒப்பிட்டறியுமுணர்வால் சூரெனும் சொல்லிற்கமைந்த பொருண்மை புலனாம். 28



மானுட அளவு

60. மண்ணக உயிர்களுள் மன்னிய மானுடம்
எண்சாண் உடம்பென இயம்பினர் சான்றோர்.

எ-ன்:- மானுட உடலளவின் கணிப்பு கூறிற்றாம்.

மண்ணுலகில் வாழும் உயிர்களுள் நிலைபேறில்லா வாழ்க்கை பெறினும் நிலைப்புடன் தொடரும் மரபு ஏற்றுவரும் மானுட உடலளவு, அவ்வவர்க்கமைந்த கையாலாம் சாணளவே அளவாக எட்டுச்சாணளவுடையதாகுமென்று மூதறிவாளர் தெளிவுபெறக் கூறினர்.

"எண்சாண் உடம்படியே ஏழிரண்டு வாயிலடி"

என்பர் சித்தர்.

சாணளவென்பது விரித்த கையின் நடுவிரல் நுனியும் கட்டை விரல் முனையும் எல்லையாக இடைநின்ற அளவாம்.

விரற்கடை, சாண், முழம் என்பன தமிழக வழக்கில் நின்ற நீட்டலளவைகளாகும்.

கைச்சாணளவுகொண்டு கணிப்பது, குற்றமற்ற மேலாம் மானுட வடிவிற்கமைந்த கையளவேயாமென்பது மானுடவியல் நூல் தரும், மேல், நடு, கடை ஆகிய உடற்கூறுவிளக்கத்தானறியலாகும்.

மன்னியவெனச் சிறப்பித்தவதனால், தோன்றியழியும் உயிர்கள் போலாது, கருவழித்தொடர்ந்து நிலையாமை வாழ்வியலாக, நிலைபேறு மரபியலாகத் தொடரும் மனித உயிர்களின் மேன்மை குறித்ததாம். 29

அளவும் பெருக்கமுர்

61. முகத்தள வென்பது அளவின் முதற்றே
அதன்நற் பெருக்கம் அமைந்தவெட் டளவாம்.

எ-ன் :- வடிவிற்கு அளவுநிலை குறித்ததாம்.

முகத்தின் தாழ்முகப்பெல்லையாக, உச்சிமட்டம் அளவாகப் பொருந்திய கைச்சாணளவே, எழுதும் மானுட உடலமைப்புக்குரிய முதலளவாகும். அவ்வளவினை எண்மடங்கு கொள்வதே உச்சி முதல் தாள் வரையிற் கொள்ளும் எட்டளவாகும்.

‘அளவின் முதற்றே’ என்னும் தேற்றம், பிறிதொரு அளவுகோல் வேண்டாது தத்தமது கைச்சாணளவே முகத்தின் கணிப் பளவாக நிற்பதும், அவ்வளவே, உடலின் அளவிற்குக் கருவாகி நிற்பதுமாகிய முதன்மை குறித்ததென்க.

எட்டளவிற்கமைந்த இடங்கள் : 1. முகம், 2. கழுத்தொடு புயம், 3. மார்பின் கீழ்வரைவு, 4. உந்தி, 5. குறிநிலை, 6. முன்தொடை, 7. திண்கால், 8. பாதவடி என்பனவாகும்.

இவ்வளவை, முதன்மைக்கமைந்த உடலிலக்கணமாக நூலோர் நுதலுவராகலின், கலைஞன் அமைத்துக்கொண்ட ஆறறி உடலின் அங்கங்கட்கேற்பவும், அதனை அடிப்படையாகக் கொண்டு பெருக்கியமைத்த தெய்வ வடிவங்கட்கும் மிகுதிக்குறை கண்டு தேர்ந்து கருத்துடன் கற்பித்துக்காணும் கணக்கீட்டளவையே பொருந்துமென்பது பொதுநோக்காகும். 30

உந்தியும் அரையும்

62. *முன்றள விற்காண் முன்னிய உந்தி*
அவ்வள வின்கீ ழரையெனப் பெறுமே.

எ-ன் :- உந்திக்கும் அரைக்கும் உறுப்பிடம் கூறிற்றாம்.

உச்சிமுதலாம் மூன்றாமளவில் உந்திக்கமைப்பிடம் கொள்ள லாகும். அவ்வளவின் கீழமைந்த நான்காவது அளவையிடம் அரையெனப் பெயர்பெறும்.

உந்தியென்பது கருவில் தாயுயிர் கணிப்புடன் உந்திச்சென்று உயிருட்டிய வளிப்புழையாதலின் உந்தியெனும் பெயர்பெற்றதென்க. இது வயிற்றின் நடுவண் சுழித்தமைந்திருக்கும் பகுதியாம்.

அரை என்பது உடலின் நடுவிடத்துக் கீழிடமாக அமைந்து, அவையல் கிளவியாய் தகுதிவழக்காகி குறிப்புப்பெயரான் சுட்டப் பெறும் இடமாகும்.

இடையில் ஆடையுடுத்தினான் என்பதும், அரைக்கு ஆடை கொண்டான் என்பதும் பொருள் கொள்ளும் நெறியான் வேறுபட்ட உறுப்பிடங்கட்காம் செயல்களை உணர்த்தி நிற்றல் நுண்ணிதின் அறியலாகும்.

உயிர்வளியை உதரத்தமைந்த கருவிற்குச் சுழித்துந்திய மூலவுறுப்பாதலின் 'கொப்பூழ்' எனக்காரணப்பெயர்பெற்றது.

'நீர் பெயற் சுழியி னிறைந்த கொப்பூழ்' என்பது பொருநராற்றுப்படை.

'அரவணைப்பள்ளியா னுந்தியிற் பயந்த அண்டம்' என்பர் கம்பநாடர். (ஊர்தேடு படலம்)

இவ்வுந்திப்பகுதி, அளவுடன் புடைத்தெழுந்து வளைவாக அழகுடன் அமைந்து நிற்றலே அமைதியுடைத்தென்பதனை, 'அவ் வாங்கு உந்தி' என்னும் அகநானூற்றடிகள் அறிமுகஞ் செய்யும்.

இவற்றான், ஓவியக்கலைஞன், உடலின் சிறந்த பகுதியாகும் உந்தி, அரை ஆகிய பகுதிகளை உள்ளவாறுணர்ந்தெழுதுதற்குரிய நெறி விளக்கிற்றாம். 31

இடையெனும் பெயர்

63. *நடைநிகழ் போழ்தில் புடையழ கசைக்கும்*
தொடையமை வுறுப்பிடம் இடையெனப் பெறுமே.

எ-ன் :- உடலின் இடைப்பகுதிக்கமைந்த பொதுப்பெயர் நுதலிற்று.

மானுடம் நடைபயின்று செல்லும் செலவு கொள்ளுங்காலை, தோற்றத்தால் அழகிட்டு அசைவதும், தொடையமைந்த உறுப்பு கட்குத் தொடரிடமாக அமைந்ததுமாகிய திண்ணிய பகுதியே இடையெனும் பெயர் பெற்றதாகும்.

தொடையமை உறுப்பிடம் என்பதனான், அளவு தொடுத்து வருங்காலை நான்காம் அளவிடம் என்பதும், அதுவே கூடிய உடலளவினிடைப்பகுதியாயமைதலின் சுட்டுப்பெயராகி வந்த தென்பதும் அமையும்.

புடையழகசைத்தலாவது, நாடகவழக்கில் மெய்ப்பாடு புலப்பா டுறுங்கால், பிற அங்கங்களும் அவ்வவற்றிற்கேற்ப செயற்பாடுறுஞ் செவ்வியாக்கத்துமொன்றாக,

பெருமிதம், அரசனின் களிற்றுநடையானும், காமம், மங்கையர் அன்னநடையானும், அச்சம் கள்வரின் ஒடுங்கிய பூசைநடையானும், மெய்ப்பாடுறுதலோடு, இளிவரல் முகத்ததாயினும் இருகையும் ஏந்திய பாங்கில் இணங்கி நிற்றலானும் பொருந்தித்தோன்றுதற்கு இடையே செய்கை வெளிப்பாடுறுதற்கிடமாயமைந்த நுண்மை காட்டியதாம்.

இத்தகு நுட்பங்களனைத்தும் கலைஞன் மனத்துக்கண் ணிறுத்தி மானுடவுடற்கமைந்த இடையின் எழிலார்ந்த தோற்றத்திற் கமைந்த கணிப்பினைந் திட்டமுடனெழுதவேண்டுமென்பது சுட்டியதாம். 32



இடுப்பெனும் பெயர்

64. மகவும் குடமும் புகலிட மாகத்
தகவுட னேந்துந் தன்மைய தா தலின்
இடுவுறுப் பெனவே இயம்பினர் குறித்தே.

எ-ன் :- இடுப்பெனும் பெண்மைக்காம் சிறப்புறுப்பு விளக்கிற்றாம்.

மகவும் குடமும் மாண்புடன் இட்டக்கால் இடுக்கமாக இருப்பு கொள்ளும் இயல்புடனமைந்த உறுப்பிடமாதலின் இடுவுறுப்பென்று உரைபெறக் குறித்தனர் என்பதாம்.

இறுவுறுப்பென்பதுவே காலவழக்கில் இடுப்பு என்று இடுக்கி நின்றது எனலாம்.

"புலராப் பச்சிலை இடை இடுபு தொடுத்த" (பா. 33) என்னும் புறப்பாட்டடிதரும் பொருண்மை இதற்கமைதி தருவதாகும். 33



நுசுப்பிடம்

65 இடுப்புடன் தொடர்ந்து எழிலுடன் அமைந்தெழு
மடிப்பமை இருப்பிடம் மாண்பமை நுசுப்பாம்.

எ-ன் :- நுசுப்பிற்கமைந்த உறுப்பமைதி கூறிற்றாம்.

உடுக்கைபோன்று ஒடுங்கி பெண்களுக்கழகுதரும் இடுப்பெனும் உறுப்பிடத்தினின்னும் வனப்பும் வளமையும் பெற்றதாக அமைந் தெழுந்து மடிப்புடன் தாழ்ந்து மேலானவடிவுடன் தோற்றங் கொண்டு விளங்கும் அங்கமே நுசுப்பு என்று நுவலப்பெற்றதாகும்.

இவ்வுருப்பின் வடிவமைதியினை,

'நுசுப்பின் அவ்வாங்கு உந்தி'

'வசிந்து வாங்கு நுசுப்பு' (பாடல்-383)

என்னும் புறப்பாட்டடிகள் புலப்பாடுறுத்துகின்றன.

'மாண்பமை நுசுப்பு' என்று சிறப்பித்தவதனால், பெண்மைக்கேயுரிய நுசுப்பிடத் தோற்றமும் வனப்பும் தோன்றக் கூறிய மாண்பினால் ஆண்வடிவிற்கமைந்த இடைத்தோற்றம் உந்தியளவின் கீழாக சிறிது ஒடுங்கிச்செல்லும் அமைப்புடைய தென்பது உணர்த்திற்றாம்.

இதனான், கலைஞன் நுசுப்பும் இடையும் நுணுக்கமுடனாய்ந்து தேர்ந்தெழுதுதற்கமையுமென்பது நிறைவுறுத்திற்றாம். 34



நுசுப்பின் சிறப்பு

66. பெண்மை வடிவின் பிறக்கம் அசைந்தெழும்
நுண்மை நிகழிடம் நுசுப்பெனக் கொள்வரால்.

எ-ன்:- நுசுப்பிட நுண்மைச் சிறப்பு உணர்த்திற்றாம்.

பெண்மைக்கமைந்த வடிவின் வனப்புறுப்பாகி நளினவியல்புடன் நுடங்கும் இடமாக நிற்பது நுசுப்பாதலின், அதன் நுண்மைத் திறனறிந்து ஓவியன் சிறப்புடன் வரைவனென்பதாம். 35



பலநிலைக்கணிப்பு

67. *நிற்பதோ டிருப்பதும் கிடப்பதும் நொடிப்பமை*
மடிப்பும் நிமிர்வும் மாண்பமை நெளிப்பும்
எட்டள வுக்கமை இலக்கண மாயினும்
கலைஞன் தேர்வது கலையின் தேற்றமாம்.

எ-ன் :- உடலின் பல்வேறு நிலைகட்கமைக்கும் பாங்கு உணர்த்திற்றாம்.

மக்கள் தெய்வம் ஆகிய வடிவுகள் நிற்பதாகவும், அமைந் திருப்பதாகவும், துயிலடைவுகொள்வதாகவும், நொடிப்போடமைந்த மடிப்புடை நடிப்புப் பெறுவதாகவும், உயர்ந்து நிமிர்வதாகவும், ஆடல் கரணங்களால் நெளிப்பு அமைந்ததாகவும் எழுதுங்கால், எட்டளவிற்குரிய வரையறையே அவற்றிற்குப் பொதுவாகக் காண்பதாயினும்,

எழுதக் குறித்த வடிவின் தோற்றத்தினால், மறைவதும் புலப்பாடுறுவதுமாகிய அங்கங்களைக் காட்சியளவில் கலைநுட்பத் துடன் கணிப்பிட்டு எழுதுவது தெளிந்த திறனாகும்.

இக்கலைநிலைக்கு மனத்தானும் நினைவானும் வகுத்துக் கொள்ளும் தேர்ச்சியே தேற்றமாகும். 36

பாலறி நுட்பம்

68. *ஆண்பெண் பாலறி அங்கம் காட்டுவ*
மாண்பமை நுசுப்பும் மலர்வுறு மார்பும்.

எ-ன் : ஆண் பெண் உறுப்பு வேறுபாடு காட்டியதாம்.

இவ்வுரு ஆண், இவ்வுரு பெண் என்னும் பால்வேறுபாட்டினை வரிவடிவில் பாகுபடுத்தி ஓவியமாக்குதற்கமைந்த அங்கங்கள் இடுப்பும் மார்பகமுமாகும்.

ஆண்மையின் திண்மையினை அகன்ற மார்பகம் காட்டுதலானும், பெண்மையின் பருவகால மென்மையினை மூன்றாம் பருவமுதல் மார்பக நகில்கள் முன்னின்று காட்டுதலானும் மலர்வுறு மார்பகமென்று சிறப்பித்துணர்த்திற்றாம்.

வளரும் பருவந்தோறும் வனப்புடன் அரும்பி வளர்ந்தும் மலர்ந்தும் வடிவுடன் அழகமைந்த தோற்றமும் காட்டித்துலங்கும் இயல்பு, மானுடவுடலின்கண் மன்னிய உறுப்புகட்கமைதலின், அவற்றுள் காட்சியான் பாலறி அங்கம் மார்பகமென்பதும், பகுத்தறி அங்கம் நுசுப்பென்பதும் குறிப்புடனறிந்தெழுதுதற்கு இந்நூற்பா இலக்கு நுதலிற்று. 37



நொசிப்பழகு

69. தெய்வ வடிவம் திகழ வெழுதும்
அங்கத் தெழில்மிக பங்கமில் நொசிப்பிடம்
மூன்றெனத் தேர்ந்து முறைதெரித் தனரால்.

எ-ன் :- தெய்வ வடிவில் இலாவகமாக உடலை நெளித்தெழுதி யழகூட்டும் கலைநுட்பம் உணர்த்திற்றாம்.

தெய்வ வடிவங்கள் கவினுடன் திகழவேண்டியெழுதுங்கால், அதனங்கங்களில் அழகு மிகுதற்குரியதாக அமைத்துக் காட்டும் கலைஞன், நொடிப்பின்றி அமைத்தற்குரிய நொசிப்பிடங்கள் மூன்றிடங்களே முறையாலுயர்ந்தனவென்று அறிஞர் அளவிட்டுத் தேர்ந்து புலப்படுத்தினர்.

நொசிப்பு — இலாவகமான நொடிப்பு. இதனை வடநூலார் 'திரிபங்கம்' என்பர். 38



நொசிப்பும் நொடிப்பும்

70. கழுத்திணை மார்பகம், கவினமை நுசுப்பு
பழிப்பிலா வனப்பமை நொசிப்பிடம் மூன்றாம்
முழந்தாள் கணுக்கால் முறைமையின் நொடிப்பாம்.

எ-ன் :- நொசிப்பிடங்களும் அவற்றாலமையும் நொடிப்பிடங்களும் உணர்த்திற்றாம்.

கலைஞன் தேர்ந்து தெளிந்து உடலில் அமைத்தெழுதும் நொசிப்பிடங்கள் முறையே, கழுத்தொடு இணைந்த தோள், மார்பகம், அழகு பொருந்திய இடை ஆகிய மூன்று அங்கங்களில் அமைதலாகும்.

நொசிப்பின் செயல்வழி இயல்பாக ஒன்றித்தோன்றும் முழந்தாளின் நொடிப்பு, கணுக்காலின் பிணக்கு ஆகியவை நொசிப்பு போல்வதோரமைப்புடையதேனும் நுணுகிக்காணுங்கால் நொடிப்பாயமைதலாம்.

நொசுப்பு - அங்கங்கள் அழகுடன் வளைதலால் உடலிற்கமைந்த தோற்றப் பொலிவு.

நொடிப்பு - மடக்கமாகவும், பிணக்கமாகவும் காலினும் கையினும் அமைதல். 39



நொசிப்புத் திறன்

71. *நொசிப்பிடம் ஒசிந்து விசிப்புடன் பொருந்த*
ஒடிப்பின்றி வரைதல் ஓவியத் திறனாம்.

எ-ன் :- நொசித்தெழுதுங்கால் கையாளும் வித்தகம் கூறிற்றாம்.

நொசிப்பிடங்கள் இலாவகமான நெளிப்புடன் ஒரே அளவில் ஒன்றற்கொன்று நளினமாகச் சேர்ந்து அழகின் வளர்த்திக் காட்ட, ஒடிப்பு உண்டாகாவண்ணம் அமைத்து வரைதல் ஓவியக்கலையின் ஒப்பற்ற வித்தகமாம்.

சிற்பக்கலைக்கும் இச்செயல் ஆசாகப் பொருந்தியதாம். 40



மக்கள் வடிவில்

72. தெய்வக் காட்சியிற் தேர்ந்த நொசிப்பு
மெய்பெறும் மக்சள் மேனிக்கு முரித்து.

எ-ன் :- மக்கள் வடிவிற்கும் நொசிப்பமைப்பு பொருந்தும் என்பதாம்.

தெய்வ வடிவங்கட்கு அங்கவழகூட்டும் கலைஞன், ஆராய்ந்து தெளிந்த நொசிப்புச் செயலை, இயல்பாகவே ஒசிப்புடன் இயங்கும் மேனியினைப்பெற்ற மக்கள் வடிவிலும் எழுதியமைத்தற்குரியதாகும். 41



கணங்கள் வடிவில்

73. அரக்கர் பூதர் அச்சம் தரும்சூர்
வடிவில் நொடிப்பிடம் வழங்கல் வரைவில
பொருந்திய இடங்கள் தெரிந்து வரைதலாம்.

எ-ன் :- தேவதைகள் கணங்கள் ஆகியவற்றிற்கமைந்த முறை கூறிற்றாம்.

விகார வடிவுள்ள அரக்கர், குறுமையும் பருமையுமான பூதகணங்கள், அச்சந்தரும் காளி, கூளி, பிடாரி ஆகிய உருவங்கள் ஆகியவற்றை வரையுங்கால், அவ்வவற்றிற்சமைந்த உடலமைப்பில் நெறிப்படி நொசிப்பிடங்கள் காட்டுதல் என்பது வரையறையில்லை; வடிவிற்குப் பொருந்திய அங்கங்களில் உணர்வுநிலைகட்கேற்ப நொடிப்பிடங்கள் தெரிந்து பொருந்தியதாக வரைதலாகும். நொசிப்பு நொடிப்பாகியதென்னையெனில், இவற்றின் இயல்புக்கு நொடிப்பு அழகூட்டும் என்பதாம். 42



உயிரோவியம்

74. மலர்ந்தன போன்றும் உயர்ந்தன போன்றும்
மெய்வகை காட்டி மயக்குந போன்றும்
கண்டவை காட்சியிற் காண்பன போன்றும்
பொய்வகைத் தோற்றம் மெய்யெனச் சிறக்கும்
ஓவியக் காட்சியே உயிரோ வியமாம்.

எ-ன் :- உயிரோவியத்திற் கிலக்கணம் உணர்த்திற்றார்.

பொழுதொடு மலர்ந்த பூக்களைப் போன்றும், ஒப்புடன் தழைத்து ஓங்கிய மரங்களைப்போன்றும், உண்மைப்பொருளாம் வகைகாட்டி உள்ளத்தை மயக்கும் தன்மையன போன்றும், உலகில் கண்டபொருளைக் காட்சியிற் காண்பன போன்றும்,

பொய்வகைத் திறனால் புனைந்தழகூட்டிக் காட்டிய தோற்றத்தை மெய்யெனக்கண்டு விழையும் பாங்கில் சிறந்து கவர்ந்து நிற்கும் ஓவியக் காட்சியே உயிரோவியமாம். இவற்றுள்,


"கொல்லிக் குடவரை பூதம் புணர்த்தெழுதிய
நல்லியற்பாவை"

என்று குறுந்தொகை கூறும் பாவையுமொன்றாம். 43



தொழிலியல்

4



ச. தொழிலியல்

இவ்வியல் கற்பனைத் திறனனைத்தும் கற்றுத்தேர்ந்த ஓவியக் கலைஞனின் செயலும் தொழிலும் திறனும் உணர்த்திற்றாம்.

75. *நினைவுறு வோவியம் நிலைபெற வெழுதும்*
வினைநிலை பலவாம் அவற்றுள் விளங்கிய
வழிநிலை சிலவே வரைதற் காகும்

எ-ன்:- ஓவியன் வரையுங்காலத்துக் கையாளும் செயல்வழிமுறை பலவாயினும் இயன்றன சில காட்டியதாம்.

நினைவினுக்கமைந்த ஓவியக்கலையினை நிலைபெறவெழுதி வளர்த்தத் தொழில் நிலை பலவாகும். அவற்றுள் அறிந்து கையாண்டு அனுபவப்பட்ட சிலவற்றையே எழுத்தால் விளக்க இயலும். 1

நுண்கலையியல்பு

76. *கண்ணிற் காட்சியை நிறுத்திக் கருத்தொடு*
மன்னிய உருவாய் மனத்தினில் இருத்திக்
கைவழிப் படுந்திறன் காட்டும் எழுத்தமை
செய்வினை யாதலின் செப்பிய மரபிலை.

எ-ன்:- ஓவியம் புனையும் தொழிலின் நுண்மையும் அருமையும் கூறிற்றாம்.

பொறியுணர்வான் காணும் பொருட்காட்சியை, காலத்தானும் இடத்தானும் மாறாத மயங்காத காட்சியாக நினைவுப் பார்வையும் நிறுத்தி, மனத்தில் அவ்வுருவை வடித்துப் படமாக உணர்வால் நிலைபெறச் செய்து, அதன் சுவையாக இயங்கும் கைவழிப்படூஉம் கருவித்திறனால் எழுதிக்காட்டும் ஒப்பற்றவுணர்வுநிலைத் தொழிற் பயனே ஓவியமாதலின், அதற்கமைந்த தொழில் முறைகளை விளக்கியுணர்த்திய மரபு வழியில்லை என்பதாம்.

''செப்பிய மரபு இல்லை'' என்றமையான், குறித்துக் காட்டிய வழி அறிதலும் செய்கைப் பழக்கத்தால் தெளிதலும் கருத்தால் துணிதலுமே கலைநெறியாகுமென்பது தெளிவாம்.

லைச்சூத்திரத்து, வழிநிலை சிலவே வரைதற்காகுமென்பது யாதோவெனின், ஒல்லும் வகையான் உரைத்தல் என்பதாம். 2



செய்கை நிகழுமிடங்கள்

77. *மாளிகை கூடம் மண்டபம் கோபுரம்*
சூளிகை நாழிகை துயிலறை சாலை
கல்லிடு பந்தர் கவிந்த பளிக்கறை
இவ்வகை இடங்களோ டிட்டிகை விதான
உள்ளகம் பிறவும் ஓவியம் பெறுமே.

எ-ன் :- ஓவியம் வரையப்பெறுதற்கமைந்த இடங்கள் கூறிற்றாம்.

மன்னன் வாழ் மாளிகை, மனையமை கூடம், கோயில் மண்டபம், கோபுரம், பொய்கை சூழ் நெடு மண்டபம், வாயில் இடைவழி, பள்ளியறை, அறச்சாலை, கற்பந்தல், மேலே கவிந்துயர்ந்த பளிங்கு அறை இத்தகைய திண்மையும் மேன்மையும் பொருந்திய இடங்களோடு, சாந்திட்டு ஒட்டிய விதான உள்ளகம் ஆகியவற்றுடன் பிற முகப்பாகுமிடங்களும் ஓவியம் எழுதுதற்குரிய

இடங்களாகும். வரைவியலில் கூறியவை ஈண்டும் இடம்பெற்ற தென்னையெனில் ஆங்குக் கூறியது சுவரோவியம் குறித்ததாம். ஈங்கு தொகுத்துரைப்பது, அதனொடு செங்கல் சுண்ணம் ஆகிய வற்றால் உருவங்களாக்கி அதன் வடிவு துலங்கவெழுதிக்காண்பது மவ்விடங்களேயென்பது தெளிதற்கென்றேயாம். 3

சுதையோவியத்துறை

78. *வெண்சுதை விளக்கத் தோவியம் தீட்டுதல்*
தண்டமிழ் நாட்டின் பண்டைத் தொழிலெனக்
கண்கவர் காட்சியாய்க் கருத்துடன் வளர்த்ததால்
நண்பமை அத்துறை நயத்தலீண் டியல்பாம்.

எ-ன்:- சுதையோவியத்தொன்மையும் மேன்மையும் உரைத்தாம்.

வெள்ளிய சுண்ணச்சாந்து பூசிய சுவரிடத்தும், சமைத்த உருவத்தின் மேலும் ஓவியமெழுதி விளக்கஞ்செய்யும் சுதையோவியம், தமிழகவழக்கில் பழமையான கண்கவர் காட்சியாகக் கலைஞன் கருத்துடன் வளர்த்ததால், ஓவியக்கலைக்கு ஒன்றிய உரிமை பெற்ற அவ்வொப்பனைத்துறையினையும் ஈண்டு பொருத்திக் கூறுதல் இயல்பாகும். 4

சுதைநிலை

79 *செய்கை நிகழும் காலத்துச் சேர்க்கும்*
கைவினைப் பொருள்நிலை காட்டுவன் குறித்தே

எ-ன்:- சுதை உருவாக்கும் பொருள், செயல் சொல்லுவதாம்.

வெண்சுதைச் சாந்து உருவாக்கும் காலத்து, அதற்கமைந்த பொருள்களையும், அவற்றைச் சாந்தாக்கிக்கொள்ளும் முறையினையும் குறித்துக் காட்டுவன். 5

சுண்ண நீறு

80. முந்நீர்க் கிளிஞ்சல் இப்பி முத்தொடு
நன்னீர்ச் சுரக்கும் நானில வெண்கல்
இன்னவை மண்ணறை எழுதீ வழிப்படின்
சுண்ணநீ றாகித் துலங்கித் தோன்றும்.

எ-ன் :- சுண்ணநீறுக்குரித்தாம் பொருளும், ஆக்கும் செயலும் கூறிற்றாம்.

கடல்படு கிளிஞ்சல், இப்பி, முதிர்முத்து, உவரற்ற நீர்ச் சுரக்கும் நிலக்கருவாகிய சுண்ணப்பொறுக்கு, இவற்றை முறையே மண்சுவரடைவிடையெழுப்பிய தீயிலிட்டு சுடப்பெறின் சுண்ண நீறாகி வெண்மையுடன் விளங்குமென்பதாம்.

மண்ணறை — மண்ணால் எழுப்பியதும், சுண்ண மூலங்களை நெருப்பிட்டு நீறாக்கும் இடுக்கறையுமாகிய நீற்றறை. 6

சுதை இன்னதென்பது

81. சுண்ணச் சாந்தே சுதையாம் அதனாற்
பண்ணும் உருவும் பயின்றதப் பெயரே.

எ-ன் :- சுண்ணச் சாந்தும், அதனால் ஆக்கிய உருவும் பெறும் பெயரும் கூறிற்றாம்.

கனிப்புடன் அரைத்தெடுக்கும் வெண்சுண்ணச் சாந்தே "சுதை" என்று பெயர்பெறும். அச்சுதையினாற் பண்ணும் உருவும் அப்பெயரினையே பெற்றிருப்பது மரபாம்.

"வெள்ளிவெண்சுதை இழுகிய மாடம்" என்பது சுண்ணச் சாந்து பூசிய மாடத்தையும், "வெண்சுதை விளக்கத்து வித்தகர்

இயற்றிய கண்கவர் ஓவியம்'' என்பது சாந்தினாலாக்கிய உருவின் மேல் கலைஞனெழுதிக்காட்டிய ஓவியத்தையும் வகைபெற மணிமேகலை குறித்துக் காட்டுவதால் அறியலாகும்.

''மண்ணீட்டாளர் சுதையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவார்'' என்பர் அடியார்க்கு நல்லார். 7

சுண்ணவெண் சாந்து

82. *சுண்ணவெண் சாந்து துலங்கக் கூறிடின்*
நுண்துகள் படிகம் வெண்மணல் நீறு
வள்ளிய பற்றுடன் வடித்தநற் றுவர்நீர்
பன்னியே அரைக்கப் பலிங்கெனச் சாந்தாம்.

எ-ன் :- வெண்சாந்து ஆக்கும் தொழில் கூறிற்றாம்.

சுண்ணமுலத்தாலாகும் வெண்மை பளிச்சிடும் சாந்தினை ஆக்கும் செயல் விளங்கக் கூறுவோமாயின், நுண்மையாகப் பொடிக்கப்பட்ட படிகக்கற்றுகள், வெண்மையும் நுண்மையும் பொருந்திய மணல், சுண்ணநீறு ஆகியவற்றை ஒரே அளவில் கலந்து, வெண்ணிறம் பெற்ற பிசின் கரைசலுடன் வடித்தெடுத்த துவர்நீரினை அளவுடன் ஆராய்ந்து சேர்த்துச் சேர்த்து அரைக்கப் பளிங்கின் ஒளியுடன் கூடிய சாந்து உருவாகும்.

''வெள்ளியன்ன விளங்கும் சுதை'' என்பது நெடுநல்வாடை. 8

சாந்தில் ஒளிமிகல்

83. *தண்ணொளி மிகவே தரமுடன் சாந்தில்*
வெண்கரு சேர்த்தல் விரகாம் என்ப.

எ-ன் :- சாந்தில் ஒளிமிகல் வேண்டின் செய்வது கூறியதாம்

சாந்தில் தண்ணிய பளிங்கொளி மிகுவதற்கு, அரைத்த அளவிற்கு அமைந்த சிறு கூறிட்டு முட்டை வெண்கரு சேர்த்து விசித்து மசித்து அரைத்துக் கூட்டுதல் தொழில் நுட்பமென்பர் வல்லுநர். 9

வச்சிரக்காரை

84. சுண்ணம் தன்னை நுண்மணல் சேர்த்து
வெல்லநீ ரிட்டே விரைவுட னரைத்தபின்
கடுக்காய் நெல்லி தான்றி உழுந்து
இன்னவை இருமுறை இடித்து நன்னீரில்
மூன்று பொழுது முறைமையா லூறிட
அக்கடுஞ் சாற்றை அளவுடன் சாந்தில்
விட்டொரு முறையும் வெகுவாய்க் குழைத்திட
வச்சிரக் காரை வாகுடன் உருவாம்.

எ-ன்:- மாளிகை, உயர்மாடம் இவற்றை வலிமைமிக அமைத்தற்காம் வச்சிரச் சுண்ணச் சாந்து கூறியதாம்.

வடித்தெடுத்த வெண்சுண்ணநீற்றுடன் நுண்மணலை அளவுடன் சேர்த்து, வெல்லக் கரைசல் நீரிட்டு விரைவாக கற்பலகையில் கற்குழவியாலரைத்தபின், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், உழுந்து ஆகியவற்றை மசிய இடித்து, நன்னீரில் தொண்ணூறு நாழிகை ஊறலாக்கி, அக்கடுந்துவர்ச்சாற்றை வடித்தெடுத்து அரைத்த சாந்தில் அளவறிந்து இணக்கிக் குழைக்க, வச்சிரக் காரையென்று பெயர்பெறும் வலிய பசைப்பமைந்த வெண்சாந்து உருவாகும்.

கல்லுருளைச் சக்கரயந்திரத்தில், சுண்ணநீற்றின் கலவையோடு வெல்லநீரும், ஊறல் கடுஞ்சாறும் விட்டரைத்தெடுப்பதே இதனை ஆக்கும் விரகென்றறிக. 10

பளிங்குக் காரை

85. *மென்மையும் பசைப்பும் வெண்சுதைச் சாந்தில்*
மேவிடும் போழ்தில் வெண்கரு தன்னை
விட்டொரு முறையும் விசிப்புற அரைக்கின்
மட்டிலாப் பளிங்கின் ஒளிநிலை மலருமால்.

எ-ன் :- சுவர்மேற் பூசற்காம் காரையின் வலிவும் வெண்மையும் மிகுதற்காம் விரகு கூறிற்று.

உரைத்த முறைப்படி சக்கரயந்திரத்தில் அரைக்கும் சுதைச் சாந்தில் மென்மையும் பசைப்பும் தோன்றும் பதத்தில், முட்டை வெண்கருவை அளவுடன் சேர்த்து அரைத்தெடுக்க ஒப்பில்லாத பளிங்குக்காரை உருவாகும்.

மலரும் என்ற காலக்குறிப்பு, கலைஞனது தொழிலால் உருவான கட்டடம் உலரும் காலத்து சுதைப் பூச்சு பளிச்சிட்டுப் புலரும் தன்மை உணர்த்தியதாம். 11

சித்திரச் சுண்ணம்

86. *இப்பிவெண் சங்கின் இயைந்த நீற்றினில்*
தப்பிலா வெண்மைத் தரமுட னமைவதால்
ஒப்பிலா வோவிய மெழுதுதற் குறித்தாம்.

எ-ன்:- ஓவியமெழுதுதற்குரிய உயர்வெண்ணீறு உணர்த்திற்றாம்.

ஓவியம் எழுதுதற்கமைந்த வெண்வண்ணம் தேறும் இயல் பினைக் கூறுவோமாயின். இப்பி, வெண் சங்கு ஆகியவற்றா லாக்கிய வெண்மையும் நுண்மையும் மிகு வண்ணநீறே அதற்குரியதாம்.

இவ்வெண்வண்ணமே முத்துவெள்ளையாம். 12

பற்று

87. *வேலொடு வேம்பின் விளவின் பற்றிவை*
நீரோடு இணக்கச் சேருநற் பற்றாம்.

எ-ன்:- சுண்ணத்திற்கும் வண்ணத்திற்கும் ஊட்டும் பற்று இவையென்பதாம்.

கருவேலமரம், வேம்பு, விளா ஆகுயவற்றின் வயிரச்சாறாம் பிசினை நன்னீரொடு குழைக்கப் பற்று என்னும் பசைநீரமையும். (விளாமரத்தின் பற்று வெண்மையும் மென்மையும் நிறைந்ததாம்.) 13

இதுவுமது

88. *வச்சிரப் பற்றும் வழங்குத லுரித்தே.*

எ-ன்:- திண்ணிய பசைப்பமைந்த வச்சிரப்பற்று நுதலிற்றாம்.

வச்சிரம் என்னும் ஊன் உறைப்பசைப்பொருளையும் வண்ணத் திலிட்டுக் குழைத்தெழுதலாகும். 14

சுவரோவியம்

89. *சுடுமண் கருங்கற் சுவரதில் ஓவியம்*
குறித்தெழு தப்புகின் கொள்ளும் தொழிலது
கேட்பின் கிளர்த்தெழு சுவரின் வெளிப்புறம்
சருச்சரை யின்றிச் சமனிலை ஆக்கி
ஈரம் புகுத்தி இயன்ற கருவியால்
சுண்ணச் சாந்தினைச் சோரச் செய்து

மட்டப் பலகை இட்டு வழித்துச்
சமனிலை செய்து சற்றே உலர்த்தி
தெளிவமை வன்பரற் கற்கொடு தேய்த்திட
ஒளியமை பளிங்கின் உருப்பெறும் போழ்தின்
கரிக்கோல் மஞ்சள் கருதிய தொன்றால்
வரிநிலை வரைந்து வரையறை தோற்றி
கருதிய காட்சியைக் கணக்குற வகுத்து
அழியா மரபின் புனையா வோவியம்
ஆக்கிய பின்னர் அன்னதற் கேற்புற
வண்ணக் காட்சியாய் வரைந்து மெருகிடல்
சொல்லிய சுவரோ வியமாம் என்ப.

எ-ன் :- சுவரில் ஓவியம் வரைதற்காம் தொழில் முறை கூறிற்றாம்.

செங்கல், கருங்கல் ஆகியவற்றாலாக்கிய சுவரில், ஓவியம் எழுதப்புகின், தேர்ந்த சுவரிடத்தின் முகப்பரப்பைச் சருச்சரை இல்லாமல் சமனிலைப் படுத்தி, ஈரமுண்டாக்கி, இரும்பிலையால் கொத்தர் சுண்ணச் சாந்தினை முறையே படர்பெறப் பூசி, மட்டப் படுத்தி உலர்த்திய பின்னர், தீற்றாங்கல்லால் தேய்த்து சுதைக்கு மெருகிட்டு, வரையுமிடம் கணித்து, கரிக்கோல், மஞ்சள் ஏதொன்றினால் கருதிய காட்சியை வரிநிலையாக வரையறை செய்து புனையாவோவியம் புகுத்திய பின்னர் வகைபெறும் வண்ணங்களால் எழில்பெறக் காட்சியை நிறைவாக எழுதி, மெருகிட்டு விளங்கச் செய்தல் சுவரோவியம் தோற்றுவிக்கும் தொழில் முறையாகுமென்பதாம். பூசிய வெண்சுதைச்சாந்து உலரும் போழ்தில், முன்னுறு வண்ணமொன்றைச் சுவரிடம் முழுதும் பூசி அதன்மேல் புனையாவோவியம் வரிநிலையாக வரைதலும் ஒரு திறனாம். இதனை,

"வெள்ளி யன்ன விளங்கும் சுதைஉரீஇ
மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்

செம்பு இயன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ ஒருகொடி வளைஇ"

என்னும் விளக்கத்தான் நெடுநல்வாடையும் உணர்த்தும்.

சுடுமண் - செங்கல், சருச்சரை - புடைப்பும் புகவும்.

பரற்கல் - பட்டை முகத்துறுகல் (தீற்றாங்கல்)

முன்னுறுவண்ணம்—ஓவியம் வரைதற்கு ஏற்புடையதாகவும் அடிப்படையாகவும் தேர்ந்த இடம் முழுதும் படர்பெறப்பூசும் வண்ணம். வெளிர்நீலம், காழ்பழுப்பு, வெளிர்மஞ்சள் இவற்று ளொன்று முன்னுறு வண்ணமாக அமையும். 15



புனையா ஓவியம்



புனைந்த ஓவியம்

மெருகிடல்

90. வண்ண வோவியம் வரைந்த பின்னர்
ஈரம் புலரும் ஏற்பமைப் பொழிதின்

பட்டைத் துறுகல் இட்டுத் தேய்க்க
பளிங்கெனத் திகழும் பாங்கமைத் தொழிலினை
மெருகிடல் என்றே விரகுடன் கூறுப

எ-ன் :- சுவரோவியத்தில் பளிங்கொளி திகழ மெருகிடும் நுண் தொழில் கூறிற்றாம்.

சுவரோவியம் எழுதி நிறைவுசெய்த பின்னர், தோற்றப் பொலிவு ஊட்டுவான் வேண்டியும், எழுதிய வண்ணங்கள் சிதைவுறாமல் இருத்துதற்பொருட்டும், மென்மையான பற்றிட்டு, பட்டைமுகத்துறுகல்லால் மிருதுவாகத் தேய்க்கின் ஓவியம் பளிங்கொளியுடன் திகழுவதாகும். நுண்மை மிகுந்தவித் தொழிலினையே 'மெருகிடல்' என்று கலைஞர் விரகுடன் கூறுவர்.

"புதுவது இயன்ற மெழுகுசெய் படமிசை"

என்பது நெடுநல்வாடையாதலின், கிழியிலெழுதும் படத்தின்மேல் மெழுகினைத்தேய்த்து ஒளிரச் செய்தலும் பண்டைய வழக்கென்பது புலனாம். 16

கிழியோவியம்

91. *நெருக்க இழைபெறு கிழியினை நெகிழா*
திருத்தி விரித்து இடைநில முழுதுற
வெள்ளை வண்ணம் விசிப்புறப் பூசிமேல்
வண்ண வோவியம் வரைதலும் மரபே.

என்: கிழியின்மேல் ஓவியம் தீட்டுதற்கமைந்த தொழில்நிலை கூறிற்றாம்.

தடிப்புறநெய்த வெண்மையான அறுவையினை, நாற்புறச் சட்டத்தில் அசைவுறாமல் இருத்தி, இடைப்பரப்பிடத்தில் வெண்

வண்ணம் பூசாகப் பூசி, அதன்மேல் பன்னிற வண்ணங்களால் பாங்குடன் ஓவியம் வரைதல் கிழியோவிய மரபாகும்.

இடைநிலம் - அறுவையின் நடுவமைந்த பரப்பிடம். 17

வண்ண எழினிகள்

92. *கலையரங் கறிவுற கவினமை யெழினிகள்*
நிலைபெற வெழுதுதல் நிகழ்த்திய வழித்தாம்.


என் :- எழினிகள் அழகுபெற ஓவியக்காட்சிகள் எழுதும் துறை உணர்த்திற்றாம்.

கூத்தரங்கு, நாடகசாலை, பட்டிமன்றம், விழாக்களச்சேக்கை ஆகிய இடங்கள் இன்னின்ன சிறப்புடையன என்பதனைக் காட்சி வழிக்காட்டுவான் போன்று, நிறத்திரைச் சீலைகளாம் எழினிகளின் மீதும் ஓவியமெழுதிவைத்தல் வண்ணவோவியக் கலைவழித்தொடர்ந்த வழக்காகும்.

வழித்தென்பது - ஓவியமெழுதுதற்கு முன்னிருந்த இயல்பும் வளர்ச்சியும் சுட்டிற்று.

எழினிகள் பலதிறப்படுதலை, "ஒருமுக எழினியும் பொருமுக எழினியும் கரந்துவரல் எழினியும் பரிந்துடன் வகுத்து" என்று சிலப்பதிகாரம் கூறும் அரங்கின் அமைப்பிலக்கணத்தானும், விழாக் களச்சேக்கை என்பது, "புன்னை நீழல் புதுமணற் பரப்பில் ஓவிய எழினி சூழவுடன் போக்கி" கோவலனும் மாதவியும் கொள்கையில் இருந்த, கடலாடு காதை நிகழ்ச்சியானு மறிக.

'சேக்கை' என்பதுகொண்டு, பாடிவீடும் அதனுட்பொருத்தும் எழினிகளும் ஓவியம் பெறுதல் உண்டென்பது பெறப்படும். 18



உள்ளகவோவியம்

93. *அம்பலக் கூரை அமைப்புறு கட்டிட*
உள்ளகம் இவற்றில் ஓவியம் நிரைப்ப
விண்ணவ ருலகென வியப்பமை காட்சிகள்
வண்ணம் துலங்க வரைதலு மியற்றே.

எ-ன் :- கூரை உள்ளக ஓவியம் துலக்கிற்றாம்.

கால்களின் மேல் பொருந்திப்படர நிற்கும் அம்பலக்கூரை, மண்டபமாக அழகுற அமைக்கப்பட்ட கட்டிடத்தின் உட்புறம் ஆகியவற்றில் ஓவியம் நிரம்ப, தேவருலகென்னக் கண்டோர் வியக்கும் காட்சிகளை, வண்ணவோவியம் மிளிர வரைதல் இயல்பாகும். 19

இதுவுமது

94. *அதுவே*
வியப்பமை விதான வோவியம் என்ப.

கற்பந்தர், மண்டப உள்ளகம் ஆகியவற்றில் எழுதப்பெறும் ஓவியமே விதானவோவியம் என்று கூறுவர்.

இதனை, சிலம்பின் அரங்கேற்றுக்காதை தரும், ஓவிய விதானத்தாலும் உணரலாகும். 20

விதானப் பரண்


95\. விதானத் தோவியம் விளங்க வெழுத
நிதானத் துடனே நிமிர்த்த வேழத்துப்
பரணமைத் ததனில் பாங்குட னிருந்து
எவ்வகைக் காட்சியு மெழுதுதல் வேண்டும்.

எ-ன்:- விதானத்து ஓவியம் எழுதுதற்காம் விரகு கூறிற்றாம்.

விதானங்களில் ஓவியக்காட்சிகள் விளங்குமாறு எழுதுதற்கு, கலைஞன் தரையிடத்தை ஆய்வுசெய்து, அதனின்றும் திண்மையும் நெடிதுமான மூங்கில் தண்டினைக் கொண்டிணைத்தமைத்த பரண்மேல் இருந்தும் கிடந்தும் எழுதுதற்கமைப்பிட்டு, எத்தகைய வண்ணக் காட்சிகளையும் தொழில்வழி எழில்மிகவெழுதுதல் இயல்பாகும்.

வேழம் - முதிர்ந்த மூங்கில்.

வேண்டும் என்ற முன்னறிதிட்பக்குறிப்பான், கலைஞன் அமைப்பிடன் ஆய்ந்து பரண்நிறுவுங்கொள்கை நினைவுறுத்திற்றாம்.



விதான வோவியம்

96. அண்ணல் வாயில் அருகர் குடைவரை
தன்னில் உள்ளகம் தாமரைத் தடமாய்த்
திகழும் ஓவியம் செப்பிய நெறித்தே.

எ-ன் :- பாண்டியநாட்டின் வடவெல்லையிலமைந்த சிற்றண்ண வாயில் குன்றகமுகட்டில் அருகர் குடைவித்த கோயில் முகமண்டபக் கூரையில் விளங்கும் தாமரைப் பொய்கைத் தடந்திகழ்க்காட்சி கலைஞன் பரணமைத் தெழுதிய பாங்கினை உணர்த்தும் நெறியுடைத்தாம்.

காலத்தொழில் கண்டு மரபுவழித் தொடர்தற்குச் சான்று காட்டுதல், கலைநூற்கமைந்த துறையாம். : 22



ரு. சித்திரவியல்

இவ்வியல், ஓவியக்கலையின் ஒருதுறைக்கமைந்த தொழில் திறன் விரித்துரைத்திற்றாம்.

சித்திரம்

97. *பாரினில் மாந்தர் பார்வையா லுணரச்*
சீர்பெறும் காட்சிகள் சித்திரிப் பதனால்
பேர்பெறும் வழக்கின் பெயரே சித்திரம்.

எ-ன் :- சித்திரம் என்பதற்குப் பொருந்திய காரணம் நுதலிற்றாம்.

உலகில் மக்கள் கட்பொறியால் கண்டுணர்ந்தறியுமாறு, சிறப்பமைந்த காட்சிகளாக வரிநிலையாற் காட்டலும், பொருள்மேற் புனைந்தழகூட்டலும் வெண்சுதை உருவின்மேல் விளக்கஞ்செய்தலு மாகிய சித்தரிப்புத் தொழிலால், மக்கள் சுட்டிய வழக்கின் பெயராய் வந்த பெயரே சித்திரம் என்பதாம். 1

சித்திரவிலக்கணம்

98. *ஓவியச் செந்நூல் உரைவழித் தொடர்ந்த*
காவியக் கலைவழிக் கண்டது சித்திரம்.

எ-ன் :- சித்திர் வியலுக்கமைந்த அமைதி கூறிற்றாம்.

பண்டைத்தமிழகத்தில் விளங்கிய ஓவியச் செந்நூல் ஒடுங்கிய பின்னர், உரையாசிரியர்கள் உணர்த்திய நெறியாலும், அருள் நெறியாளர் ஆக்கிய நூல்வழியாலும் பொட்டிட்டு நின்ற சித்திரச் சாயலை ஒருவாறு உணர்ந்து சித்திரவியல் படைத்தனம். 2

சித்திரவியல்

5



சித்திரவரலாறு

99. ஆதி மனிதன் அறிவிற் புலம்பெறும்
காலத் தரும்பிய கல்லக வாழ்வினில்
குன்றிலும் குகையிலும் குறித்த வடிவே
சித்திரக் குறியெனச் செப்பினர் புலவோர்.

எ-ன்:- பண்டைய மனிதன் கருத்தை உணர்த்தக் காட்டிய வரியுருவின் வரலாறு கூறிற்று.

உலகில் முன்தோன்றிய விலங்கொடு நிலவிய மனிதன், அறிவியற்புலம் பெற்று அகவாழ்வுதொடங்கி, குன்றகக் குகைகளில் வாழ்ந்திருந்த காலத்தில், அக்குன்றிடத்தும் குகையிடத்தும் அவன் குறித்துவைத்தப் பொருள்தரு வடிவங்களே சித்திரக் குறிகளாமென்று அறிஞர் செப்பினர்.

அவனே, தன்னுடலின் புறமெல்லாம் வண்ண வரிக் கோடிட்டும், உருவ இலைச்சினைகளை வரைந்தும் காட்டிய செயல், சித்திர ஒப்பனையின் தோற்றத்திற்குரியதாகும்.

கடந்தகால மனிதனின் கருத்தையுணர்த்தும் குறிகளாய் அமைந்தமையின், இதனை மொழிச்சித்திரமென்றும், சித்திரவெழுத்தென்றும் செப்புதற்காம்.
3



சித்திரிப்பு

100. *அன்னவர் மார்பினும் முகத்தினும் புறத்தினும்*
வண்ண வரிக்கோலம் காட்டிய செய்கை
துன்னிய சித்திரிப் பென்றே செப்பினர்.

எ-ன் :- அக்கால மக்கள் உடம்பிற்கழகென்றெழுதிய வண்ணச் சித்திரிப்பு கூறியதாம்.

பண்டைய மனித இனத்தவர் பாறையில் எழுதிக்காட்டிய சித்திரங்களல்லாமல், தனது மார்பிலும் முகத்திலும் புறத்திலும் பலநிறவண்ணங்களால் வரிக்கோலஞ்செய்து காட்டிய தறுக்கமைச் செய்கையும், சித்திரிப்பின் சீரென்றே அறிவிற் பெருகி நின்ருர் கருதிக் காட்டினர்.

முகத்தினும் புறத்தினும் பிறிதொருவரால் வரிப்புனைவு செய்தலே நிகழும் செய்கையாதலின் தன்னுறு செய்கைக்கமைந்த மார்பு முன்னுணர்த்திற்ரும்.

அன்னவர் என்பது இருபாலரையும் குறிக்கும். 4

பொருட்சித்திரம்

101. *காலக் கணிப்பும் கருத்தும் வளர்த்திய*
ஞாலத்து மக்கள் நயப்புடன் தெரிந்து
இட்ட மண்ணினும் சுட்டமட் கலத்தினும்
வட்டத் தாழியினும் வரைந்தனர் சித்திரம்.

எ-ன் :- பண்டைத்தமிழர் மண்ணீட்டின்மேற் செய்த வரிப்பதிவுச் சித்திரம் கூறிற்றாம்.

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

வளர்ந்துவரும் காலக்கணிப்பும், பண்டைத் தமிழ்மக்களின் சிந்தனையும் வளர்த்து ஆக்கிய திறனால் ஆராய்ந்து செய்த களி மண் பலகையிலும், சுட்டெடுத்தற்சமைத்த மண் குழிசியின் புறத்தும், வட்டமாக வனைந்தெடுத்த பெருஞ்சாலின் மேலும், கூரிய கொம்பினால் விரும்பிய அடையாளங்களையும், ஒப்பனைக் கோடுகளையும் சித்திரிப்பாக வருவி வரைந்தனர்.

வருவுதல் - ஈரப்பதத்தில் இடும் பதிவுக்கோட்டுருத்தொழில். 5

சித்திரத் தொழிலின் தொன்மை

102. கொடுங்கடல் கொண்ட குமரியந் நாட்டிடை
நெடுநிலை மாடமும் நெட்டமை கூடமும்
கொடுவரி வாயிலும் கோனகர்க் கோயிலும்
எல்லாம் சித்திரம் ஏற்புறப் பெற்றதாம்.

எ-ன்:- கடல்கொண்ட தமிழகத்தில் விளங்கிய சித்திரப்பாங்கினை உணர்த்திற்றாம்.

நிலத்தை வளைத்து நிற்கும் தென்பெருங் கடல் கொண்ட குமரிநாட்டில், உயர்ந்தோங்கியிருந்த மாடங்களிலும் நீண்டுத் தொடர்ந்த கூடங்களிலும், வளைவாக அமைந்த மகரவாயில்களிலும் தலைநகரிலமைந்திருந்த அரச மாளிகையிலும், பண்டைத் தமிழர் பாங்குடன் தீட்டிய சித்திரங்கள் அழகுடன் திகழ்ந்தனவென்று கூறுவர். கொடிநிலை எழுதிய மாடமும், அன்னம், யாளம் வரி நிலை எழுதிய கூடமும், மகரமெழுதிய வாயிலும், கவினுருவெழுதிய கபாடமும் இதனால் நினைவு செய்யப் பெற்றதாம்.

" வித்தகவினைஞர் பத்தியிற் குயிற்றிய சித்திரச்சாலை " " எழுது வினைமாடம் " " புதவனிகதவு " " செறிநிலை யமைந்த சித்திரப் புதவு " என்பன பெருங்கதை மகதகாண்டத்துள் வரும் செய்திகளாம்.

சித்திரவினைஞர்

103. கண்ணமர் சிற்பியர் கம்மியர் வேளார்
கல்லிலும் செம்பிலும் களிமண் தன்னிலும்
செய்வினைச் சிறப்புறச் செய்தனர் சித்திரம்.

எ-ன்: சித்திரவினைஞராய கலைஞர், அவரவர் தொழில்நிலை ஆகியவை கூறிற்றாம்.

மணக்கண் பெற்ற மாண்பினால், கல்லிலும் செம்பிலும், காழ் மரத்திலும் கருதிய உருவைக்காட்டும் சிற்பியர், மாசறுபொன்னால் மாண்புடன் மணிபிழை அணிசெய்யும் கம்மியர், பதனமை மண்ணில் கலம்பல படைக்கும் வேளார் ஆகியோர் தத்தம் கைவினைப் பொருள்கள் கவின்பெறச் சித்திரிப்பாலும் சிறப்பமையச் செய்தனர் என்பதாம்.

கம்மியர் என்ற இனக்குறிப்பான், பித்தளை வெண்கலம் ஆகிய உலோகங்களால் கலங்களை உருவாக்கும் கன்னாரும் இரும்பு செய் கொல்லரும் குறிப்பான் கொள்ளற்காம். 7

சுண்ண வெண்சுதை

104. சுடுமண் கொண்டு தோற்றிய கருவில்
வடுவறு சாந்தினால் வனைந்துரு வாக்கல்
சுண்ண வெண்சுதை என்னப்படுமே.

எ-ன்:- சுண்ண வெண்சுதை விளக்கிற்றாம்.

மண்ணுறுத்தாளர் படைக்கக்கருதிய உருவை, செங்கற்களே உள்ளீடாக, சுண்ணச்சாந்தினைப் பற்றாசாக இட்டு, அடுக்கியும், பதிவுசெய்தும், ஒடுக்கியும், ஒட்டிப் புடைப்பித்தும் கருவுருவாக்கிய பின், அங்கமுறப்பூசி உருவாக்கும் வடிவமே வெண்சுதை என்று பெயர் பெற்றதாம்.

" வெண்சுதை விளக்கம் " — மணிமேகலை.

மேலை, தொழிலியலின்கண் 'சுதை இன்னதென்பது' என்பதற்கமைந்த நூற்பாவினால் (72) சுதை என்பதன் பொருண்மைப் பொதுநிலை கூறிற்றாம்.

சுதை—சுண்ணச்சாந்து.

வெண்சுதை - சுண்ணச்சாந்தினாலாக்கிய உரு. 8

சுதைச் சித்திரம்

105. *வியப்புற வமைந்த வெண்சுதை விளங்க*
நயப்பமை வெண்கிழி நலிவின்றிப் பொருத்தி
வண்ண வகையால் வழக்குடன் உருவம்
பண்ண வரைதலும் பாங்கமை சித்திரம்.

எ-ன்: சுதைச் சித்திரத் தொழில்முறை உணர்த்திற்றாம்.

மண்ணுறுத்தாளரின் கைத்திறனால் கண்டோர் வியக்கும் வண்ணம் அமைந்த வெண்சுதை உருவம் விளக்கமுறுதற்கு, மெல்லிய வெண்கிழியினை உருமுழுதும் சுருக்கமின்றிப் பற்றினால் பொருத்தி, அதன்மேல் உள்ளமை உருவம் தெள்ளிதின் வெளிப்பாடுறுமாறு வண்ணத் தொழிலால் வரைதலும் சிறப்பமைந்த சித்திரக்கலையாம்.

" உருவு கிளர் ஓவினைப் பொலிந்த பாவை " — என்பது அகநானூறு. (பாடல் - 142) 9

ஓலைச் சித்திரம்

106. ஏட்டில் ஆணியால் எழுதிய சித்திரம்
நாட்டின் திறனொடு நனிசிறந் ததுவே.

எ-ன்: பனையேட்டில் வருவிய சித்திரம் கூறிற்றாம்.

பனை ஏட்டில் எழுத்தாணியால் வருவித் துலங்கச் செய்த சித்திரம், அவரவர் அனுபவத்திறனால் அமைந்து சிறந்திருந்தது. 10

கற்சித்திரம்


107. கற்களிற் கலைஞன் காட்டிய சித்திரம்
அற்புதச் சிற்பக் கலையென ஆயதாம்.

எ-ன்:- கருங்கல்லில் உருவாக்கும் சித்திரம் கூறிற்றாம்.

கருங்கற்களில், கலைஞன் உளிவண்மையாற் செதுக்கி உருவாக்கிக்காட்டிய சித்திரம், அற்புதப் படைப்பாம் சிற்பக்கலையெனும் பெயரினைப் பெற்றதாம். உளிவன்மையென்பது யாதெனின், கற்றிறனறிந்து மென்மையும் வன்மையும் வேண்டியாங்கு உளி மேலடித்துச் செதுக்கும் கலைநுட்ப நிலையுணர்த்திற்றாம். 11



௫. வண்ணவியல்





சு. வண்ணவியல்

இவ்வியல் ஓவியக் கலைஞன் கையாளும் வண்ணங்களின் இயற்கை, தோற்றம், நிறம், திறன், வகை ஆகியவற்றை வழக்குடன் விளக்கிற்றாம்.

வண்ணத்தோற்றம்

108. *ஐவகை நிலத்து அழகமை மலர்களும்*
மெய்வகைக் காட்டும் புள்ளும் மாவும்
இயற்கை எழுதிய எழிலமை தோற்றமும்
வண்ணம் தோன்றிய வழியென லாகும்.

எ-ன்:- மனிதன் உலகில் கண்டுதெரிந்த வண்ணங்களின் தோற்ற நிலை கூறிற்றாம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களில் தோன்றி மலரும் பல்வேறுபட்ட மலர்களும், வகைவகையான தோற்றத்தினைக் காட்டித் திரியும் பறவைகளும், விலங்குகளும், இயற்கை இட்ட எழிலாக விண்ணிலும் மண்ணிலும் தோற்றமளிக்கும் பொருள்களும், வண்ணம்பலவாக மனிதன் வகுத்தறிதற்குரிய வழிநிலையாயிற்று என்பதாம். 1

காட்சியும் கணிப்பும்

109. *மலைவீழ் அருவித் தூரல் துமிசூழ்*
நிலையில் வெய்யோன் நீட்டும் கதிரால்
தோன்றும் வண்ணத் தொகைநிலைக் காட்சியும்
வையகம் வளைத்த வண்ணக் கோலமா

மைசூழ் பொழுதின் மயக்கிய கதிரொளி
வண்ணவில் லிட்டு வளைத்திடும் தோற்றமும்
ஏழென மொழிப இயல்புணர்ந் தோரே.

எ-ன் :- இயற்கை அமைத்த காட்சியிற் கற்பித்த வண்ணக் கணிப்பு கூறிற்றாம்.

மலைத்தடத்தினின்றும் தாவிக் குதித்து. வீழும் அருவித் தாரைச் சிதறல் வழித்தோன்றும் தூரல் துமிப் படரினிடைப் புகும் கதிரொளி காட்டும் வண்ணக்கூட்டு வளைப்புக் காட்சியும், மாரிக் காலத்து விண்ணில் செறிந்த மஞ்சினிடை ஊடுருவும் கதிர்க்கால் வளைத்துக் காட்டும் வண்ண வானவில் தோற்றமும், சிவப்பு, சிச்சிலி, மஞ்சள், பச்சை, நீலம், பழுப்பு, செந்நீல் ஆகிய நிறங்களைப் புலப்படுத்தினவென்று காட்சியாலுணர்ந்த அறிஞர் அவை ஏழு வண்ணங்களென்று கணித்துக் கூறினர். 2

வண்ண வகை

110. கண்ணும் கருத்தும் நிறைகொளும் ஓவிய
வண்ணம் புலப்படும் வகைதனைக் கூறுவன்.

இயற்கை உணர்த்திய நிறங்களை, அறிஞன் ஆய்ந்து வண்ணங்களாக வகுத்துக்காட்டிய முறையினைக் கூறுவன். 3

இளஞ்செம்மை

111. குணகட லரும்பிக் குறையின்றி முகிழ்த்தெழும்
அருணன் இடுவா னழகே செம்மை.

எ-ன் :- இளஞ்செம்மை எழுந்தநிலை கூறிற்றாம்.

இளங்காலையில், கீழ்க்கடலில் எழுதரும் இளஞ்செங்கதிர்கள் வண்ணமிட்டுக்காட்டும் வானின் தோற்றம் இளஞ்சிவப்பினை உணர்த்திற்றாம். இதனைச் சிச்சிலி வண்ணமென்றும் செப்புவர்,

குறையின்றி முகிழ்த்தெழுதலாவது செறிந்த கருமுகிற்படரும், பனிச்செறிவும் தொகைபெறக் கீழ்வானில் நிலைகொள்ளாத காலத்துத் தோன்றி வளரும் கதிரொளியின் நிலை என்றவாறாம்.
4

நீலம், கருநீலம்

112. *கதிரெரளி தன்னொடு கவிந்து நிறைந்த*
கடலிடும் தோற்றம் கருநீல் நிறமாம்
வானத் தோற்றமும் வகைபெறு மென்ப.

என்:- நீலம், கருநீலம் இவற்றது தோற்றம் கூறிற்றாம்.

காலையெழும் கதிரொளியும் கவிந்து கவின்தரும் கடலும் கலந்து காட்டிய காட்சியே கருநீல நிறமாம். அக்காலத்து, பரந்த வானில் நிரம்பிய தோற்றம் நீலநிறமெனும் வண்ண வகைபெறும் என்பர்.

நீல் என்னும் நிறப்பெயர் நீலம் என்றாக்கம் பெற்ற பெற்றி யறிக. இதனை, "நீல்நிற விசும்பின் மீனொடு புரைய" என்னும் நற்றிணைப் பாடற் மிகுதியானும், "இருங்கழி மலர்ந்த வள் இதழ் நீலம்" என்னும் அகநானூற்றுப் பாடலடியானும் தெளியலாகும்.

நீலத்தின் ஒரு திறமாம் கருநீலத்தோற்றத்தினைக்காட்டும் வானத்தியல்பினை,

> "*நீலத் தன்ன நீர்பொதிகருவின்*
> *மாவிசும்பு அதிர முழங்கி, ஆலியின்-*
> *ஆர் பெயல் உதவிய கார்செய்காலை*"

(பாடல் - 314)

என அகப்பாட்டுள், அம்மள்ளனார் காட்சியளவையாற் காட்டி யுள்ளமை கருதற்காம்.

வகைபெறுதலாவது, வானம் காட்டும் நீல நிறவகை குறித்ததாம். வெண் முகிலும் தவழா திருக்குங்கால் வெளிர் நீலமாகவும், நீர்பொதி மஞ்சு நிறைந்து நெகிழுங்கால் கருநீல மாகவும் தோற்றங்காட்டும் நிறப் பாகுபாடு உணர்த்திற்றாம். 5

வெண்மை

113. கருவிலா தமைந்து காற்றில் திரிதரும்
உருவெண் மஞ்சும் ஓவிய வெண்மை
பறந்தமென் பருத்திப் பஞ்சும் அமையும்.

எ-ன் :- வெண்மை புலப்பாடுறும் பொருள்நிலை உணர்த்திற்றாம்.

வறிய மேகமும் மென்மைமிகு பஞ்சும் வெண்மை நிறத்தினை உணர்த்திற்றாம்.

"ஈன்று நாள் உலந்த வாலா வெண்மழை" என்பதால் வெளிறிய மேகத்தினையும்,

"வில் எறி பஞ்சியின் வெண்மழை" என்பதால் மென் பஞ்சினையும் அகநானூறு புகட்டியதாம். (பாடல் - 133, 139) 6

பொன்மை

114. குவிந்தெழு கொன்றை நெருஞ்சி ஆவிரை
நிறைதரு மலர்கள் நின்றபொன் நிறமாம்.

எ-ன் :- பொன்மைநிறம் தரும் பூக்கள் நிலை கூறியதாம்.

கொன்றை, நெருஞ்சி, பொன்னாவிரை ஆகிய மலர்களே பொன் மஞ்சள் நிறத்தினைப் புலப்படுத்தினவாம்.

பொன்மை நிறமார்ந்த பூவினர் கொண்டவியல்பால், கொன்றை மரம் பொற்கொன்றை எனச் சிறப்புப்பெயர் பெற்றதாம். 7

கருமை

115. மங்கையர் கூந்தல் மாசிலாக் கண்விழி
துங்கநல் வேழம் தோய்ந்தெழு கார்முகில்
மாய்ந்த நெருப்பு மல்கிய இருளிவை
கருமை அமைவுறக் காட்டிய தோற்றமாம்.

எ-ன் :- கருமைநிறம் காட்டிய பொருள்கள் நிலை கூறிற்றாம்.

கரிய கூந்தல், மாசற்ற விழி, அழகிய யானை, கார்காலத்து மேகம், கரி, இருள் இவைகளே கருமை நிறத்தினை உணர்த்தின.

நீரான் தழல்நிலைமாறிய கரியே மாய்ந்த நெருப்பாகும். மல்கிய இருளென்பது நிலவில்லா வானவெளிநிலை குறித்ததாம்.

கருமுகில் நிலவிய நள்ளிருளின் தோற்றமே மல்கிய இருளெனக் கூறிற்றாம். இதனை,

"உரும் உரறு கருவிய பெருமழை தலைஇ
பெயல் ஆன்று அவிந்த தூங்கு இருள்"

(அகம் - 158)

என்பதனான், இருளின் தோற்றத்திற்கோர் அமைப்பிட்டுக் கபிலர் காட்டுதலினானுமறியலாகும். 8

அரக்குச் சிவப்பு

*116. குறிஞ்சிக் காந்தள் குளத்தெழு குமுதம்
செறிந்தெழு தீக்கதிர் சிவப்பினைக் காட்டும்.*

எ-ன் :- சிவப்பும், திண்சிவப்பும் தோற்றிய பொருள்நிலை கூறிற்றாம்.

குறிஞ்சி நிலத்தின் காந்தள்பூ, அரக்காம்பல், தீக்கொழுந்து இவைகளே சிவப்பின் செறிவை உணர்த்தின.

"அள்ளற் பழனத்து அரக்காம்பல்" என்பது முத்தொள்ளாயிரம். 9

வண்ணங்கொள் வழிமுறை

*117. சொன்ன வியற்கையிற் றோன்றும் நிறங்களின்
வண்ணங் கொள்திறன் வகைபெறக் கூறுவன்.*

எ-ன் :- இயற்கை எடுத்துக் காட்டிய நிறங்களை வண்ணங்களாக வடித்து வகுத்தாக்கும் நுண்தொழில் கூறுவன் என்பதாம். 10

வெண்வண்ணம்

*118. சுண்ணம் தன்னைச் சுருக்கி வடித்துவெண்
வண்ணம் சேர்த்தல் வழக்கி னொருமுறை.*

எ-ன் :- வெண்வண்ணம் ஆக்கும் பொருள்களிலொரு முறை கூறிற்றாம்.

மென்மையும் நுண்மையும் பொருந்திய சுண்ணநீற்றினைக் கிழியில் வடித்தெடுக்க வெண்மை வண்ணம் விளையும். இது, வெண்வண்ணம் ஆக்கும் முறைகளிலொன்றாம். 11

இதுவுமது

119. *முத்துச் சுண்ணம் மும்முறை வடித்திடச்*
சித்திரமெழுத சிறந்தவெண் வண்ணமாம்.

எ-ன் :- சிறந்த வெண்வண்ணம் ஆக்கும் முறை கூறிற்றாம்.

முத்துச் சுண்ணநீற்றினை மூன்றுமுறை கிழியில் வடித்தெடுக்க, சித்திரம் எழுதுதற்காம் தூய மேலான வெண்வண்ணம் துலங்கும். 12

கருமை வண்ணம்

120. *சுடர்ப்பூ வயிரக் கரியுடன் சுட்ட*
அடர்க்கொம் பிவையா லாகும் கருமை.

எ-ன் :- கருமை வண்ணங்கொள்ளும் பொருள்நிலை கூறிற்றாம்

நெய்விளக்கின் சுடரிடும் கரிப்பூ, நிலக்கரி, தீயிலிட்ட வயிர மரக்கரி இவைகளால் கருப்பு வண்ணம் ஆகும். 13

நிலக்கல் வண்ணங்கள்

121. *பொருக்கென விளைந்து புடைத்த செம்மண்*
கருக்கொள் நிலத்தின் கனிக்கல் பலவே.

எ-ன்: கனிப்பொருளாக செம்மண் ணிலவகட்டில் பிறக்கும் வண்ணக் கற்களின் இயல்பு கூறிற்றாம்.

நிலப்படிமக் கருவிலொன்றாய செந்நிற வல்மண் நிலத்தகத்தே பொருக்குக் கற்களாக விளைந்து நிற்கும் பூங்கற்கள் பலநிறத்தன வாகும்,

வல்மண் நிலமே காலவழக்கில் ‘‘ வல்லம் ’’ என்னும் பெயராயிற்று. பூங்கற்கள் — மென்மையான கற்கள். 14

பூங்கல் வண்ணம்

122. அவற்றுள்,

செந்தழல் போன்றது செம்மைக் காகும்
வெளிறிய செம்மை விளங்கும் தாமரை
கருநிறச் செம்மை கருதிய பழுப்பாம்.

எ-ன்: பூங்கற்களில் வகைபெறவிளையும் வண்ணங்கள் இவை யென்பது புலப்படுத்திற்றாம்.

காவிக்கற்களெனப் பெயரிட்டு வழங்கும், பூங்கற்களுள் செம்மை நிறமுள்ள கற்கள் சிவப்பு வண்ணமாக்குதற்கும், வெளிறிய சிவப்பு தாமரை இதழ்நிற வண்ணம் கொள்ளுதற்கும், காவி நிறக் கற்கள் பழுப்பு, அரக்கு ஆகிய நிறங்களை ஆக்குதற்கும் ஆகும். முதிர்இலை நிறம் பழுப்பென்றும், பழுப்புடன் காவி சிவணிச் செறிந்து நிற்பது அரக்கென்றும் முன்னையோர் மொழிவழி குறிக்கப் பெற்றது. 15

நீலவண்ணம்

123. *அவுரிச் சாற்றில் ஆக்கிடும் நீலம்.*

எ-ன்: நீல வண்ணம் தரும் குறுஞ்செடி புலப்படுத்திற்றாம்.

அவுரி என்னும் குறுஞ் செடியின் ஊரற் சாற்றினால் நீலநிறம் ஆக்கப் பெறும்.

" பூங்கறை நீலம் புடைதாழ மெய் அசைஇ " என்பது கலிப் பாட்டாதலின், வண்ணங்களுள் நீலம் தனித்தன்மை பெற்றது அறிதற்காம். 16

நீலம் சேர்க்கும் முறை

124. *அதுவே,*

ஊறல் வடிநீர் உலர்த்தச் சுவறி

நீரல் நிலையில் நீல வண்ணமாம்.

என்: அவுரிச் செடி கொண்டு நீலம் ஆக்கும் முறை கூறிற்றாம்.

அவுரிச் செடியினை நசித்து மிடாவில் இட்ட ஊறல் நீரை வடித்துக் காய்ச்ச அடியிற்படியும் வண்டல் உலர்ந்த போது நீல வண்ணம் நிகழும். 17

செந்நீல் வண்ணம்

125. *சாரும் செம்பை பருத்திச் சாற்றில்*

சேர்ந்த நீலம் சிறந்தசெந் நீலமாம்.

என்: கத்தரிச் செடியிடும் பூவண்ணமாம் கருநீல்நிறம் காட்டிற்றாம்.

கருஞ்செம்பை, செம்பருத்தி, ஆகிய செடிகள் தரும் பூக்களை நசித்தெடுத்த சாற்றில் நீலநிறம் பொருந்தியிருப்பதால் செந்நீல் நிறமெனும் கத்தரிப்பூ நிறம் களிப்புடன் எடுக்கலாகும். 18

மஞ்சள் வண்ணம்

126 *மஞ்சள் கிழங்கும் காவியும் மஞ்சளாம்.*

என்: மஞ்சள் வண்ணங்கொள்ளும் மூலம் கூறிற்றாம்.

மஞ்சள் செடியின் கிழங்கும், மஞ்சள் நிறப்பூங்காவிக்கல்லும் மஞ்சள் நிறமாக்குதற்கு ஆகும்.

பண்டைத் தமிழர், நுண்ணிதினாய்ந்து பெயரிட்ட மஞ்சள் என்னும் றப்பெயரின் வழக்காற்றினை,

“ முற்றா மஞ்சள் பசும்புறம் கடுப்ப ” (நற்றிணை-101) என்னும் தொடர் நனிதே புலப்படுத்தும். 19

பச்சை வண்ணம்

127. பச்சிலைச் சாறே பசுமையும் பச்சையும்.

எ-ன்: பசுமை பச்சை வண்ணங்கள் பெறுமாறு கூறிற்றாம்.

பச்சிலைகளை நசித்துச் சாற்றை வடித்துப் பெறும் படிமச் சாற்றை உலர்த்த பச்சை வண்ணம் பாங்குடனாகும். பசிய இலைச் சாறு பசுமை நிறமும், விளைந்து முதிர்ந்த இலைச்சாறு பச்சை நிறமும் தருமென்பது அறிதற்காம்.

பசுமை என்னும் பண்புச் சொல் நிறப்பெயராகிப் பயின்று வந்துள்ள மொழித்திறனை "புல் வாய்க் கலைப் பச்சை" (பாடல்-166) என்னும் புறனானூற்று வழக்குணர்த்தும். 20

மஞ்சள் வெண் சிவப்பு

128. பாலைப் பரப்பில் பரவிடும் நாக
தாளியின் பூவும் பழமும் முறையே
மேவிடும் மஞ்சள் வெண்சிவப் பாகும்.

எ-ன்: சிறந்த மஞ்சள், வெண்சிவப்பு ஆகிய வண்ணங்களைத் தரும் இயற்கைப் பொருள் கூறிற்றாம்.

பாலைநிலத்தின் பாங்குடைய வறண்ட நிலப்பரப்பில் கள்ளியின் வகையாகிக் கிளைத்துப் பரவும் நாகதாளி எனும் நுண்முள் செறிந்த சப்பத்தியின் பூவும் பழமும் முறையே சிறந்த மஞ்சள், வெண்சிவப்பு ஆகிய வண்ணங்களைத் தருதற்காகும்.

நாகதாளி-நாகத்தின் படம்போன்றகன்ற இலைகளாகக் கிளைக்கும் முள் புதர்ச்செடி. "பரல்தலை போகிய சிரல்தலைக் கள்ளி" என்னும், நற்றிணைப் பகுதியான் (பாடல்-169) புதர்வகைச் செடியினியல்பு புலப்பாடுறும். 21

செஞ்சிவப்பு வண்ணம்

129. செந்தூ ரக்கல் சிறந்த சிவப்பாம்

என்: செந்தூரம் என்னும் நன்சிவப்பு தரும் கனிப் பொருள் கூறிற்றாம்

செந்தூரக்கல்லைக் பொடித்து வடித்துக் கொள்ள, நிற அடர்த்தி மிகுந்த செஞ்சிவப்பு வண்ணம் அமையும். 22

வண்ணக் குழம்பு

130. வண்ணமென் கற்றுகள் வடித்த சாறிவை
கற்குழி யதனில் கணிப்புட னிட்டு
நாழிகை யளவு நசித்து வரைத்து
தூளிகை தன்னால் சுருக்கிச் சேர்த்து
பற்றுடன் இணக்கப் பாங்கமை வண்ணமாம்.

என்: வண்ணக் குழம்பாக்கும் தொழில்முறை கூறிற்றாம்.

வண்ணக் கற்பொடி, வடித்தெடுத்த இலைச்சாறு, இவற்றை கருங்கற்குழிவினில் அளவுடன் இட்டு, குழவியால் நாழிகை யளவு அரைத்து. அரைக்குங்கால் நீரும் பிசின் ஊறல் நீராம் பற்றும் தரமுடன் விட்டரைத்துப் பசைப்பமையும் பக்குவத்தில் பட்டை முகப்புக் கருவியால் சேர்த்தெடுக்க, விரும்பிய தகுதிகளில் வண்ணக் குழம்பு அமையும். அரைத்துக் கூட்டிய வண்ணங்களை குழிசிகளில் அடைத்து வைத்தலும், பயன்படுத்துங்கால் சிறிதளவு பற்றும் நீரும் விட்டு இணக்கிக் கொள்ளுதலும் தொழில்வழிச் செயலாகும். 23

——

ஏ. வண்ண மயக்கியல்

இவ்வியல், வண்ணவகையறிந்து, அவற்றைக் குழம்பாக்கும் நெறிதெரிந்த கலைஞன், மூல வண்ணங்களைக் கொண்டும், கலப்புவண்ணங்களைக் கொண்டும் அளவறிந்து ஒன்றேடொன்று முயங்கச் செய்து கலவை நிற வண்ணங்களைக் கருத்துடனாக்கிக் கொள்ளும் திறனெலாம் காட்டிற்றாம்.

வண்ண மயக்கு

131. கண்ணும் கருத்தும் நிறைகொளும் ஓவிய
வண்ணம் மயக்கும் வகைதனைக் கூறுவன்.

தோற்றப் பொலிவினால், மக்களின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிறைகொள்ளும் ஓவியமெழுதுதற்கமைந்த கலவை வண்ணங்களை ஆக்கும் முறைகளையும் அவ்வவற்றிற்கமைந்த நிறப்பெயர்களையும் முறைமைபெறக் கூறுவன் என்பதாம். 1

மயக்குதல் இன்னதென்பது

132 மயக்கெனும் தொழிற்பா டொன்றுட னொன்று
இணக்கிக் காணும் இயைபின் நெறித்தாம்.


என்: மயக்குதல் என்பதன் பொருள்நிலை விளக்கிற்றாம்.

மயக்குதல் என்னும் தொழிற்பாடு யாதெனின், கருதிய நிறத்தினை உருவாக்குதற்குரியதாக, கலைஞன் அனுபவத்தால் காட்டிய முறையில், வண்ணங்களை ஒன்றுடனொன்று அளவுடன் சேர்த்துக் குழைத்துக்காணும் கலப்பின் செயல் நெறித்திறனாகும்.

ஒன்றேடொன்று என்னாது, ஒன்றுடனொன்று என்று கூறிய இலேசானே, ஒன்றுடன் ஒன்றும், ஒன்றுடன் பலவுமாகிய வண்ணச் சேர்க்கை நடைபெறுதற்குரித் தென்பது புலனாம்.

மயக்கு – ஒன்றில் மற்றொன்று ஒன்றித்து வேறொன்றாதல். 2

எ. வண்ணமயக்கியல்





வண்ணவியற்கை

133. *நிற்பன நிகழ்வன ஆதிய பொருளெலாம்*
பொற்பமை வண்ணப் பொலிவினை யுணர்த்துவ.

எ-ன் :- வண்ணங்களின் இயற்கை இயல்பு கூறிற்றாம்.

உலகின் தரையிடத்து நிலையாக நிற்பனவும், இயங்குவனவுமாகிய தோற்றப் பொருள்கள் யாவையும், தத்தமது இயல்பமைப்பினால், மேன்மையுடன் காட்சிக்கு விளங்கும் பல்வேறுபட்ட நிறங்களின் அழகினைக்காட்டும் இயற்கையின் எழிலுருவங்களாகவே இருப்பதனை எல்லாவுயிர்களும் அறிவுகொள்ள உணர்த்துவனவாக உள்ளன. 3

134. *அவ்வழி,*
கலைஞன் முயன்று கண்ட வண்ண
வகைதனை முறையே வரைதலு மியற்றே.

இயற்கை உணர்த்தியவழி, ஓவியக்கலைஞன் முயன்று இயன்ற அளவில் வண்ணங்களைக் கலவைச் செய்கையாலாக்கிக்கொண்ட நிறங்களின் விரியினைச் சிறிது கூறுவதும் இயல்பாகும். 4

ஐவண்ணம்

135. *தெளிவமை வண்ணத் தோற்றம் மூன்றே.*

எ-ன் :- முதன்மை பெற்ற ஐந்து வண்ணங்கள் கூறிற்றாம்.

இயற்கையாகவும், தெளிவாகவும் அமைந்த வண்ணம் மூன்றேயாம்.

இந்நூற்பா பின்னது நிறுத்தலெனும் உத்திக்கிலக்காகி நின்றது. 5

இதுவுமது

136. *அவைதாம்,*
செம்மை மஞ்சள் சிறந்த நீலமாம்.
பசுமையும் கருமையும் பாங்குடன் சேரும்.

எ-ன்: சிறந்ததும் தொடர்ந்ததும் கூடிய தொகைநிலை கூறிற்றார்.

அவை சிவப்பு, மஞ்சள், நீலம் என்னும் மூன்றாம். இவற்றுடன், பச்சையும், கருமையும் பாங்குடன் சேர்தலால் வண்ணம் ஐந்தெனும் வழக்கு நிலைத்ததாம். 6

ஏழு வண்ணம்

137. *செந்நீல் சிச்சிலி சிவப்புறத் தோன்றலால்*
பெருகிய வண்ணத் தொகைநிலை ஏழாம்.

என்:- ஐந்துடன் மருவிய தொகைநிலை தோற்றிற்றாம்.

ஐந்து வண்ணங்களுடன் செம்மை மயங்கி நிற்கும் சிச்சிலியும், நீலம் மயங்கி நிற்கும் செந்நீலமும் சேர்ந்திட வண்ணவகையமைத் தொகைநிலை ஏழாகும். 7

வண்ணப் பெருக்கம்

138. *திண்மை தன்மை மென்மை எனவாம்*
வண்ணம் ஏழும் வகைமுறை பெறலால்
எழுமூன் றாகி யியலும் என்ப.

என்:- வண்ணங்கள் முத்திறம் பெற்றுப் பெருகும் தொகைவிரி கூறிற்றாம்.

செறிந்ததிண்மை, துலங்கியவியற்கை, வெளிறியமென்மை ஆகிய முத்திறமும் ஒன்றே பெற்று நிற்பதால், ஏழு வண்ணமும் இவ்வகை மூன்றால் உறழ்ந்துப்பெருகி ஒன்றுடன் இருபதாகப் பொருந்தி நிற்கும் நிறங்களாகும் என்று கூறுவர்.

வண்ணம் - தோற்றப்பொலிவுதரும் கருவமைந்த பொருட்குரிய பொதுப்பெயர்.

நிறம் - பொருட் பொலிவின் பொதுத்திறப்பெயர்.

மஞ்சள் - பொருட்பொலிவின் வகைத்திறச் சிறப்புப்பெயர். 8

பச்சை முதலாதல்

139. மூலவண் ணங்கள் மூன்றெனக் காணினும்
பச்சையும் அதன்பாற் பான்மையின் சேரும்.

எ-ன் :- தூயவண்ணம் மூன்றொடு பச்சையும் எண்ணப்பெறும் பாங்கு கூறிற்றாம்.

மூலமானவையென்றும், தனித்தநிறமுடையவை என்றும் காட்டிய மூன்று வண்ணங்களோடு பச்சை நிறமும் தனித்தன்மை பெற்றதாகச் சேரும் என்பதாம்.

பச்சையும் என்ற உம்மையாற் பொருந்திய சிறப்பின்மையும். கூட்டுச்செயலால் நிறமாகும் உண்மையும் குறித்ததாம். இஃது வண்ணத் தொழில்முறை வழங்கிப் போந்ததெனக் கொள்க. 9

மூன்றில் நான்கு

140. மூன்றின் முயக்கால் முகிழ்ப்பவை நான்காம்.

எ-ன் :- முதன்மை நிறங்களின் முயக்கத்தாலாகும் கலப்பு நிறங்கள் கூறிற்றாம்.

மஞ்சள், சிவப்பு, நீலம் ஆகிய நன்னிறங்களின் இணைமுயக்கச் செயலால், பொருந்தித்தோன்றும் கலப்பு நிறங்கள் நான்காகும். அவை சிச்சிலி, செந்நீல், பச்சை, பழுப்பு என்பனவாகும்.

வருஞ் சூத்திரங்களால் இணைக்கலப்புநெறி தெளிதற்காம். 10

கலவைப் பச்சை

141. மஞ்சளில் நீலம் மயங்குதல் பச்சையாம்.

என்:- மயக்குச் செயலால் ஆகும் பச்சைவண்ணம் கூறிற்றாம்.

மஞ்சள் வண்ணத்தில் நீலவண்ணம் இரண்டற மயங்கி நிற்றலால் தோற்றங்கொள்ளும் கலப்பு நிறம் பச்சையாகும் என்பதாம்.

மஞ்சள் வண்ணத்துடன், நீல வண்ணத்தைப் பொருந்துமாறு இணக்கப் பச்சைநிற வண்ணம் தோன்றும் என்னும் செயலாக்கம் புலனாம்.

மஞ்சள் + நீலம் = பச்சை. 11

செந்நீல்

142. சிவப்பொடு நீலம் சிவணுதல் செந்நீல்.

எ-ன்:- வண்ணமயக்கால் உண்டாகும் செம்மைசார்ந்த நீல வண்ணம் சேர்க்கும் முறை கூறிற்றாம்.

சிவப்பு வண்ணத்துடன் அளவிட்டுச் சேர்த்த நீலவண்ணத்தினை இரண்டறக்கலத்தல் செந்நீல் வண்ணம் உண்டாதற்கமைந்த செயலாம்.

சிவப்பு + நீலம் = செந்நீல். 12

சிச்சிலி

143. செம்மையில் மஞ்சள் சிறிதுறச் சிச்சிலி.

எ-ன் :- சிச்சிலி வண்ணம் ஆக்குமுறை கூறிற்றாம்.

சிவப்பில் மஞ்சள் சிறிதுகலத்தலால் சிச்சிலி என்னும் அருண நிறம் தோன்றும்.

சிவப்பு + மஞ்சள் = சிச்சிலி. 13

பழுப்பு வண்ணம்

144. மஞ்சள் சிவப்பு மன்னிய நீலம்
கண்ணிய அளவில் கணிப்புடன் சேர்க்கப்
பழுப்பு வண்ணம் விழுப்புறத் தோன்றும்.

எ-ன் :- பழுப்பு என்னும் நிறம்பெற ஆக்கும் கலப்பு வண்ணமுறை கூறிற்றாம்.

மஞ்சள் வண்ணத்தினை முதன்மையாகக் கொண்டு, அதனுடன் சிவப்பு, சிறந்த நீலம் ஆகிய வண்ணங்களைப் பொருந்திய அளவீட்டில் கணிப்பாகச் சேர்க்க, பழுப்பு என்று பெயர்பெறும் கலப்புவண்ணம் தோன்றும்.

மண்ணிய நீலம் - பொருந்திய திண்ணிய நீல நிறம்.
கண்ணிய அளவு - திட்டமுடன் கொண்ட அளவு.
மஞ்சள் + சிவப்பு, நீலம் = பழுப்பு.

இவ்வளவில், மூன்றில் நான்கு வண்ணங்கள் தோன்றும் மரபு கூறிற்றாம். மேல் மயக்கின் நெறியே பிறவாறமைந்த வண்ண விணக்கங்கள் கூறுவாம். 14

வெண்மை

145. *எல்லா நிறங்களும் எற்பதும் பிறப்பதும்*
வெண்மை என்பதோ ருண்மை யறிப.

எ-ன்:- வெண்மை என்னும் பண்பு சுட்டிய நிறத்தினியல்பு கூறிற்றாம்.

காட்சியான் பெயர்பெற்ற நிறங்கள் யாவையும் ஏற்றற்காம் தன்மையும், அவை தோன்றுவதற்கு முதலாகும் இயற்கையும் பெற்றிலங்குவது வெண்மை என்னுமோருண்மை நிறமாதலின், அதனருவ நிலைத்திறனை, அறிவு நுட்பத்தான் கலைஞனுணர்ந்து, பயன்பெறும் முறையினைத் தொழிலனுபவத்தானறிவன் என்பதாம்.

நிறங்களின் தன்மையும் மென்மையும் வெண்மையின் கூட்டா லாகும். தோற்ற வேறுபாடென்னும் உண்மையும் இதனால் அறிவுறுத்தப்பெறுவதாகும்.

வண்ணம் என்னும் பொதுப்பெயர், சிறப்பு நிலையான் வெண் மைக்கு ஆகிநிற்கும் நுண்மையினை, 'வண்ணக்கடம்பு' என்பதற்கு 'வெண்கடம்பு' என்று நிறஞ்சுட்டிக் கூறப்பெறும் பெரும் பாணாற்று உரையானுணர்க. 15

வெளிர் சிவப்பு

145. *சிவப்புடன் வெண்மை சேர்த்திடத் தாமரை.*

எ-ன்;- வெண் சிவப்பு வண்ணம் ஆக்கும் முறை கூறிற்றாம்.

சிவப்பு வண்ணத்தினைச் சிறிதளவு கொண்டு அதில் வெண்மை வண்ணத்தினை வேண்டிய அளவில் திறமுடன் இட்டு இட்டு கூட்டிச் சேர்க்கத் தாமரை இதழ் நிறமாம் வெளிர் சிவப்பு நிறம் கருதிய தோற்றமுடன் தோன்றும் என்பதாம்.

'சேர்த்து இட', என்னும் இணை ஆக்கச்சொல்லால், சிறிது சிறிதாகச் சேர்த்துக் குழைக்கும் தொழிலருமைச் சுட்டியதாம். 16

வெளிர் நீல்

147 நீலத்தில் வெண்மை நிமிர்பெறக் கூட்ட்
வானநீல் வண்மை வகைபெறக் காணலாம்.

எ-ன்:- நீல நிற வகைகள் ஆக்குந்திறன் காட்டியதாம்.

நீல வண்ணத்துடன் வெண்மை வண்ணத்தை அளவு வகையால், விரும்பிய நிறமாகுமளவிலும், கூட்டிச் சேர்க்க, வானம் காட்டும் வளப்பங்கொள் வெளிர்நீல் வகைகள் தகுதியுடன் உண்டாதலைக் காணலாகும்.

வண்மை — இயற்கையின் வேறுபாட்டால் காட்டும் நீல 17
நிறவகை வளப்பம்.

பசுமை

148 பச்சையில் மஞ்சள் பரிந்திடப் பசுமையாம்.

எ-ன்: பசுமை நிறங்காண் முறைமை கூறிற்றாம்.

பச்சை வண்ணத்தில் மஞ்சள் வண்ணத்தினைப் பகுத்தறிந்து சேர்க்க, இளந்தளிர் நிறமாம் பசுமை நிறம் தோன்றும்.

பரிந்திட வென்ற செயலூக்கம், வண்ணக்குழம்பை ஒன்றுடனொன்று கலக்கும் பொழுதே இணக்கம் பெற்றுப் பசுமை நிறந் 18
தோன்றும் பாங்கு விழைதற்கென்க.

செம்புச்சிவப்பு

149 சிவப்பில் மஞ்சளும் பழுப்பும் குழைக்கும்
கலப்பில் உருவாம் காண்தகு செம்பொன்.

எ-ன்: செம்பின் வண்ணம் சேர்க்கும் முறை கூறிற்றாம்.

சிவப்பு வண்ணத்தில் அரையளவு மஞ்சள் வண்ணமும் காலளவு பழுப்பு வண்ணமும் சேர்த்துக் குழைக்கும் கலப்பில் விரும்பத்தக்க பொன் சிவப்பு உருவாகும்.

காண்தகு என்ற நயப்பான், குறித்த நிறம் காணும் அளவிற்கு, ஏற்ற அளவில் கலவை கொள்ளும் அனுபவம் காட்டிற்றாம்.

உலோகங்கட்கும் பண்டைத்தமிழர் சுட்டிக்காட்டிய பொதுப் பெயர் ‘ பொன் ’ என்பதாகும்.

செம்பொன் என்னும் உலோகமே வழக்கில் செம்பென்று வருதலால், ஈண்டு செம்பின் வண்ணமே செம்புச்சிவப்பெனத் தேர்ந்ததாம். 19

பொன் வண்ணம்

150. *கப்பிய மஞ்சளில் பழுப்பினைக் காட்டவும்*
திப்பிய பொன்னிறம் திகழுத லியல்பாம்.

எ-ன்: பொன் வண்ணங்கூட்டும் விரகு கூறிற்றாம்.

திண்மையான மஞ்சள் வண்ணத்தில், தேறிய பழுப்பு வண்ணத்தினைச் சிறிது கூட்டவும், எழுதிக் காட்டவும் பொன் வண்ணம் புலரும்.

இதனான், வண்ணமயக்கு, வண்ணக்கூட்டாலும் எழுதிக் காட்டும் கைத்திறனாலும் ஆகும் கலைநெறி புலப்படுத்திற்றாம்.

நிறமும் திறமும் நயப்பும் மாசு பெறா மாண்பும் பெற்ற உலோகமே பொன்னெனும் பெயருக்குரியதாகி, வழக்கில் நிலை நிற்பதால், அதற்கமைந்த வண்ணமும் பொன் வண்ணமெனப் புலப்படுத்தலாயிற்றென்க.

பொன்னணிகள், பொன்னிழை, பொன்மேனி முதலாயின வற்றை, வண்ணக்கலப்பாலும், மூலமாக எழுதிய பழுப்பு வண்ணத் தின்மேல், திண்ணிய மஞ்சளும், அதன் சாயலுக்கமைந்த வெண்மை கூட்டிய மஞ்சளும் இட்டும் தொட்டும் பொன்வண்ணம் ஆக்கிக் காட்டும் தொழில் நுட்பமும் இதனால் துலக்கியதாம். 20

திண்சிச்சிலி

151. *சிவப்பில் மஞ்சள் சேர்க்கும் கணிப்பில்*
செஞ்சிவப் பின்திண் செழிப்புறத் தோன்றும்.

எ-ன்: சிச்சிலியின் வளமைக்கு விரகு கூறிற்றாம்.

சிவப்பில் மஞ்சள் வண்ணத்தினைச் சிறிது சிறிதாகச் சேர்க்குங்கால், மூன்றிலோரளவு முனையும் பொழுது கவினுறு சிச்சிலி நிறம் உண்டாகும்.

சிச்சிலி அருண நிற வண்ணமாயமைதலின் அதன் நிற மென்மையும் திண்மையும் கூட்டு வண்ண மஞ்சளைக் குறைத்தும் கூட்டியும் அளவிட்டுக் காணும் முயற்சியானாக்கும் திறன் அறிவுறுத்திற்றாம். 21

வாரண வண்ணம்

152. *கருப்பில் கருநீல் வெண்மை கலந்திட*
மருப்புடை வாரண வண்ணம் மலருமால்.

எ-ன்: யானைநிற வண்ணம் கூறிற்றாம்.

கருப்பு வண்ணத்தில், கருநீல வண்ணத்தினைச் சிறிது கலந்து குழைத்த அளவில் வெண்மையும் சிறிது கூட்டிக் குழைக்க யானைக் குரிய நிறம் அமையும். 22

கரும் பச்சை

153. *பச்சையில் ஆக்கிய பழுப்பும் கருப்பும்*
துச்சிய அளவில் துகலறச் சேர்க்கின்
மெச்சிடும் திண்கரும் பச்சை திகழுமால்.

எ-ன்: கரும் பச்சை காணும் விரகு கூறிற்றாம்.

பச்சை வண்ணத்தில் கலவையாலாக்கிய பழுப்பும், கருப்பும் துளித்துளியாகக் கூட்டிக் குழைக்கக் கரும் பச்சையெனும் கலப்பு நிறம் காணுதற்காம்,

துச்சிய அளவாவது, பழுப்பு கருப்பு ஆகிய கூட்டுதற்கமைந்த இருவண்ணங்களையும், மூலவண்ணமாகிய பச்சையின் நிறம் பெரிதும் மாறுபடாத குறிப்புடன், துளித்துளியாக இட்டுக் குழைக்கும் நுண்செயலாகும். 23

கலப்புக் கருப்பு

154. சிவப்பொடு கருநீல் செறிந்திடக் கருப்பாம்.

எ-ன்: கருப்பு வண்ணம் கலப்பு முறையாலாக்கும் செயல் கூறிற்றாம்.

திண்சிவப்பு வண்ணத்துடன் சமஅளவில் கருநீல வண்ணத்தைச் சேர்த்து மபக்கக் கருப்பு வண்ணம் காணும் என்பதாம்.

காணும் என்னும் உரைப்பொருளால், தீச்சுடரிடும் பூ, நன்கரி, ஆகியவற்றாலாம் கருமை போலாததோர் கருமை வண்ணம் காண்பது உணர்த்திற்று. 24

கருஞ்செவ்வரக்கு

155. கருப்போ டிரட்டி சிவப்பும் பழுப்பும்
காட்டிடக் காட்டும் கருஞ்செவ் வரக்காம்.

எ-ன்: கருஞ்செவ்வரக்கு வண்ணம் கூட்டுமுறை காட்டிற்றாம்.

கருமை வண்ணத்தினை முதலளவாகக் கொண்டு, அதனில் சிவப்பு, பழுப்பு ஆகிய வண்ணங்களை முறை முறையே இரட்டிப் பளவாகக் கூட்டிக் குழைக்க, திண்ணிய செவ்வரக்கு வண்ணம் ஆகும்,

உரையிடை கண்ட தொழிலாக்கச் சொற்களுக்கமைந்த கலைத்துறைப் பொருளுரை:

வண்ணமயக்குச் செயலுக்கு வகுத்துச் சுட்டிய, மயக்கு, கூட்டு, இணக்கு, கலப்பு, சிவண் என்னும் வகையான் முதனிலையளவில் கலைச்சொல்லாக்கமுடன் இடம்பெறும் தொழில் நிலைச்சொற்களுக் கமைந்த பொருள்நுட்பம் யாதோவெனின்,

மயக்கு — குறித்த வண்ணம் முதலளவாகக்கொண்டு நிறம் மாற்று வண்ணத்தை அளவுடன் கூட்டி, இரண்டறக் குழைக்கும் திறன். (மயக்குதல்)

கூட்டு — புதிய வண்ணங்காண. அதற்கமைந்த வண்ணங்களைச் சமனளவாகக் கொண்டு குழைத்தாக்குதல், (கூட்டுதல்)

இணக்கு — ஒரு வண்ணத்தினை நிறமாற்றஞ் செய்யக்குறித்த பிறவண்ணக் கூட்டினைச் சிறிது சிறிதாகக் கையாளும் நயம். (இணக்குதல்)

கலப்பு — மூன்று அல்லது நான்கு வண்ண மூலங்களைத் திட்ட முடன் கலந்து புதிய வண்ணங்காணும் ஆக்கச்செயல்.

சிவணல் — கூட்டு வண்ணத்திற்குரிய நிறங்கள், சேர்த்தபின்னர் தனித்துத் தோன்றாமல் ஒன்றாக இணங்கி, ஒருநிறமாகக் காணும் முயக்கம். (சிவணுதல்) 25

வண்ணப் புதுமை

156. வண்ண வேற்றுமை வகைபெற வேண்டின்
சொன்ன முறையால் பண்ணவே தோன்றும்.

எ-ன்: விரும்பிய நிறங்களை விளைவிக்குபு விரகு கூறிற்றாம்.

கலப்புச் செய்கையாற் கலைஞன் கருதிய வண்ண வகையினைப் பெற விரும்பின், மேலே சொன்ன முறைபோல் அளவறிந்து வண்ணங்களைக் கூட்டிக் குழைக்கும் செயலால், உரிய நிறவண்ணம் உருவாகுமென்பதாம்.

செங்காவியில், மஞ்சள் சேர்த்தலால் பெறும் பொன்னிறமும், பழுப்பில் சிவப்பும் கருப்பும் சிறிது பதிவதால் ஆகும் அரக்குச் சிவப்பும் இவை போன்றன பிறவும் பெறற்காகும். 26

வண்ணக்குழம்பு வகை

157. *நெய்நீர் பற்றெனும் மூவகை நிலையில்*
பொய்தீர் வண்ணம் புலப்படுத் தினரால்.

எ-ன்: வண்ணக்குழம்பு வகைக்கூறு வரைந்து காட்டிற்றாம்.

வண்ணக்கலைஞர், நெய்யினும் நீரினும் பற்றின் பசைப்பினும் முறையாகக் கூட்டிய குற்றமற்ற வண்ணக்குழம்பு மூன்று வகை என்று ஆக்கிப் புலப்படுத்தினர். 27

நெய் வண்ணம்

158. *ஆளிவித் தின்நெய் காழ்மரப் பிசின்*
ஆகிய வற்றுடன் அரக்கும் சிறிதுறப்
பதனுடன் காய்ச்சிய பசைபெறு நெய்யில்
கூட்டிய வண்ணமே காட்டிய நெய்நிலை.

எ-ன்: நெய்வண்ணம் ஆக்கும் தொழில் கூறிற்றாம்.

ஆளிமரவித்தின் ஆக்கிய நெய், குறிஞ்சிநில முதுமரப்பிசின், ஆகியவற்றுடன் அரக்கும் சேர்த்துக் காய்ச்சிய நெய்யில், குறித்த வண்ணப்பொடியைச் சேர்த்துக் கலக்கி இணக்கிய வண்ணக் குழம்பே நெய்வண்ண நிலையென்று காட்டியதாம். 28

நீர் வண்ணம்

159. *சுண்ணமும் வண்ணமும் தூரிகை தோய்தரக்*
கண்ணிய நீருடன் கலக்கநீர் வண்ணமாம்.

என்: நீர் வண்ணம் சேர்க்கும் நுட்பம் கூறிற்றாம்.

சுண்ணப்பொடி வண்ணப்பொடி வேண்டியதொன்றை எழுதும் தூரிகையிற்றோய்கொளும் அளவில், சிறிது பற்றுநீர் பொருந்திய நீருடன் கலந்து கையாளுதல் நீர்வண்ண நிலையாம். 29

பற்று வண்ணம்

160. *பற்றின் பசைநீர் பாங்குடன் சேர்த்தலால்*
பெற்றது பற்றின் வண்ணப் பெயரே.

என்: பற்று வண்ணத்தின் பாங்கு கூறிற்றாம்.

பற்றெனும் மரப்பிசின் ஊறிய பசைப்பு நீரில் அளவிட்டு அரைத்துச் சேர்த்து இணக்கிய வண்ணக்குழம்பே பற்றுவண்ண மெனும் பெயர் பெற்றதாம். 30

பற்று இதுவென்பது

161. *பற்றெனப் படுவது மரப்பால் பிசினெனும்*
ஒற்றுமைப் பெயராம் ஒருபொருட் குரியன.

என்; பற்று என்னும் பொருட்கு விளக்கம் கூறிற்றாம்.

பற்று என்று பண்பமைதிபெறும் பொருள் யாதெனின், மரப்பால், பிசின் என்றெலாம் வழக்கில் குறிக்கப்பெறும் ஒருபொருட் குரிய பல்பெயராம்.

முதிர்ந்த காழ்மரத்து வெளிப்படும் ஊட்டக் கழிவுப் பொருளாம் பிசின், பசைப்புடன் பொருள்களில் பற்றுதலால் பற்றெனப் பெயர் பெற்றதென்க.

பற்று -- பற்றுதலமைந்த பசைப்பு. 31



தஞ்சைப் பெரியகோவில் ஓவியம்

கருவியியல்

8





அ. கருவியியல்

இவ்வியல் — கலைஞன் ஓவியமெழுதுங்கால் கையாளும் கருவிகள் இன்னவை என்பதும், அவற்றின் உறுப்பும், உருவாக்கும் செயலும் திறனும் புலப்படுத்திற்றாம்.

162 கருவில் திருவுடைக் கலைஞன் கைக்கொளும்
கருவிக ளின்னன காட்டுவன் நன்றே.

பிறப்பானும் சிறப்பானும் மரபுவழித்தொடரும் மாண்பமைக் கலைஞன், ஓவியம் எழுதுங்கால் கையாளும் கருவிகள் இத்தகையன என்பதை விளக்கமாக் குறித்துக் காட்டுவன், 1

வரைதல் — கருவிகள்

163. மஞ்சள் கரிக்கோல் மலிவுறு நிறங்கள்
குஞ்சத் தூரிகை குலவிய வட்டிகை
மன்னிய வண்ணப் பலகை மாண்பமை
இன்னன பிறவும் ஏற்புடைக் கருவியாம்.

எ-ன்: வரையும் தொழிற்கமைந்த கருவிகள் தொகுத்துரைத்திற்று.

மஞ்சள் கிழங்கு, கரிக்கோல், பல்வகை வண்ணங்கள், மென்மயிர் பொருந்திய சுரையிட்ட எழுதுகோல், வண்ணம் குழைக்கும் கிண்ணம், வண்ணங்களை மயக்கும் கைப்பலகை ஆகியவற்றுடன் பிறகருவிகளும் கலைஞன் செயற்படுங்கால் கையாளுதற்குரிய இன்றியமையாத கருவிகளாகும்.

" வட்டிகை, மணிப்பலகை, வண்ணநுன் துகிலிகை " என்பது சிந்தாமணி, 2

இதுவுமது

164, சட்டம் முலை விட்டம் நூலெனத்
திட்ட அளவைகள் தேர்தலு முரித்தே.

எ-ன்: அளவைகட்கமைந்த கருவிகள் கூறிற்றாம்.


அளவுடனமைந்த மரச்சட்டம், செங்கோணச்சட்டம், வெள்ளிய நூல் ஆகிய துணைக்கருவிகளும், ஓவியம் வரையும் இடத்தையும் பொருள்நிலைகளையும் வரையறை செய்தற்குக் கையாளும் கருவிகளாம். மேலைச்சூத்திரத்து பிறவு மென்ற மிகையான் குறித்தது கூறிற்றாம், 3

துகிலிகை உறுப்பு

165. கோல்சுரை குஞ்சி குறித்த மூன்றும்
துகிலிகை உறுப்பெனச் சொல்லுதல் மரபே.

எ-ன்: தூரிகை, துகிலிகை என்றெலாம் பெயர்பெறும் மயிர்க்குஞ்சத்திரள்கோல் உறுப்புகள் கூறிற்றாம்.

எழுதும் தொழிலால் இலங்கும் ஓவியக்கலைக்கே உரிய முதற்கருவியாகும் தூரிகை துகிலிகை எனும் எழுது கருவிக்குரிய உறுப்பு மூன்றாகும். அவை, கோல், சுரை, மயிர்க்குஞ்சிப்பு என்னும் மூன்று பகுதிகளாமெனச் சொல்லுதல் மரபாகும். 4





கோல்

166. மெல்லிய காழ்கொம் பதனை மேவியே
கொள்ளும் சுரைக்கமை குச்சிபோற் சீவியே
தெள்ளிதின் அமைத்தல் தேர்ந்தநற் கோலாம்.

எ ன்: துகிலிகைக் கோல் கொள்ளும் தொழில் கூறிற்றாம்.

மெல்லிய வலிய நேரான மரக்கொம்பொன்றினை ஆக்கிக் கொண்ட சுரையின் அடிப்புறம் பொருத்தும் அளவுடையதாக செப்பமாக வடித்துக்கொள்ளுதலே தூரிகைக்குத் தேர்ந்த நற்கோலாகும். 5

சுரை

167. உலோகத் தகட்டால் உருள்பெறும் சுரையே

எ-ன்: சுரை எனும் உறுப்பியல்பு கூறிற்றாம்.

துத்தநாகம், பித்தளை ஆகிய உலோகத்தகடுகளிலொன்றால் ஒருபுறம் குவிந்ததாகவும், மறுபுறம் கோலைப் பொருத்துதற்கு அளவுடையதாகவும் செய்தமைத்துக்கொள்ளும் சுரையின் தோற்றம் திரளுருவாக அமையும். 6

குஞ்சத்திரள்

168. புறவிற் பயிலும் புறக்கோட் டணில்வால்
கான்செங் கீரி கவின்பெறு மென்மயிர்
குஞ்சி யாகக் கொள்ளுதல் வழக்காம்.

எ-ன்: தூரிகையின் சிறப்புறுப்பாம் குஞ்சத்திரள் ஆக்குமாறு கூறிற்றாம்.

புதர்களில் வாழும் முக்கோட்டுடன் திகழும் அணில் வால் மயிர், காட்டுச் செங்கீரியின் மென்மையான மயிர் ஆகியவற்றைத் தூரிகையின் குஞ்சத்திரளாகக் கொள்ளுதல் சிறப்பமைந்த வழக்காகும். 7

துகிலிகை ஆக்கல்

169. *வாய்த்த குஞ்சித் தூவியைச் சுரையில்*
வாகுடன் பொருத்தி வாங்கிய பின்னர்
அசைவுறா தரக்கிட் டடிக்கோ லிணைப்ப
இசைவுறு துகிலிகை இயையும் என்ப.

எ-ன்: துகிலிகை ஆக்கிக்கொள்ளும் தொழில் புலப்படுத்திற்றாம்.

ஆய்ந்து தேர்ந்த அளவுடன் அடுக்கித் திரட்டிக் கட்டிய மயிர்க்குஞ்சத்திரளை, சுரையின் அகன்ற வழியே முனைபுகுத்தி வெளிவரச்செய்து, இறுக்கமான நிலையில் பின்புறம் காய்ச்சிய அரக்கிட்டுக் கோலினையும் அப்பொழுதே இணைக்க, ஓவியம் எழுதுதற்கமைந்த தூரிகையெனும் துகிலிகை உருவாகும்.

"ஓவமாக்கள் ஒள்ளரக்கூட்டிய துகிலிகை" என்பது நற்றிணை. 8

கோல் தூரிகை

170 *கோலில் சூழ்மயிர் கூட்டிப் பிணைக்க*
நாளும் பெறுமே நயனுடைத் தூரிகை.

எ.ன்: சுரையின்றி உருவாக்கும் துகிலிகை கூறிற்றாம்.

கோலின் நுனியில் மயிரினைத் தொகுப்பாகப் பிணைத்து நூலினால் இறுகப் பிணைக்க, நாள்தோறும் தொழிலுக்கேற்பப் பயன்படுத்தப்பெறும் நயனமைந்த தூரிகை உருவாகும். 9

குஞ்சத்திரள் வகை

171. *பித்திகை அரும்பின் பிறப்பென வமைவது*
எத்திறத் தாலும் இயலும் துகிலிகை.

எ-ன்: பிச்சிப்பூவின் இளவரும்புபோல் அமையும் குஞ்சத்திரளின் சிறப்பு கூறிற்றாம்.

தூரிகைக்கமைக்கும் குஞ்சத்திரள்வகைப் பலவாகும். அவற்றுள், பித்திகை இள அரும்பின் வடிவினில் அமைவது கலைஞன் கருதியவாறு எழுதுதற்குரிய நளினமெலாம் பெற்றிலங்கும் நுண்மை மிகுந்ததாகும்.

பித்திகை - பிச்சிப்பூ. '' வண்ணநுன் துகிலிகை '' என்பது சிந்தாமணி. '' பித்திகை கோதை செப்புவாய் மலரவும் '' என்று பித்திகைப் பூவினைப் பெருங்கதை - உஞ்சைக்காண்டம் குறிக்கும். 10

நனைநிலை

172. *குல்லை நனைபோல் குவிந்து அருகிடும்*
நல்லுரு வன்ன நயப்பதும் நனிதே.

எ-ன்: வெட்சி அரும்பின் வடிவில் உருவாகும் திறன் கூறிற்றாம்.

குல்லை என்னும் வெட்சிச்செடியின் சிற்றரும்பு போல் குவிந்து நுனி அருகிட்டு நிற்கும் நல்லவடிவுடைய குஞ்சத்திரளைக் கலைஞன் ஆக்கிக்கொள்ளல் நயனமைந்த தூரிகைக் குரியதாகும். 11

முகைநிலை

173. *முல்லை முகைபோல் முகிழ்த்துக் குவிந்த*
நல்லியல் தூவி நலமலி சிறப்பாம்.

எ-ன்: முல்லை முகைபோன்ற வடிவில் அமைந்ததன் சிறப்பு கூறிற்றாம்.

முல்லை அரும்பென முகிழ்த்துக் குவிந்த அழகுடனமைந்த தூவி, கலைஞன் வாகுடன் எழுதுதற்குரிய மென்மைமிகு தூரிகையாம். 12

மலர்நிலை

174. *மல்லிகை மலரும் காலத் தவிழ்நிலை*
கொள்ளவே தூவி குறிப்பது திறனாம்.

எ-ன்: மல்லிகைமுகை, கட்டவிழும் பருவத்து உருவிலாக்கும் திறன் குறித்ததாம்.

மல்லிகை அரும்பு மாலைக்காலத்து இதழவிழ்க்கும் தோற்றம் போன்று குஞ்சத்திரளைக் குறிப்புடன் கலைஞன் அமைத்துக் கொள்வது திறனமைந்த தூரிகையாம். தூவி-தூரிகை. 13

வரி மட்டை

175. *பட்டை யெழுதப் பழுதிலா ஈந்தின்*
மட்டை மிதிநுதி வழக்கிற் றென்ப.

எ-ன்: பட்டை வரி எழுதுதற்காம் மட்டை இனம் குறித்ததாம்.

பட்டையாக வரியெழுத, கெடுதலில்லாத ஈந்தின் மட்டைத் தண்டினைத் துணித்து ஒரு முனையினை நசித்து மென்மையாக்கிக் கொள்ளுதல் மக்கள் வழக்கில் மலிந்து நிற்கும் தூரிகையாம். 14

இதுவுமது

176. *எழுதாழை விழுது ஈந்தின் கதிர்த்தாள்*
பழுதிலாப் பிரப்பிவை பாண்மையி னுரிய.

எ-ன்: கோடும் வரியும் குறித்தவாறெழுதுதற்காம் பொருள்கள் கூறிற்றாம்.

சுவரில் வரியோவியம் எழுதுதற்கு, தாழைவிழுது, ஈந்தின் குலைக்கொம்பு, மெல்லிய பிரப்பங்கோல் ஆகியவை முறையாகப் பயன்படுத்துதற்குரியவாம். இவற்றை அளவுடன் துணித்து, ஒரு நுனி நசித்து மென்மையான நிலையில், தூரிகையாக்கிக் கொள்ளல் அமைப்பாகும். 15

வண்ண வட்டில்

177. *சீனமண் குடுவை சீர்பெறு மண்ணகல்*
ஆனனல் லாடியால் அமைந்த வட்டிகை
ஏனமா யமைந்த குழிவைக லின்னன
வண்ணம் குழைக்கும் வட்டிகைக் கேற்றவாம்.

எ-ன்: வண்ணம் சேர்த்தற்கும் குழைத்தற்கும் பொருந்திய குழிசி வகை கூறிற்றாம்.

சீனதேயத்து வெண்களிமண்ணால் செய்த குடுவை, சிறப்பாகச் சுட்டெடுக்கப்பட்ட மண்குழிவை, ஆடியால் அமைக்கப்பட்ட கிண்ணம், குழித்த உலோகக் கலங்கள், இவைபோன்ற பிறவும், கலைஞன் வண்ணம் குழைக்கக்கையாளும் வடிவமைந்த ஏனங்களாகும். சீனக்குடுவை - பீங்கான் குடுவை. மண்குழிவை - அகல். ஆடி - கண்ணாடி. 16




சி.கே.

வழக்கியல்

9



கூ. வழக்கியல்

இவ்வியல் தண்டமிழ் நாட்டகத்துப் பண்டைய ஓவியக்கலைஞர் காலவளர்ச்சிக்கேற்பக் கணித்தெழுதிய ஓவியமரபு, அதன் வளர்ச்சி, ஒப்பு, திறம் ஆகிய ஒன்றிய வழக்கினைத் தேர்ந்து தெளிந்து புலப்படுத்திற்றாம்.

178. *தொல்லியற் கலைஞர் தெள்ளிதின் எழுதிய*
நல்லிய லோவியம் நாட்டுவன் குறித்தே

என்: பண்டைத் தமிழகத்து ஓவிபக்கலைஞர் பாங்குடன் எழுதிய ஓவியங்களை இடஞ்சுட்டிக் குறிப்பதாம்.

பண்டைத்தமிழகத்து ஓவியக்கலைஞர், தமது தன்குறிப்பானும் பிறர் விருப்பானும் தெளிவமைந்த காட்சிகளாக எழுதிவைத்த மேன்மை பொருந்திய ஓவியங்கள் இன்னனவென்று முறைபெறக் காட்டி நிலைபெறச் செய்வன். 1

வரலாறு

179. *நெறியிலார் கொடுமையும் சமயப் பூசலும்*
அறிவிலார் செய்கையும் அழித்தன போக
காலமும் சாரலும் கரைத்தன வொழிய,
நின்றன கண்டும் நிகழ்ந்தன கேட்டும்,
தண்டமிழ்ப் புலவோர் சாற்றிய கூற்றும்,
கொண்டே வோவிய வழக்கியல் கூறினம்.

என்; தமிழக ஓவியக்கலைக்கமைந்த வரலாற்றை வுணர்த்தும் வழக்கிற்கு முகவுரை கூறியதாம்.

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

அறனெறிப்படாத தீயோரின் கொடுஞ்செயலாலும் சமயம் வளர்த்தார் வளர்த்த சழக்கினாலும், கலையறிவு பெறாதாரின் கைவாய்ப்பட்ட கடுஞ்செயலாலும் சிதைந்தன போக காலநிலையானும் கடும் மழைச் சாரலினாலும் கரைந்து கரந்தழிந்தன ஒழிய, தமிழகத்தில் எஞ்சியதாக ஆங்காங்கே இருப்பனவற்றை முயன்று கண்டும், அவை பற்றிய வரலாற்றைக் கேட்டறிந்தும், பண்டைத் தமிழ்ப் புலவோர் இலக்கிய வழி புலப்படுத்திய செய்திகளைக் கற்றுணர்ந்தும், பெற்ற கலைத்திறனைக் கொண்டும் தமிழக ஓவிய வரலாற்று வழக்கியலை உணர்ந்தும் தெளிந்தும் கூறினம். 2

கொல்லிப் பாவை

180. *கொல்லிக் குடவரைக் கடவுளன் எழுதிய*
நல்லியற் பாவையும் நலமலி வோவியம்.

கொங்குநாட்டு கொல்லிமலையில் செயற்கரிய செய்த சித்தன் உயிர்ப்புடன் எழுதிய பெண்மை நலமிகு கொல்லிப்பாவை, கலைத்திறன் நிறைந்த பண்டைத் தமிழக ஓவியமாகும். 3

அண்ணல் வாயில்

181. *அண்ணல் வாயில் குன்றகக் குடவரை*
வண்ண வோவியம் வழக்கி லுயர்ந்தது.

பாண்டி நாட்டு வடவெல்லைக் கண்ணமைந்த சிற்றண்ண வாயில் குன்றகக் குடை வரையில் எஞ்சி நிற்கும் அழகிய வண்ணவோவியங்கள் தமிழக வழக்கிலுயர்ந்தனவாகும். 4

ஆனைக்குன்று

182\. ஆனைக் குன்றின் அரும்பிடர்ப் பாழியில்
அருங்கலை மிகவே ஆக்கிய சாரணர்
எழுதிய தெய்வ எழிலமை காட்சிகள்
பழுதிலா வோவிய வழித்தென மொழிப.

கூடல் நகர்க்கு வடதிசையெழுந்துள்ள ஆனைக்குன்றின் பிடர் போன்ற முகட்டிலமைந்த பாழியில் சமணக் கலைஞரால் எழுதப் பெற்ற தெய்வக் காட்சிகள் பண்டைத் தமிழகத்தின் பழுதிலா ஓவியக்கலையின் வழித்தொடர்ந்த கைத்திறனென்று கூறுவர். 5

பழமுதிர்ச்சோலை

183\. பழமுதிர் சோலைக் குன்றக் குவட்டில்
அழகுடன் நின்றதும் அருகரின் ஓவியம்.

வழுதியர் வையையாற்றுக்கு வடதிசை, பழமுதிர் சோலை சூழ்ந்திலங்கும், திருமால் குன்றத்தின் உச்சிச் சிறையகக்குவட்டுக்கு வடவரையில் விளங்கிய ஓவியம் அருகக்கலைஞரின் அரிய கலைத் திறனாகும். 6

குன்றகக்குடி

184\. குன்றகக் குடியில் பாண்டியர் குடைதளி
நின்ற தெய்வக் காட்சிகள் நிலைப்புடன்
என்றும் திகழும் எழிலோ வியமாம்.

குன்றக்குடியில், பாண்டியர் குடைவித்த குடைதளியில் நின்ற கோலத்தில் உருப்பெற்றொளிரும் தெய்வக்காட்சிகளின் மேல்நிலைப் பமைந்ததாக என்றும் திகழுமாறு எழுதப்பெற்றுள்ள வண்ண வோவியம் பாண்டியர் காலக் கலைச்சிறப்பாகும். 7

பரங்குன்று

185. *பரங்குன் றதனில் பாங்குடன் நின்ற*
எழுத்தமை மண்டப மிலங்குமா றெழுதிய
சுவரோ வியமும் சொல்லுதற் குரித்தே.

முருகனுறையும் பரங்குன்றத் தாள்வரையில் நின்ற மண்டபம் முழுவதும் விளக்கமுடன் வண்ணத்தால் எழுதப்பெற்ற சுவரோவியம், தமிழகக் கலையின் தொன்மையினைப் புகழ்ந்து சொல்லுதற்கு உரித்தாகும். 8

அமணர் குன்று

186 *கூடல் குடக்கது குமைந்தெழு குன்றகம்*
அமணக் கலைஞர் சமைத்த மேனிகள்
அணிபெற நின்றதும் அழகமை திறனுடை
வண்ணச் சித்திர வழித்தா மென்ப.

மதுரைமாநகரின் மேற்கே எழுந்துள்ள குன்றின் மேற்குவட்டில், சமணர் உருவாக்கிய தெய்வத்திருமேனிகளின் மீது அன்று தீட்டப் பட்டிருந்த அழகமைந்த வண்ணங்கள், பண்டைத்தமிழகச் சித்திரக் கலையின் சிறந்த வழிமுறையினைக் கொண்டதாகும் என்பர். 9

கழுகுமலை

187. *கழுகு மலையிற் கவினுறச் சமணர்*
பழுதற வெழுதிய பாங்கமை வோவியம்
தமிழக வழக்கின் தலைமைத் தாகும்.

தென்பாண்டி நாட்டுக் கழுகுமலையில் வாழ்ந்த சமணக்கலைஞர் அமைத்துள்ள சிற்பங்களின் உரு விளங்குமாறு எழுதிய வண்ண வோவியம், பண்டைய பாண்டிநாட்டு ஓவியவழக்கின் தலைமை நெறியாகும். 10

வீரசிகாமணி

188. நேமி நாதரின் நியமச் சாரணர்
வீர சிகாமணி விளங்கும் குன்றகப்
பாழிக ளைந்தினும் பரிவுட னெழுதிய
வட்டமை எழுத்தும் வண்ணவோ வியமும்
பாண்டிய நாட்டின் பண்டைய வழக்கினைக்
கொண்டெழும் பாங்கெனக் குறித்தலும் வழக்கே.

பொதியின் சாரல் புகுந்துலாவும் நாட்டில், வீரசிகாமணி என்னும் சிறப்புப் பெயரினைப் பெற்று விளங்கிய நேமிநாதரின் சமண சங்கத்துச் சாரணர் உறைந்த காலத்துப் பெற்ற பெயராம் வீரசிகாமணிக்குன்றகப் பாழிகள் ஐந்தினும், அக்கலைவல்லார் பொறித்த வட்டெழுத்துக் கல்வெட்டும், வண்ணவோவியமும், பண்டைய பாண்டிய நாட்டின் வழக்கினைக் கொண்டெழுதிய பாங்குடையன என்று கலையறிவு மிக்கார் குறித்தலும் வழக்கின்பாற்பெறும். 11

திருமலைக்குடவரை

189. தென்தமிழ் நாட்டுத் திருமலை புரத்தில்
தென்னவன் குடவரைத் திகழும் ஓவியம்
அன்னவன் முன்னோர் அளித்த வழித்தாம்.

குமரி நாட்டகத்துத் திருமலைபுரத்தில், மன்னன் பாண்டியன் மாண்புடன் அமைத்து அழகூட்டிய குடவரைக் கோயிலில் எழுதப் பெற்ற வண்ணவோவியம், முன்னை முடிமன்னர் முனைந்து வளர்த்தளித்த ஓவியக் கலையின் ஒரு திறனாகும். 12

குமரிக்கோட்டம்

190 குமரிப் பெருந்துறைக் கோட்டம் நிறைவுற
வழுதியர் எழுதிய வளமிகு வோவியம்
தென்கடல் மடித்த தெளிதமிழ் நாட்டில்
வழக்குட னமைந்த வழியென லாகும்.

முக்கடல் முயங்கும் குமரிப்பெருந்துறைக் கோட்டம் நிறைவுபெற பாண்டிய மன்னர் எழுதச் செய்த கருத்தும் வண்ணமும் கவினுடன் விளங்கிய பழைய ஓவியங்கள் கடல்கொண்ட தமிழகத்து மக்கள் வளர்த்த ஓவியக்கலையின் வழக்குடனமைந்த வழிபெறு மென்று கூறலாகும். 13

பொதியல் தாள்வரை

191. தென்றல் பொதியல் திகழும் தாள்வரை
அம்பலம் விளங்கும் அழகிய வோவியம்
உம்பர் உலகென உணர்த்தும் மாட்சியால்
இம்பர் ஞாலத்து எழிலோ வியமாம்.

தென்றலிளங்காற்றைத் தன்னகத்தே பொதிந்தளிக்கும் மாமலையின், அருவி வீழ்தடத்துத் தாள்வரையிடத்தே விளங்கும் தாமிர அம்பலத்துளெலாம் வரையப் பெற்ற அழகியவோவியம். தெய்வவுலகமே வந்தமைந்ததெனவுணர்த்தும் மேன்மையினால் மானுட உலகத்தின் எழிலோவியமாகத் திகழும். 14

ஈழக்குன்று

192. கடல்சூழ் ஈழக் கவின்மிகு நாட்டின்
அடல்மிகு வேந்தர் மிடல்பெற வெழுதிய
சிகரியக் குன்றின் சிறப்பமை நங்கையர்
ஆழிகொள் தமிழகம் அளித்தநற் கொடையாம்.

கடலால் சூழப்பட்ட இலங்கையெனும் இயற்கையழகு மிகுந்த நாட்டின், வலிமை மிகுந்த மன்னர், தமது ஆற்றலைப் பிறர் அறியுமாறு எழுதச் செய்த, சிகரியக்குன்றின் தலைமீதமைந்த மாளிகைச் சுவரோவிய மங்கையர் காட்சிகள், கடல்கொண்ட பழந்தமிழ் நாட்டில் விளங்கிய வண்ணவோவியக் கலையளித்த கொடையாகும்.

15



பருத்திக்குன்று

193 பருத்திக் குன்றில் பாங்குடன் சமணர்
இருத்திய வோவியம் எழிலெனக் கூறுப.

தொண்டை நாட்டகத்துப் பருத்திக்குன்றில் சிறந்த கலைத் திறனாகச் சமணக்கலைஞர் நிலைபெறவெழுதிய அருகதேவரின் வரலாறுணர்த்தும் வண்ணவோவியக் காட்சிகள் எழில் மிகுந்தன வென்று கூறுவர். 16

மல்லை

194. பல்லவர் மல்லையிற் பாங்குடன் அமைத்த
கல்லகக் குடைவரைக் காட்சிக ளெல்லாம்
ஓவியத் திறனுடன் ஒளிர்ந்தன வென்ப.

பல்லவ மன்னர்கள் மாமல்லபுரத்தில் பல்வேறுபட்ட வடிவில் குடைவித்த தளிகளில் தோற்றமளிக்கும் காட்சிகளெல்லாம் ஓவியம் எழுதப்பெற்ற ஒப்பனைத் திறனுடன் விளங்கின என்று கூறுவர். 17

பனைமலை

195. பனைமலைக் கோயிலின் பல்லவ ரோவியம்
நினைவினுக் கினிய நிலைபெறும் காட்சியாம்

தொண்டை நாட்டிலுள்ள, பனைமலைமேல் பல்லவரெழுப்பிய கற்றளியில், அக்காலக் கலைஞர் அழகுமிக வெழுதியுள்ள வண்ண வோவியம் இன்றும் எஞ்சி நின்று அக்காலக் கலைத்திறனை நினைவு செய்தற்கினியதாக நிலைபெற்ற காட்சிகளாகும். 18

கடைக்கோடு

196. வடதமிழ் நாட்டுக் கடைக்கோ டதனில்
இடம்பெறு பாழியு ளிலங்கும் ஓவியம்
அண்ணல் வாயில் அருகர் வழித்தாம்.

வடதமிழ்நாட்டு மலையாம்பட்டு ஆர்மாமலையெனும் கடைக்கோட்டு மலைப்பாழியில், சமணரால் எழுதப்பெற்ற வண்ணவோவியம், சிற்றண்ணவாயிலில் அருகர் வளர்த்த ஓவியக்கலை வழியினைப் பின்பற்றியதாம். 19

வஞ்சி

197. வஞ்சியில் சாக்கியர் வரைந்த வோவியம்
எஞ்சிய புகழ்பெறும் என்மனார் புலவர்.

சேரநாட்டு வஞ்சிமாநகரில் புத்தநெறியினர் எழுதிய தெய்வக் காட்சிகள், சிறந்த புகழ்பெறும் என்று புலமைபெற்றார் புகழ்ந்தனர். 20

குடநாட்டம்பலம்

198. குட்டுவர் கோதை குறிப்புட னமைத்த
குடநாட் டம்பல மெல்லாம் திகழும்
கோட்டோ வியமும் வண்ணவொப் பனையும்
நாட்டிய வோவிய நற்றிற மென்ப.

குடநாடெனும் சேரநாட்டை ஆட்சிசெய்த குட்டுவன், கோதை என்னும் இருபெரு மரபினராய மன்னர்கள் ஆட்சியில் அங்கங்களாக அமைந்த அம்பலங்களில் அழகூட்டவெழுதிய கோட்டோவியங்களும், வண்ணங்களால் ஒப்பனை செய்த காட்சிகளும் பண்டைத் தமிழகக் கலைஞர் நிலைபெறச் செய்த ஓவியக்கலைக்கமைந்த நல்ல திறனென்று கூறுவர். 21

எறும்பியூர்

199. வித்தக மாக விளைந்த வெறும்பியூர்
சித்திர கூடமும் செப்புதற் குரித்தென
கற்பொறிப் பதனால் கணித்திட லாகும்.

சோழநாட்டில், இறைவனின் அருள் திறனால் தோன்றிய எறும்பியூர் குன்றின்மேலமைந்த சித்திரக்கூடமும் சோழர்கால ஓவியக் கலையின் உயர்வாக அமைந்திருந்ததென்பதனை அங்குள்ள கல்லெழுத்துக்கள் தரும் செய்திகளால் கணித்துக் காணலாகும். 22

பூம்புகார்

200. பூம்புகார் தன்னில் பொலிவுட னெழுதிய
வெண்சுதை விளக்கம் வித்தகம் பெறுமே.

பூம்புகார் நகரிலமைந்திருந்த மனைகளில் அழகுடன் எழுதப் பெற்றிருந்த சுதையோவியங்கள், பண்டைய ஓவியக்கலைஞரின் கைத்திறனைப் பெற்றிருந்தன. "வெண்சுதை விளக்கத்து வித்தகரியற்றிய கண்கவர் ஓவியம்" என்பது மணிமேகலை. 23

பதியிலார் இல்லம்

201. கெண்டை விழியால் உள்ளம் கொண்ட
பண்டைத் தமிழகப் பதியிலார் நிலவிய
இல்லச் சுவரெலாம் எழுதிய ஓவியம்
கண்டவர் விழையும் கருத்தமை கலையாம்.

பண்டைத் தமிழகப் பதியிலார் மனைகளில் எழுதப்பெற்றிருந்த வண்ணவோவியக் காட்சிகள், ஆடவர் உள்ளத்தைப் பறித்து அவர் பால் விழைந்து நிற்கச்செய்யும் கருத்துணர்த்தும் ஓவியங்களாகும். 24

சந்திரலேகை

202. சந்திர லேகைச் சுவரோ வியமும்
எங்கும் பெருகிய இயல்பிற் றாகும்.

முத்தரையர் ஆட்சிசெய்த சந்திரலேகை எனும் நகரிலுள்ள கற்றளிச் சுவரிடத்தே எழுதப்பெற்ற வண்ணவோவியம், நாட்டில் பெருவழக்கில் நிலவிய கலையினியல்பைப் பெற்றதாகும். 25

தஞ்சைச் சோழர்

203. வெற்றேனப் புகழ்மிகும் இராச ராசன்
தஞ்சையி லமைத்த தக்கண மேருவாம்
கற்றளிக் கருவரைச் சுற்றிற் காட்டிய
நற்றிற வோவியம் நனிசிறந் தனவாம்.

மிகுந்த வெற்றிகளினால் புகழ்மிகுந்திருந்த இராசராச சோழன், தஞ்சை மாநகரில் எழுப்பிய தக்கண மேருவெனும் கற்றளியாம் இராசராசேச்சரத்தின், கருவறைத் திருச்சுற்றுச் சுவரிடமெல்லாம் நல்ல சிறப்பமைந்த அக்காலச் செய்திகளை நினைவு செய்யுங் கலைக் காட்சிகளாக வரையப்பெற்ற வண்ணவோவியங்கள், கலைத்துறையில் மிகவும் சிறந்த இடத்தினைப் பெறுவனவாகும். 26

மாளிகை ஓவியம்

204. செந்தமிழ் மன்னர் சீர்பெற வகுத்த
மாளிகை வனப்புற வரைந்தன ரோவியம்.

செந்தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்கள் சிறப்புப்பெறுமாறு சிற்பியரைக்கொண்டு பகுதிப்பாடுடையதாக அமைந்த மாளிகை அழகுபெற ஓவியக்கலைஞரைக் கொண்டு ஓவியக் காட்சிகளை வரையச் செய்தனர். 27

205. *அவ்வழி,*
உரைபெறு சித்திர மண்டப மென்றொரு
வரைபெறு கூடமும் வகுத்தனர் நன்றே.

அம்முறையே, புகழ்பெற்ற சித்திரமண்டபம் என்ற ஒப்பற்ற பெயர் பெற்றதாக திட்டமிட்டமைந்த கூடத்தினையும் மாளிகை மனைநூல்வல்லார் தனித்து நன்முறையில் வகுத்திருந்தனர். 28

நாயக்கர் ஓவியம்

206. *மதுரை நாயக்க மன்னர் மாளிகை*
கோட்டுரு வண்ணம் குலவிய காட்சிகள்
தஞ்சைக் கலைஞரும் தகவுடன் வளர்த்தனர்.

மதுரையை ஆட்சிசெய்த நாயக்க மன்னர்கள் மாளிகையின் ஒப்பனையாக எழுதச் செய்த கோட்டுருவும் வண்ணப்புனைப்பும் இணைந்த கலைத்துறை, புதியன புனைந்த பொற்பினால், தஞ்சைக் கலைஞரும் அக்கலையினைப் பெருமையுடன் வளர்த்தனர். 29

மதுரை சுவரோவியம்

207. *மாட மதுரைப் பொற்றா மரைத்தடம்*
சூழ்ந்த மண்டபம் சுவரோ வியம்பெறும்.

மாடங்கள் ஓங்கிய மதுரைப் பெருங்கோயில் பொற்றாமரைக் குளத்தைச் சூழ்ந்த மண்டப மதிற்சுவர் முழுவதும், நாயக்கர் கால வண்ணச் சுவரோவியத்தால் திகழும். 30

தஞ்சை ஓவியம்

208. *கண்ணன் வடிவும் காமன் உருவும்*
பன்னல மங்கையர் பருவத் தோற்றமும்
அனுமன் அடல்தரு அற்புதக் காட்சியும்
மன்னர் மராட்டியர் மகிழ்வுடன் வளர்த்ததால்
தஞ்சை ஓவியம் தனிப்பெயர் கொண்டதாம்.

கண்ணனின் பல்வேறுபட்ட வடிவங்களையும் காமனின் உருவினையும், பலவகைப்பட்ட மங்கையரின் பருவத் தோற்றங்களையும், அனுமனின் வெற்றித் திறங்களைக் காட்டும் அற்புதக்காட்சிகளையும் மராட்டிய மன்னர்கள் தஞ்சையில் மகிழ்வுடன் வளர்த்ததால், அக்கலைத்துறை தஞ்சை ஓவியம் எனத் தனிப்பெயர் கொண்டு நாட்டில் விளங்கியதாம். 31



(தஞ்சை ஓவியம்)

மரபியல்

10



௩௰. மரபியல்

இவ்வியலுக்கமைந்த இயைபு யாதெனின், இஃது ஓவியக் கலைநூலாதலின், நுதலிய கலைத்துறையெலாம் புலப்பட நிகழ்த்திய நெறியானே வழக்கியல் கூறிய முகத்தான் நூலின்வழி, சிறப்பு, எல்லை, பிறதேயக்கலைப்புணர்ப்பு ஆகியவற்றையும் மரபுவழி கூறிற்றாம்.

முதல் நூல்

209. முத்தமிழ்ச் சங்கம் முயங்கிய காலத்து
இத்தமிழ் நிலத்தில் இயங்கிய நூல்களுள்
ஓவியச் செந்நூல் ஒன்றாம் என்ப.

முத்தமிழ்ச் சங்கங்கள் முறையாக இயங்கிய காலங்களில் தமிழக வழக்கில் நிலைபெற்றிருந்த கலைநூல்களுள், ஓவியக் கலைக்கு விளக்கமாகப் புலமைசான்ற கலை வல்லானொருவனால் எழுதப்பெற்றதும், ஓவியச்செந்நூல் என்று பெயர் பெற்றிருந்தது மாகிய நூலொன்று, மக்கள் வழக்கிலும் நனி சிறந்ததென்று பண்டைச் சான்றோர் பகர்வர். (சாத்தனார் தமது காப்பியத்துள் கூறுவர்.) 1

அதன் திறம்

210. அதுவே,
கூத்தொடு ஒப்பனைக் குறித்தனர் கற்றனர்.

அந்நூலினையே, கூத்தும் ஒப்பனையும் ஆகிய கலைகளை வாழ்வியலாகக் குறித்து வாழ்ந்த மக்கள், கலைஞராய்த் திகழ்தற் குரியதாகக் கற்றுத் தேர்ந்திருந்தனர். "நாடக மகளிர்க்கு

நன்கனம் வகுத்த ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும், கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை ''யாம் மாதவி மடந்தை நாடகப் புலமையாற் சிறந்திருந்ததனை மணிமேகலை குறிக்கும். 2

வழிநூல்

211. *நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*
பாடல் சான்ற புலனெறி வழக்கினும்
சிவணிய ஓவியச் செந்நூல் மறைந்ததால்
இயங்குமிந் நூல்வழி என்பது மரபாம்.

உள்ளதும் இல்லதுமாகப் புனைந்த நாடகவழக்கினும், அறிவர் ஆக்கித்தந்த இலக்கிய வழக்கினும் கலந்து நிறைந்து விளங்கி நின்ற ஓவிபச் செந்நூல், கால வெள்ளத்தில் கரந்து மறைந்ததால், இந்நூல் அதன் வழிநூலாக இயங்கும் என்று அறிஞர் அமைத்துத் தந்த மரபின் வழி நிலைபெறுதற்காகும். 3

ஓவிய இலக்கு

212. *நடனம், நாட்டியம், தாண்டவம், நிருத்தம்*
இடனமை பரதம், இயலிசை கூத்தம்
இவையெலாம் ஓவிய இலக்கின் வழித்தாம்.

கூத்துக்கலையின் அங்கங்களாக தாள கால வகைபெற்று நின்ற ஆடல்களுள், கையும் காலும் விசித்தும் வீசியும் அசைத்தும் ஆடும் நடனமும், தாள கால, இசை இயையுமாறு நளிடனமுடன் ஆடும் நாட்டியமும், துள்ளலும் துடிப்பும் விதிர்ப்பும் காட்டி உடுக்கை யொலிக்கியைய அடியெடுத்தாடும் தாண்டவமும், நின்றும் இருந்தும் நெளிந்தும் மெய்வகையான் மென்மையாகக் காற்றில் அசைவுறும்

பூங்கொம்பு போல் பாடுற்றாடும் நிருத்தமும், அளவிட்ட அரங்கில், சுற்றியும் சுழன்றும் சாரிகையிட்டும், முகத்தானும் விரலானும் முத்திரையிட்டுக் கண்காட்டியாடும் பரதமும், இயலும் இசையும் கருத்தொடு இணைய நின்றாடும் கூத்தும் இவையெலாம் நிகழ்ச்சி யுடன் சேர்ந்திணைந்த நாடகமும் ஓவிய இலக்காகும் ஒப்பனை கற்பனை ஆகிய துறைகளை மரபாகக்கொண்டு அவ்வழிப் பெருகியதாகும். 4

நூல் வழங்குமெல்லை

213. குமரி விந்தம் குணகுட கடலிவை
எல்லை யாயினும் இன்றமிழ் நாட்டின்
மேவிய எல்லையே மிக்கோர் கொண்டது
ஓவியத் திறனுணர்ந் துணர்த்தினன் நன்றே.

தென்குமரித்துறை, வடவிந்தமலை, வங்கக்கடல், மேலைக் கடல் ஆகிய நாற்புற எல்லைகளே கலைகள் பல நிலவிய பண்டைத் தமிழகப் பெரு நிலத்திற்குரித்தாயினும், மொழிவழங்கு மெல்லை யென அறிவும் ஆற்றலும் மிக்கோர் அமைத்துக்காட்டிய வட வேங்கடம் தென்குமரி ஆயிடைப்பட்ட மூவேந்தர் நிலத்தகத்து நிலவி மரபுவழித் தொடர்ந்து நின்ற ஓவியத் திறனெலாம் உணர்ந்து, இந்நூல் வழங்குமெல்லையும் அவ்வாற்றான் நன்றமைய அமைத்து உணர்த்தினன்.

"வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" என்று பனம்பாரனார் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்துக் காட்டுதலான் நாட்டு எல்லை புலப்பாடுறும். 5

ஒப்பனைக்கலை

214\. கூத்தொடு நாடகம் குறித்த பாவையர்
வண்ண மகள்நெறி வரையும் கைத்திறன்
தொடரும் ஒப்பனைக் கலைவழித் தோன்றும்.

இயலும் இசையும் கூடினவழி நிகழும் கூத்தும், இவற்றொடு நிகழ்ச்சி தழுவிய நாடகமும் ஆடுதற்கமைந்த பாவையர்க்கு வேடம் பொருந்துமாறு ஒப்பனைசெய்யும் அணிமகளாகிய வண்ணமகள், ஓவியக் கற்பனைத்துறையெலாம் கற்றுத் தேர்ந்தாளாகிச் செய்யும் ஒப்பனைக் கலைத்தொழிலினைத் தொடர்ந்த மரபினைத் தொடர்ந்து, மகளிரின் மெய்யினும் முகத்தினும், வண்ணமிட்டு வரையும் தொய்யில் கோலமும் அவ்வழித் தோன்றியதாகும். 6

அழகின் கணிப்பு

215\. உறுப்பின் சிறப்பால் ஒப்பிடும் மாந்தரின்
கணிப்பின் தோற்றமே காமனும் இரதியும்.

ஆண் பெண்ணென அமைந்த மானுட அங்கங்கட்கமைந்து செழித்த வனப்பினை, இத்தகையது என்று ஓவியக்கலைஞன் ஒப்பின் மரபுவழி உருவாக எழுதிப் புலப்படுத்திய தோற்றமே காமனும் இரதியும் ஆகும். 7

திசைநில வோவியம்

216\. திசைநில வழக்கின் திறம்பெறு வோவியம்
வசையறு மரபின் வழங்குதல் நெறித்தே.

தமிழகத்தைச் சார்ந்து தொடர்ந்துள்ள தேயங்களில் மக்கள் வழக்கில் உயர்ந்துள்ள ஓவிய நுட்பங்களைத் தமிழகவோவியர் குற்றமற்ற மரபின் வழி ஏற்று வழங்குதல், சலை வளர்ச்சிக்குரிய தொரு இடனாகும். 8

அருகரோவியம்

217. அருள்நெறி காட்டிய அருகக் கலைஞர்
தமிழக வாழ்வில் தரமுடன் எழுதிய
ஓவிய மரபும் ஒன்றிய தாகும்.

ஆருயிர்கட்கு அன்புசெயும் அருள்நெறியை அறிவியலோடு காட்டிய சமணக்கலைஞர்கள் தமிழகத்தில் வாழ்ந்திருந்த பள்ளியிலும் பாழியிலும் தகுதிபெற வெழுதிய வண்ணவோவிய மரபும் தமிழக ஓவியக்கலையின் வளர்ச்சிக்கு ஒன்றியதாகும். 9

திசை நிலங்கள்

218. வங்க மராட வாகட வடுக
கலிங்க கன்னட ஒய்சள குப்த
மன்னர் வளர்த்த மரபமை ஓவியர்
வழங்கிய கைத்திறன் வகைபெறக் கொளற்காம்.

வங்கம், மராட்டியம், வாகடம், வடுகம், கலிங்கம், கன்னடம், ஒய்சளம், குப்தம் ஆகிய திசைநிலங்களின் பண்டைய மன்னர்கள் மாண்புடன் புரந்த ஓவியக் கலைஞர் தத்தமது நாட்டினர் விழைந்த

பொருள்நிறைந்த காட்சிகளை வண்ணக்கலைவழியே வகைபெற வகுத்துணர்த்திய கலைத்திறனை. ஏற்புழி இணைத்தாளும் உத்திவழி தமிழகக்கலைக்குப் புதுமைகள் புகுத்தும் மரபான் கொள்ளுதற்கு ஆகும். திசைநிலம் - திசைகளிலுள்ள தேயம். 10

மலைநாட்டு மரபு

219. மலைநாட் டகத்து மருவிய ஓவிய
வழிவரு வண்ணக் கோட்டோ வியம்தரு
வடிவும் கேரள மரபெனக் கொள்ளற்காம்.

மலைநாடெனும் கேரள நாட்டில் தொடர்ந்துள்ள ஓவியக்கலை வழித் தொடர்ந்த வண்ணக் கோட்டோவியங்கள் தருகின்ற வடிவ அமைப்புமுறைகள் கேரள மரபெனும் இயைபுடன் கலைஞர் ஏற்புழிக் கொள்ளத்தகும். 11

வடபுலவழி

220. வடவர் தேயம் வளர்த்திய வண்ண
நடைமிகு வோவியம் நயப்பதும் மரபாம்.

தென்னகமாகிய தமிழகத்தின் வடபுலமாகும் காசுமீரம், மொகலாயம் ஆகிய தேயத்தவர் நாளும் வளர்த்திருக்கும் வண்ணக் கொடி நிலை ஓவியத்துறைகளைத் தமிழகவோவியத் துறையொடு தரமுடன் சேர்க்கும் மரபும் பிறதுறை இணைப்பாகப் பொருந்தும். 11

கடல்வழி மரபு

221. *அலைகடல் வழியே தொலைமிகு நாடெனும்*
யவனம் சாவகம் சீனம் ஈழம்
எனுநன் னாட்டின் இயல்பமை வண்ண
வோவிய வழக்கும் மேவிய திறனாம்.

அலைகடல் வழியே அரும்பொருள் தந்தும் கொண்டும் இலங்கின கலம்தரு செல்வ வளமிது நாடுகளெனும் யவனம், சாவகம், சீனம், இலங்கை என்னும் நாடுகளின் இயல்போடு அவ்வந்நாட்டுக் கலைஞர் வளர்த்த வண்ணவோவிய வழக்கினைத் தெளிந்து ஏற்புழி பொருந்தக்கொள்வது தமிழகவோவியக்கலைத் திறனாகும். 13

மரபின் இயல்பு

222. *மரபுநிலை திரியினும் மன்னிய தொன்மை*
உரைபெறு மென்ப உலகியல் கண்டார்.

ஓவியக்கலைக்கமைந்த பழைய மரபுமுறை புதிய காலத்துப் புதுமைகளாலும், திசைநிலக் கலைத்தொடர்பானும் திரிந்ததாகத் தோற்றங் கொள்ளினும், பண்டைய தமிழகக் கலைஞன் பாங்குட னெழுதிய பழையவோவியங்கள் மதிப்பும், மாண்பும், புகழும் பெற்றுத் திகழுமென்று, உலகியலின் உண்மை நெறி கண்டார் கூறுவர். 14



ஒழிபியல்

11



கக. ஒழிபியல்

சான்றோர் மொழிக்கு இலக்கணமுரைத்த முறையானே, ஓவியக்கலைக்குமிலக்கணமுரைக்குமிடத்து ஒழிந்தன, அமைந்தன, ஏற்பன ஆகியவற்றை இவ்வியலால் உணர்த்திற்றாம்.



ஒழிபு உரைத்தல்

223. *மொழியிலக் கணமுறை முறைபெறு வழியே*
கலையிலக் கணத்தும் காட்டுவன் ஒழிபே.

தமிழ்மொழிக்கு இயல்நெறியே இலக்கணமமைத்துக்காட்டும் சான்றோர் வழக்கானே, ஓவியக்கலையிலக்கணத்தும் ஒழிபியல் நெறிமுறையான் கூறுவன். 1

எழுத்தின் ஆட்சி

224. *எழுதுதல் எழுத்தாம் அவ்வழி கைத்திறன்*
மிகுதலே வரைதல், மேவிய ஒப்பனை

பெருகவே சித்திரம், பிறங்கிய வண்ணம்
மருகவே ஓவியம் மாண்பமை பெயர்களாம்.

பொருள் புலப்பாடுற எழுதியமைத்தல் எழுத்தாம். எழுத்தின் திறனால் வடிவமைத்துக் காட்டல் வரைதல். ஒப்பனையும் கற்பனையும் சேர்ந்ததாக வரைந்த காட்சி சித்திரம். வண்ண மிட்டு இயற்கை நிரம்பவெழிலூட்டி அமைத்த கவர்ச்சி நிலையே ஓவியம். இன்னன தொழிலாலும் திறனாலும் அமைந்த பெயர் களாம்.

எழுதும் தொழிலின் பயிற்சிமுதிர் ஆட்சியே ஓவியக்கலை என்பதுமாம். 2

சித்திரம்

225. *சித்திர மென்பது சித்தரித் தெழுதும்*
உத்தியான் குறித்த ஒப்பனைப் பெயரே.

சித்திரமென்பது, ஒப்பாம் வடிவினை வரிநிலையால் அழகுபெற அமைத்தெழுதும் உத்தியான் கற்பித்துக் குறித்த பெயராகும். 3

புதுமை புகுதல்

226. *நாட்டில் வளர்வுறும் நற்றிறக் கைத்திறன்*
கூட்டிடல் ஓவியக் குறிப்பின் நெறித்தாம்.

****

உலகியலோடு ஒன்றிப்பெருகும் தமிழக வழக்கில் வளர்ச்சியுறும் புதுமைகளை, கலைஞன் ஏற்புழி இணைத்தல் ஓவியக்கலை வளர்ச்சிக்குரிய நெறியாகும். 4

வழக்கமை புதுமை

227. புனையும் தொழிற்குப் புதுமைகள் புகுத்தல்
வரைவில கால வகையி னான.

புனைந்து அழகூட்டும் ஓவியக்கலைக்குரிய தொழிற்குப் பொருந்திய புதுமைகளை மனத்தானறிந்து கைத்திறனாற்புகுத்தி அழகை மிகுத்து வகைபெறக்காட்டும் அறிவுத்திறன் அளந்து கூறுதற்கமைந்ததல்ல. காலச்சூழலில் உயங்கும் மக்கள் விருப்பிற் கேற்ற புதுமைக் காட்சிகளை வகைபெற எழுதுதல் கலையியல்பாம்.

நாகரிகமெனும் போர்வையானும், நனிசெல்வச் செருக்கானும், மனம் போனவழியெழும் அவாவினானும் மக்கள் மயங்கி நிற்கும் நெறியே காலச்சூழலாம்.

கலையில் புதுமைகளை வகையறிந்து புகுத்தல் வளரும் கால வழக்கொடு பொருந்தியதாம். 5

நுண்கலை

228. உலகிய லியல்பொடு ஒப்பிலா கற்பனை
மாண்பமைக் கலையே மன்னிய நுண்கலை.

உலகில் மக்களும் கலைஞரும் வளம்நிறைந்த உளத்தின் இயல் பெனும் நுண்மான் புலத்தொடு உருவாக்கிய கற்பனை என்னும் கவினமை மாண்பினைப் பெற்றொளிரும் நற்கலையே நுண்கலை என்னும் பெயரான் வளர்ந்து எழிலொடு விளங்கும் ஓவியமாம். 6

வண்ணமும் நிறமும்

229\. *வண்ண மென்பது விரவிய தோற்றம்*
அதனதன் திண்மை நிறமெனப் பெறுமே.

வண்ணமென்று கூறப்பெறுவது, கட்புலனாம் காட்சிக்கமைந், பொதுநிலைத் தோற்றப்பொலிவாம். விண்ணிலும் மண்ணிலும் உள் பொருள்கட்கமைந்த அதனதன் பொலிவுத்திண்மையே காட்சியா நிறம் எனப்பெயர்பெறும்.

வழக்கின் இலக்கு

230\. *தொன்னில மாக்கள் நுண்ணிதி னெழுதிய*
பன்னிற வரியும் உருவும் பான்மையின்
பெருகிய ஓவியத் திறனும் காலம்
வழங்கிய புதுமையும் பொதுமையும் வழக்க

முன் தோன்றிய நிலத்தில், கல்லக வாழ்வில், அறிவியல் திற பெறாது வாழ்ந்த மக்கள், பாறைகளில் வரைந்து காட்டிய நிறங்களினாலாகிய குறிப்பமைந்த கோடுகளும் உருவங்கள அதன் வழித்தொடர்ந்து நாட்டில் வளர்ச்சியடைந்து விளங் ஓவியத்திறனும், காலவழக்கில் கலைஞர் மரபுடன் வழங்கிய கல புதுமைகளும், பிறவாறிணைந்த பொதுநிலைக் கலைத்துறைக வழக்கெனும் இயலின்கண் வகுத்துக் காட்டுதற்கமைந் இலக்குகளாகும்.

கலைக்கு மரபு

தொன்மை வழிநெறி துலங்கிய வெல்லை
வரன்முறை ஆயவை மரபிற் குரித்தெனும்
கொள்கைச் சார்புடன் கலைஞன் காட்டிய
துமைகள் போற்றல் பொருந்திய தென்ப.

னைய கலைஞர் காட்டிய கலைவழியும், தொல்காப்பியம் நெறிமுறையும், கலைவழங்கியதற்கு அறிஞர் காட்டிய லையும், இன்னசார்பின் இன்னவகைத்தெனும் வரன் ஆகியவை மரபு கூறுதற்கமைந்த நெறியாகுமெனும் வினைச்சார்ந்த திட்டமுடன், காலம் வழங்கிய கலைஞர்கள் வழுதிக்காட்டிய புதுமைகளையும் போற்றுதல், பொருந்திய களுக்குரிய மரபாகுமென்பர். 9

பொருள் மெய்ப்பாடு

மெய்ப்பா டென்பது உய்ப்போர்க் குரித்தெனும்
பர்திணைக் கன்றி ஒழிந்த பொருள்பெறும்
செழிப்பு திளைப்பு நிலைப்பு துலக்கம்
சிவு மலர்ச்சி இளைப்பு முகைப்பு
வும்பல திறனமை ஏற்புறு காட்சிகள்
கைபெறு கவின்கலைக் குரித்தெனக் காண்ப.

மெய்யின்கண் நிகழும் தோற்றமாற்றமே மெய்ப்பா ி, ஏனைய அஃறிணைப் பொருள்கள் பெறுகின்ற நிலை ளாகிய செழிப்பு முதலாகிய தோற்றமாற்றங்களைப்பெறும் காட்சிகள் அழகுக் கலைகளாகும் ஓவிய சிற்பக்கலை ருந்தியதாகுமென்பதனைக் கலைஞர் காண்பர். 10

கலையளவு

233. கலைக்கு இலக்கணம் காண்பது கணிப்பில்
மலைக்கு அளவுகாண் மாண்பினை யொக்கும்.

கலைகட்கு இலக்கணம் வகுத்துக் காண்பது என்னும் வழக்கு கணித்தற்களவுபெறாத வகையில் பல்பொருளும் பல்லுருவும் கொண்டுயர்ந்து படர்ந்து நிற்கும் பெருமலைக்கு திட்ட அளவு காணும் அரிய முயற்சியினை ஒத்ததாகும். 11

இணைநிலைத் தேற்றம்

234. பதினோ ரியலாற் பகர்ந்த விலக்கணம்
ஓவியக் கலைக்கே யொன்றிய தாயினும்
மேவிய சுதையும் சிற்பமும் துலக்கும்
கலையிலக் கணமும் காணுதற் காகும்.

பால்பெறவகுத்த பதினோரியலானும் கூறிய விலக்கணம் ஓவியக்கலைக்கே பொருந்தியதாயினும், இனச்சார்புடன் ஒன்றிய சுண்ணத்தாலாக்கும் சுதைக் கலைக்கும், கற்களில் காட்டும் சிற்பக் கலைக்கும் அமைந்த கணிப்பும் குறிப்பும் இதன்கண் துலக்க முறுதலைக் கலைஞன் காணுதற்குரித்தாகும். 12

முற்றும்